Registered as a News Paper

# மன்னா

பொழிவு - 12
குவிப்பு - 06
பக்கங்கள்- 20
விலை ரூபா 40.00
யூன் - 2009
(ISSN 1800-2641)

MANNA மன்னார் மறைமாவட்டத்தின் தமிழ் கத்தோலிக்க மாதாந்தப் பத்திரிகை மன்னா

"Registered in the Department of Posts of Sri Lanka under No. QD/131/News/2009

THE TAMIL CATHOLIC MONTHLY PUBLISHED BY THE DIOCESE OF MANNAR - Pozhivaham, Manna Paper Office, No. 31/2, Hospital Road, Mannar, Sri Lanka.
Telephone No : 023-2251161/ 060-2233276, Fax No - 023-2251161, E. Mail : nesanmnr@gmail.com

## மோதல் நடைபெறும் பகுதிகளிலிருந்து வெளியேறும் மக்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்துங்கள்!

## திருத்தந்தை கோரிக்கை

### இலங்கை நாட்டை மடு அன்னையிடம் ஒப்படைத்து திருத்தந்தை செபித்தார்

இலங்கையில் மோதல் நடைபெறும் பகுதிகளிலிருந்து வெளியேறும் மக்களினது பாதுகாப்பை உறுதிப்படுத்துமாறும் அந்த மக்களுக்கு மிக அவசரமாகத் தேவையான உணவு மற்றும் மருத்துவ வசதிகளை வழங்குமாறும் திருத்தந்தை 16வது ஆசீர்வாதப்பர் சம்மந்தப்பட்ட தரப்புகளிடம் கோரிக்கை விடுத்துள்ளார். கடந்த மே மாதம் 17ம் திகதி வத்திக்கான் பேதுரு சதுக்கத்தில் நடைபெற்ற வாராந்த செபக்கூட்டத்தில் உரையாற்றும்போதே அவர் இந்த அவசர வேண்டுகோளை விடுத்துள்ளார்.



இலங்கையில் சமாதானமும் நல்லிணக்கமும் உருவாகத் தான் செபிப்பதாகவும் மோதலில் சிக்குண்டு உயிரிழந்த ஆயிரக்கணக்கான சிறுவர்கள், பெண்கள் மற்றும் வயோதிபர்களின் ஆத்மசாந்திக்காகத் தான் செபிப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

அத்துடன் இலங்கையில் யுத்தம் நடைபெறும் பகுதிகளில் உள்ள மக்களின் பாதுகாப்புக்கு உத்தரவாதம் அளிக்கவேண்டுமென கடந்த சில தினங்களுக்கு முன்னர் தான் விடுத்த வேண்டுகோளை ஏற்று அதற்கேற்ப குரல் கொடுத்த ஐ.நா. பாதுகாப்புச் சபையின் நடவடிக்கையை சம்மந்தப்பட்ட இரு தரப்பும் கருத்தில்கொள்ள வேண்டுமெனவும் கோரியிருந்தார். மேலும் கத்தோலிக்க அமைப்புக்கள் உட்பட மனிதாபிமான அமைப்புக்கள் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உணவு மற்றும் மருத்துவ உதவிகளை வழங்க வேண்டுமெனவும் திருத்தந்தை கேட்டுள்ளார்.

"இந்த அன்பான இலங்கை நாட்டை, அனைத்து இலங்கையர்களாலும் அன்பு செய்யப்பட்டு வணங்கப்படும் மடு அன்னையின் தாய்மைநிறை பாதுகாவலில் ஒப்படைக்கிறேன். இதேவேளை இலங்கைத் தமிழர்களின் பிரச்சினை தீர்க்கப்பட்டு, நிரந்தர சமாதானம் ஏற்பட வேண்டுமென செபிக்கிறேன்" எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

### 2009 யூன் 19 தொடக்கம் 2010 யூன் 11 வரை

## குருக்களின் ஆண்டு பிரகடனம்

திருத்தந்தை 16ம் பெனடிக்ற் அவர்கள் குருக்களுக்கான ஒரு வருடத்தைப் பிரகடனப்படுத்தியுள்ளார். இது இவ்வருடம் யூன் மாதம் 19ம் நாள் இயேசுவின் திருஇருதயப் பெருவிழாவுடன் ஆரம்பமாகி அடுத்த வருடம் 2010ம் ஆண்டு யூன் மாதம் 11ம் திகதி இயேசுவின் திரு இருதயப் பெருவிழாவுடன் நிறைவுறும். இந்த விசேட ஆண்டு ஆர்ஸ் நகரக் குருவான புனித ஜோண் மரிய வியான்னியுடைய விண்ணகப் பிறப்பின் 150ம் ஆண்டு நிறைவுடன் ஒன்றிணைந்ததாயுள்ளது. இது அனைத்துக் கத்தோலிக்க குருக்களினதும் மறையறிவிப்புப் பணியைப் பலப்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது என்று திருத்தந்தை கூறினார். குருக்களின் ஆண்டு தொடர்பான விரிவான விளக்கங்கள் 7ம் பக்கத்தில் இடம்பெற்றுள்ளன.

### வன்னியில் யுத்தப் பிரதேசத்தில் மக்கள் பணியாற்றிய யாழ் மறைமாவட்டத்தைச் சேர்ந்த இளம் குரு

## அருட்பணி. சரத்ஜீவன் இறைபதம்



யாழ் மறைமாவட்டத்தைச் சேர்ந்த அருட்பணியாளர் மரியாம்பிள்ளை ரி. சரத்ஜீவன் (41 வயது) அவர்கள் கடந்த மே மாதம் 18ம் திகதி வன்னியின் யுத்தம் கடுமையாக நடைபெற்ற பகுதியிலிருந்து இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதியை நோக்கி இறுதியாக வெளியேறிவந்துகொண்டிருந்த மக்களோடு சேர்ந்து வன்னியிலிருந்து வந்துகொண்டிருந்தபோது மாரடைப்பால் காலமானார்.

வன்னியில் இறுதி மட்டும் தங்கியிருந்து பெரும் மனித அவலத்திற்குள் வாழ்ந்த மக்களுக்கு பணிசெய்துகொண்டிருந்த இந்த இளம் குருவின் மரணம் ஈழத்துத் தமிழ்த் திருச்சபையில் அதிர்ச்சியலைகளை ஏற்படுத்தியுள்ளது.

## மேதகு கறல்ட் பெறேரா குருநாகல் ஆயராக நியமனம்



கடந்த மே மாதம் 14ம் திகதி இலங்கைக்கான வத்திக்கான் தூதராலயத்தால் வெளியிடப்பட்ட செய்திக்குறிப்பில், "திருத்தந்தை 16ம் பெனடிக்ற் அவர்கள் குருநாகல் ஆயர் மேதகு றேமன்ட் பீரிஸ் ஆண்டகை அவர்களின் இராஜனாமாக் கடிதத்தை ஏற்றுக்கொண்டு காலி ஆயராக இருக்கும் மேதகு கறல்ட் பெறேரா ஆண்டகை அவர்களை குருநாகல் மறைமாவட்டத்தின் புதிய ஆயராக நியமித்துள்ளார்." என தெரிவிக்கப்பட்டுள்ளது. கறல்ட் ஆண்டகைக்கு எமது வாழ்த்துக்களும் செபங்களும்.

## கோடி அற்புதரான புனித அந்தோனியாரே எங்களுக்காக வேண்டிக்கொள்ளும்!

யூன் மாதம் 13ம் திகதி புனித அந்தோனியார் திருவிழாவைக் கொண்டாடும் அனைவருக்கும் மன்னாவின் திருவிழா வாழ்த்துக்கள்!



## அமதிகள் இருவரின் குருத்துவ திருநிலைப்படுத்தல்

அமலமரித்தியாகிகள் சபையைச் சேர்ந்த அருட்சகோதரர்கள் மெனோ பஸ்ரிஜயந்த மற்றும் இயூஜின் அமலராஜ் ஆகியோர் முறையே மன்னாரிலும் யாழ்ப்பாணத்திலும் குருக்களாகத் திருநிலைப்படுத்தப்படவுள்ளனர்.



அருட்பணியாளர் பஸ்ரிஜயந்த



அருட்பணியாளர் இயூஜின்அமலராஜ்

பள்ளிமுனைப் பங்கைச் சேர்ந்த அருட்சகோதரர் மெனோ பஸ்ரிஜயந்த அவர்கள் எதிர்வரும் யூன் மாதம் 06ம் திகதி காலை 10.30 மணிக்கு மன்னார் புனித செபஸ்தியார் பேராலயத்தில் மன்னார் ஆயர் மேதகு இரா. யோசேப்பு ஆண்டகை அவர்களால் திருநிலைப் படுத்தப்படுவார்.

அருட்சகோதரர் இயூஜின் அமலராஜ் அவர்கள் எதிர்வரும் யூன் மாதம் 18ம் திகதி காலை 10.30 மணிக்கு யாழ் புனித அடைக்கல அன்னை ஆலயத்தில் யாழ் ஆயர் மேதகு தோமஸ் சௌந்தர நாயகம் ஆண்டகை அவர்களால் திருநிலைப்படுத்தப்படுவார்.

பணிக்களத்தில் காலடி பதிக்கும் புதிய குருக்களுக்கு மன்னாவின் மனம் நிறைந்த வாழ்த்துக்களும் செபங்களும். புதிய குருக்களின் வாழ்க்கை வரலாறு பற்றிய தகவல்களை 4ம் பக்கத்தில் காணலாம்.

# மன்னா
## மனப்பொழிவு

## நலிந்த நம் மக்களுக்கு நம்பிக்கை அளிப்போம்!

உடலாலும் உள்ளத்தாலும் உடைபட்டு, வீடு, வாசல், பொருள் பண்டம், உறவுகள், தொடர்புகள் என அனைத்தையும் இழந்து நிர்க்கதியாக நலன்புரி நிலையங்களில் தங்கவைக்கப்பட்டுள்ள நம் மக்கள் இன்று மனம் சாய்ந்த நிலையில் நிற்கின்றனர்.

"மரம் சாய்ந்து போனால் விலையாகலாம்
மலை சாய்ந்து போனால் சிலையாகலாம்
மலர் சாய்ந்து போனால் சரமாகலாம்
மனம் சாய்ந்து போனால் என்னவாகலாம்?
ஆம் மனம் சாய்ந்து போனால் ..... என்ன செய்வது?

வன்னியில் கடுமையான யுத்தமுனையில் அகப்பட்டிருந்த இந்த மக்கள் மிகப்பெரும் மனிதப் பேரவலத்தைச் சந்தித்தனர். பசி, பட்டினி, எறிகணைத் தாக்குதல், பதுங்குக்குழிக்குள் வாழ்க்கை, காயப்படுதல், அங்கவீனராதல், கண்முன்னால் குடும்ப உறுப்பினர்கள் காயப்பட்டு மரணமடைதல், தமக்கு எப்போது மரணம் ஏற்படுமோ என்ற மரண பயம், இளைஞர், யுவதிகளை வலிந்து இழுத்துச் சென்று சண்டையில் ஈடுபடுத்தியதால் ஏற்பட்ட மன அழுத்தங்கள் என அனைத்துமே நீங்காத மனக்காயங்களை ஏற்படுத்தியுள்ளன. மன அழுத்தம் கணனி வைரஸ் போன்றது. மெல்ல மெல்லப் பரவி மனதின் நிம்மதியையும், சந்தோசத்தையும் கெடுக்கும். பிறகு உடன் வாழ்பவரின் நிம்மதியையும் ப்றிக்கும். நாளடைவில் நம் வாழ்க்கை முழுவதையுமே அழித்துவிடும்.

இந்தப் பாதிப்பின் பரிணாமங்கள் பலவிதம். பாதிக்கப்பட்ட ஒவ்வொருவரின் ஆளுமை, மனநிலை, பாதிப்பை எதிர்கொள்ளும் ஆற்றல், அனுபவங்கள் போன்றவற்றிற்கேற்ப இவை வேறுபடுகின்றன. இந்தப்பாதிப்பானது சிலரை சோகங்களோடு சோர்ந்து கிடக்கச்செய்கிறது. சிலரை வீறுகொண்டு எழுந்து முன்னோக்கி நடைபோட வைக்கிறது.

பல்வேறு பாதிப்புக்களினால் மனக்காயங்களைச் சுமந்தவர்களாக நலன்புரி நிலையங்களில் தங்கவைக்கப்பட்டுள்ள இந்த மக்கள் இன்று விரக்தியின் விளிம்பில் நிற்கின்றார்கள். தமது எதிர்காலத்தைக் கேள்விக்குறியோடு பார்க்கிறார்கள். இத்தகைய நிலையில் உள்ள மக்களுக்கு இன்று உணவும் உடையும் உறையுளும் மட்டும் கொடுத்தால் போதாது. மாறாக அவர்களுக்கு எதிர்காலம்பற்றிய நம்பிக்கையை ஏற்படுத்த வேண்டும். இன்றைய காலத்தின் கட்டாயப் பணி நம்பிக்கையை அளிக்கும் நற்பணியே.

யப்பான் நாடு இரண்டாம் உலக மகா யுத்தத்தில் அணுகுண்டால் சீரழிக்கப்பட்ட நாடு. இலட்சக்கணக்கான மக்கள் அவலச்சாவை அடைந்தனர். யப்பானியர் என்ன செய்தனர்? அழுது கொட்டிக்கொண்டு சுருண்டு படுத்தனரா? அந்த அழிவையே பாரிய அபிவிருத்திக்கான வாய்ப்பாகக் கண்டனர். இழப்புக்களையே சிந்தித்துக் கொண்டிருக்காமல் ஆகவேண்டிய காரியத்தில் களமிறங்கினர். அதன் விளைவு நவீன வளர்ச்சி பெற்ற நாடாக இன்று யப்பான் திகழ்கிறது!

சக்திமிக்கது அணுகுண்டல்ல, அணுகுண்டை அங்கீகரித்த மனித மனமும், அந்த அழிவிலிருந்து வெற்றிகரமாக மீள முடிந்த மன உறுதியுமே.

நடந்தவை நடந்தவையாக இருக்கட்டும். இறந்த காலத்தை மாற்ற மனிதனால் முடியாது. நிகழ்காலத்தையும் எதிர்காலத்தையும் எண்ணிச் செயலில் இறங்க வெண்டும். "முள்ளில்கூட பூக்கள் உண்டு. முடியும் என்ற சொல்லில்தான் வாழ்க்கை உண்டு" என்றார் கவிஞர் மேத்தா.

எனவே நலிவுற்ற நிலையில் எதிர்காலத்தைக் கேள்விக்குறியோடு நோக்கும் நம் மக்களுக்கு இன்றைய அவசரத்தேவை அவர்களுடைய வாழ்க்கையில் நம்பிக்கையை ஊட்டுவதே. இதையே மத அமைப்புக்களும், தொண்டு நிறுவனங்களும் தமது முக்கிய பணிகளில் ஒன்றாகக் கொள்ள வேண்டும் என வேண்டுகோள் விடுக்கின்றோம்.

மீண்டும் மறுமடலில் வந்து சந்திக்கும்வரை
அன்புடன், அருட்பணியாளர் தமிழ் நேசன்,
பதிப்பாசிரியர்



# வாசகர் எண்ணங்கள்

## சீறிப்பாய்ந்து பறந்து வரும் மன்னா



மன்னார் எனும் மண்ணில் பிறந்தவன் நீ.....!
வளர்பவன் நீ.....! வாழ்பவன் நீ.....!

கிறிஸ்தவர்கள் மனதில் சீறிப் பாய்ந்து பறந்து வந்து
நல்விடயங்களை மனதில் பதித்தவனாய்
பாய்ந்து செல்லும் மன்னாவும் மன்னவனும் நீயே....
உனக்குள்ள விவேகம் ஒரு சிறு குருவிக்குக்கூட வராது...

நீ நற்காலம் பார்ப்பதில்லை, போர்க்காலம் பார்ப்பதில்லை.
மழைக்காலம் பார்ப்பதில்லை, கோடை காலம் பார்ப்பதில்லை.



இவற்றைப் பாராது சீறிப்பறந்து சிறகடித்து
நீ செய்யும் சேவை அளப்பெரியது.
நீ வாழ்க மன்னா, வளர்க மன்னா
நன்றி... நன்றி... நன்றி...

*க. கிறிஸ்ரி நிஷாந்தன்*
*புனித பத்திரிசியார் கல்லூரி, யாழ்ப்பாணம்*

## அறுபடா ஆலமரமாய் கிளைகள் பல பரப்பு

கிழக்குச் சூரியன் உலகிற்கு விடியலை வழங்குகிறது. மனதிற்கு மகிழ்ச்சியை அளிக்கிறது. மன்னாவே உன்னைத் தேடிப்படிப்பவர் மனங்களில் நீயும் மகிழ்ச்சியை ஊட்டுகின்றாய்.

மன்னாவே, நீ விரும்பிப் படிக்கும் பல ஆக்கங்களையும் கருத்துக்களையும் தருகின்றாய். நீ வாழையடி வாழையாக இன்னும் பல வருடங்கள் அறுபடாத ஆலமரமாய் கிளைகள் பல பரப்பி, நீண்ட உனது பணி அவனியிலே பவனி வர, மன்னாவே உன்னை மாதார வாழத்துகின்றேன்.

*பி. வதனா, புனித நீக்கிலார்ஆலயம்*
*வாழ்க்கைப்பெற்றான் கண்டல், அளவக்கை.*

## கோடி கேடயம் சூட வாழ்த்துகின்றேன்

எனதருமை மன்னாவே,
திருச்சபைக்குள் என் தேடலைப் பதித்தாய்
தேடலால் என் ஆன்மீகம் வளர்த்திட்டாய்.
உன் வரவை எதிர்பார்த்துக் காத்திருந்தேன்.
என் கரம் நீ வர என் தவம் நான் செய்தேன்?
அன்று அப்பமான மன்னாவைச் சுவைத்தோர் அழிந்தனர்
இன்று உன்னைச் சுவைத்ததால் அறிவொளியில் வளர்கின்றோம்
எம் அறிவை வளப்படுத்த பிறந்த மன்னாவே
நீ கோடி கேடயம் சூட வாழ்த்துகிறேன்.

*யே. தனுசியா, குட்செட் றோட், தோணிக்கல், வவுனியா*

## காலங்கள் கடந்தும் நீ வாழவேண்டும்

மாதம் ஒருமுறை வந்தாலும் ஓராயிரம் அறிவூட்டும் செய்திகளைத் திரட்டித் தரும் அழகிய மன்னாவே, 20 பக்கங்களைக் கொண்ட நீ இருபதாயிரம் மாணவர்களின் அறிவைப் பெருக்குகின்றாய். சிந்திக்க வைக்கும் அதே கணமே சிரிக்க வைக்கும் ஆற்றலைக் கொண்ட மன்னாவே, நீ பல்லாயிரம் காலங்கள் கடந்தும் வாழ வேண்டும், உன் புகழ் எங்கும் ஆழவேண்டும்.

*சி. கிறிஸ்ரீன்ஜென்சி , வீரபுரம், நேரியகுளம்.*

## அந்தக் காலங்கள் இனியும் வருமா?

மாதாவின் துணைவேண்டி மருதமடுப் பகுதியிலே ஆண்டுகள் தோறும் பெருவிழாக் கொண்டாடி திருமறை விளக்கங்கள், தியானங்கள், திருவருட்சாதனங்கள் பெற்று இருள்சூழ் வாழ்வினை அகற்றி அருள்நிறைந்து ஆனந்த வாழ்வு பெற்றோம்.

விடுமுறைகள் எப்போ வரும் என்று காத்திருப்போம். மடுப்பகுதியில் திருக்குடும்ப உறவில் மகிழ்ந்திருக்கப் பாத்திருப்போம். ஆயிரம் ஆயிரம் மக்களைச் சந்தித்து அகமகிழ்ந்து அருள் பாலித்திட்ட அந்தக் காலங்கள் இனியும் வருமா என ஏங்குகின்றோம். அந்தோனி லெம்பேட், வங்காலை 02.

# ஊடக சுதந்திரம் பாதுகாக்கப்பட வேண்டும்

(சர்வதேச பத்திரிகை சுதந்திர தினம் கடந்த மே மாதம் 3ம் திகதி கொண்டாடப்பட்டது. அதையொட்டி இச்சிறப்புக் கட்டுரை இடம்பெறுகிறது)

உலகலாவிய ரீதியில் சர்வதேச பத்திரிகை சுதந்திர தினம் கடந்த மே மாதம் 3ம் திகதி கொண்டாடப்பட்டது. அச்சுறுத்தல், கடத்தல், கொலைப் பயமுறுத்தல், படுகொலை செய்யப்படுதல் எனப் பல்வேறு பிரச்சினைகளுக்கு மத்தியில் பத்திரிகையாளர்கள் தமது பணியினை முன்னெடுத்துச் செல்கின்றனர். கைகளில் எழுதுகோலைத் தாங்கியவண்ணம் நிராயுதபாணிகளான பத்திரிகையாளர்கள் துப்பாக்கி முனையில் பயமுறுத்தப்படுவதும், கொலைசெய்யப்படுவதும், கடத்தப்படுவதும் மனிதாபிமானமற்ற செயல் மாத்திரமல்ல ஜனநாயகத்தையே குழிதோண்டிப் புதைக்கும் செயலுமாகும்.

இதுபற்றி சகல மட்டங்களிலிருந்தும் உரத்துக் குரல் கொடுக்கப்பட்டபோதும் நடைமுறையில் பத்திரிகையாளர்கள் பாதுகாப்பற்றவர்களாகவே தமது பயணத்தைத் தொடர்கின்றனர். "ஏறச்சொன்னால் எருதுக்குக் கோபம். இறங்கச்சொன்னால் முடவனுக்குக் கோபம்" என்பதுபோல சகல தரப்பினரதும் வசை மொழிக்கும் கண்டனத்திற்கும் பத்திரிகையாளர்கள் இலக்காகிக்கொண்டிருக்கின்றனர். அச்சுறுத்தல் காரணமாக பெரும்பாலான பத்திரிகையாளர்கள் நாட்டைவிட்டு வெளியேறியுள்ளனர். பலர் அரசியல் பாதுகாப்பு நிலைவரங்களைப்பற்றி எழுதுவதைக்கூட நிறுத்திவிட்டனர். ஊடகவியலாளர் ரிச்சாட் டி சொய்ஸா தேவிஸ் குறுகேயிலிருந்து அண்மைக்காலம் வரை பல பத்திரிகையாளர்கள் கொல்லப்பட்டுள்ளனர்.

1990ஆம் ஆண்டு பெப்ரவரி 18ஆம் திகதி ரிச்சட் டி சொய்ஸா சித்திரவதை செய்யப்பட்டு சுட்டுக்கொல்லப்பட்டார். பிரபல வானொலி அறிவிப்பாளர் கே. எஸ். ராஜா கொல்லப்பட்டார். 1999ஆம் ஆண்டு செப்டெம்பர் 7ஆம் திகதி சட்டன ஆசிரியர் ரோஹன குமார கொலைசெய்யப்பட்டார். 1999ஆம் ஆண்டு நவம்பர் 2ஆம் திகதி நடராஜா அற்புதராஜா கொலைசெய்யப்பட்டார். 2000ஆம் ஆண்டு ஒக்டோபர் 19ஆம் திகதி இராணுவ உயர் பாதுகாப்பு வலயத்திற்குள் வைத்து மயில்வாகனம் நிமலராஜன் சுட்டுக்கொலை செய்யப்பட்டார்.

2004ஆம் ஆண்டு மே 31இல் அய்யாத்துரை நடேசன் மட்டக்களப்பில் வைத்து சுட்டுக்கொலை செய்யப்பட்டார். 2004ஆம் ஆண்டு 16ஆம் திகதி பால நடராஜா ஐயர் கொழும்பில் வைத்து சுட்டுக்கொல்லப்பட்டார். 2005ஆம் ஆண்டு ஏப்ரல் 28ஆம் திகதி பிரபல பத்திரிகையாளர் தராக்கி என அழைக்கப்படும் தர்மரட்ணம் சிவராம் கொழும்பில் பம்பலப்பிட்டியில் வைத்து கடத்தப்பட்டு கொலைசெய்யப்பட்டார்.

2005ஆம் ஆண்டு ஓகஸ்ட் 12ஆம் திகதி தமிழ் வானொலி அறிவிப்பாளர் ரேலங்கி செல்வராஜா கொழும்பில் வைத்து சுட்டுக்கொல்லப்பட்டார். 2006 ஆம் ஆண்டு ஜீலை 2ஆம் திகதி தெகிவளையில் வைத்து சம்பத் லக்மல் டி சில்வா சுட்டுக்கொல்லப்பட்டார். 2006ஆம் ஆண்டு ஜனவரி 24ஆம் திகதி சுப்ரமணியன் சுகிர்தராஜன் திருகோணமலையில் சுட்டுக்கொல்லப்பட்டார். 2006ஆம் மே 2ஆம் திகதி யாழ் உதயன் பத்திரிகை அலுவலகத்தில் பணியாற்றிய சுரேஷ் குமார் மற்றும் ரஞ்சித் குமார் ஆகிய இருவரும் கொல்லப்பட்டனர். 2006 ஆம் ஆண்டு ஆகஸ்ட் 20ஆம் திகதி நமது ஈழநாடு பத்திரிகையின் நிர்வாகப் பணிப்பாளர் சின்னத்தம்பி சிவமகாராஜா யாழ்ப்பாணத்தில் சுட்டுக்கொல்லப்பட்டார். 2006ஆம் ஆண்டு ஏப்ரல் 16ஆம் திகதி நிலம் சஞ்சிகை ஆசிரியர் சந்திரபோஸ் சுதாகரன் வவுனியாவில் சுட்டுக்கொல்லப்பட்டார். 2007ஆம் ஆண்டு ஆகஸ்ட் முதலாம் திகதி சகாதேவன் நிலக்ஷன் யாழ்ப்பாணத்தில் சுட்டுக்கொல்லப்பட்டார். 2008ஆம் ஆண்டு மே 28 ஆம் திகதி சண்டே லீடர் ஆசிரியர் லசந்த விக்கிரமதுங்க கொழும்பில் படுகொலை செய்யப்பட்டார்.

பத்திரிகையாளர் திஸ்ஸநாயகம் ஒரு வருடத்திற்கும் மேலாக தடுத்துவைக்கப்பட்டுள்ளார். அண்மையில் சுடர் ஒளி ஆசிரியர் ந. வித்தியாதரன் கைதுசெய்யப்பட்டு தடுத்துவைக்கப்பட்டு பின்னர் எவ்வித குற்றச்சாட்டுகளும் சுமத்தப்படாத நிலையில் விடுதலை செய்யப்பட்டுள்ளார்.

இவ்வாறு தொடராக பத்திரிகையாளர்கள் கொல்லப்படுவதும் பயமுறுத்தப்படுவதும், தடுத்துவைக்கப்படுவதும் தொடர்ந்துகொண்டிருக்கிறது. ஆனால் இச்சம்பவங்களுக்கு காரணமானவர்கள் இதுவரை நீதியின்முன் நிறுத்தப்படவில்லை. இதனால் தொடராக தமது சகாக்களின் பிரிவுத்துயர் தணியும் முன்பே இன்னொரு இழப்பின் சோகத்தையும் சுமக்கவேண்டிய துர்ப்பாக்கிய நிலையில் இலங்கை ஊடகத்துறை உள்ளது.

ஆரம்பத்தில் பெரும்பாலும் தமிழ் ஊடகவியலாளர்கள்மீது படிந்த இனந்தெரியாதோரின் கொலைக்கரங்கள் இன்று ஒட்டுமொத்த ஊடகத்துறையினரையும் தமது பிடிக்குள் இறுக்கி உயிரைக் குடிக்கத் தொடங்கியுள்ளன. அதேபோல் 'பயமுறுத்தல்' 'வன்முறை' என்பனவும் இனம், மொழி, மதம் கடந்து அனைத்து ஊடகவியலாளர்கள்மீது இனந்தெரியாத மறைந்த கரங்கள் தமது கைவரிசையைக் காட்டிவருகின்றன.

உலக பத்திரிகை சுதந்திர தினம் நினைவுகூரப்படும் இவ்வேளையில் உயிர்த்தியாகம் செய்த ஊடகத்துறை சார்ந்த அனைத்து ஊடகவியலாளர்களையும் நினைவுகூரும் அதேவேளையில் அவர்களுக்கு எமது அஞ்சலியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

பத்திரிகை சுதந்திரம் அர்த்தமுள்ளதாக அமைவதற்கும் ஜனநாயகம் காப்பாற்றப்படுவதற்கும் ஊடகத்துறையினர்மீதான வன்முறைகள், படுகொலைகள் என்பன நிறுத்தப்பட வேண்டும். அத்துடன் ஊடகத்துறையினர்மீதான வன்முறைகளுக்கும், படுகொலைகளுக்கும் காரணமானவர்கள் வெளிச்சத்திற்குக் கொண்டுவரப்பட்டு நீதியின்முன் நிறுத்தப்பட வேண்டும். அச்சுறுத்தல், பயம், பீதி போன்றவற்றிலிருந்து விடுபட்டு பத்திரிகையாளர்கள் சுதந்திரமாக பணியாற்றுவதற்கும் வழிசமைக்கப்பட வேண்டும்.

ஊடகத்துறை தொடர்ந்தும் தமது சகாக்களை இழந்துகொண்டிருக்க முடியாது. இத்தகைய செயல்கள் தொடருமாயின் ஜனநாயகம் குழிதோண்டிப் புதைக்கப்படுவது தவிர்க்கமுடியாததாகிவிடும்.ஜனநாயகம் காப்பாற்றப்பட வேண்டுமெனில் ஊடகத்துறை சார்ந்தோர், ஊடகத்துறைச் சுதந்திரம் என்பன காப்பாற்றப்பட வேண்டும்.

(நன்றி : வீரகேசரி ஆசிரிய தலையங்கம் - 03.05.2009)

# நிலக்கண்ணி வெடிகளும் கொத்து வெடிகுண்டுகளும் தடைசெய்யப்பட திருத்தந்தை அழைப்பு

### சர்வதேச நிலக்கண்ணி வெடிகள் விழிப்புணர்வு தினத்தையொட்டி திருத்தந்தை

நிலக்கண்ணி வெடிகளும் கொத்து வெடிகுண்டுகளும் தடைசெய்யப்பட வேண்டுமென திருத்தந்தை 16ம் பெனடிக்ற் அவர்கள் சர்வதேச சமுதாயத்திற்கு அழைப்பு விடுத்தார். ஒவ்வோர் ஆண்டும் ஏப்ரல் நான்காம் திகதி சர்வதேச நிலக்கண்ணி வெடிகள் விழிப்புணர்வு தினம் கடைபிடிக்கப்படுவதை ஞாயிறு மூவேளை செப உரையில் நினைவுகூர்ந்த திருத்தந்தை, நிலக்கண்ணி வெடிகளைத் தடைசெய்யும் ஆட்டவா ஒப்பந்தம் அமுலுக்கு வந்து பத்தாண்டுகள் ஆகியுள்ள இவ்வேளையில் இவ்விழிப்புணர்வு தினம் மிகவும் முக்கியம் வாய்ந்ததாக இருக்கின்றது என்றார்.

1999ஆம் ஆண்டு மார்ச் முதல் தேதி அமுலுக்கு வந்த இவ்வொப்பந்தத்தில் இன்னும் கையெழுத்திடாத நாடுகள் தாமதமின்றி கையெழுத்திடுமாறு வலியுறுத்திய திருத்தந்தை, இதற்குப் பலியாகியுள்ளவர்களுக்குத் தேவையான உதவிகள் கிடைப்பதற்கான முயற்சிகளுக்கு ஆதரவு அளிப்பதாகவும் தெரிவித்தார்.

இன்றைய நிலவரப்படி, உலகின் 80 விழுக்காடு நாடுகள் அதாவது 156 நாடுகள் இந்த ஆட்டவா ஒப்பந்தத்தை அமுல்படுத்தி வருகின்றன. சீனா, இந்தியா, அமெரிக்க ஐக்கிய நாடுகள் உட்பட பிற நாடுகள் இதில் கையெழுத்திடவில்லை. பல்வேறு நாடுகளில் 1997ஆம் ஆண்டிலிருந்து ஏறத்தாழ 4 கோடியே 20 இலட்சம் நிலக்கண்ணி வெடிகள் அழிக்கப்பட்டுள்ளன. 1990களின் தொடக்கத்தில் இவ்வெடிகளை உற்பத்திசெய்த 50க்கும் மேற்பட்ட நாடுகளில் 13 இன்றும் அவற்றைத் தயாரிப்பதாகச் சொல்லப்படுகின்றது.

2008ஆம் ஆண்டு, டிசம்பர் 3ஆம் திகதி ஆஸ்லோவில் கொத்து வெடிகுண்டுகளைத் தடைசெய்யும் ஒப்பந்தத்தில் கையெழுத்திடுவது தொடங்கப்பட்டது. கொத்து வெடிகுண்டுகளில் அடைக்கப்பட்டுள்ள நூற்றுக்கணக்கான சிறிய குண்டுகளில் சில தரையில் விழுந்தும் வெடிக்காமல் இருப்பதால் அவை பொது மக்களுக்குச் சேதம் விளைவிக்கின்றன. போஸ்னியா, ஈராக், செர்பியா, கோசொவோ, லெபனான், இலங்கை உட்பட 21 நாடுகளில் இவை பயன்படுத்தப்பட்டுள்ளன என்று ஊடகங்கள் கூறுகின்றன.

1999 ஆம் ஆண்டிலிருந்து 40 இலட்சத்திற்கும் மேற்பட்ட நிலக்கண்ணி வெடிகளும் 2006ஆம் ஆண்டில் மட்டும் 450க்கும் அதிகமான சதுர கிலோ மீட்டர் பரப்பளவில் 217,000த்துக்கும் மேற்பட்ட வெடிகளும் அகற்றப்பட்டுள்ளன.

இன்று சுமார் 78 நாடுகள் நிலக்கண்ணி வெடிகளால் பாதிக்கப்பட்டுள்ளன. இவ்வாறு பாதிக்கப்பட்டு வாழ்ந்துகொண்டிருக்கும் 5 இலட்சம் பேரில் ஏறத்தாழ 4 இலட்சம் பேர் அப்பாவிப் பொதுமக்கள் ஆவர்.

## க.பொ.த உயர்தரக் கிறிஸ்தவத்திற்கான புதிய பாடத்திட்டம் அறிமுகம்



அருட்பணி. சாந்திக்குமார்

2011 ஆம் ஆண்டில் க.பொ.த (உ/த) - A.L கிறிஸ்தவ பாடப் பரீட்சைக்குத் தோற்றவுள்ள மாணவருக்கான புதிய கிறிஸ்தவ பாடத்திட்டம் இவ்வாண்டு (2009) அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

இப்புதிய பாடத்திட்டத்தை அமுல்படுத்தத் தேவையான பயிற்சிகளை சம்மந்தப்பட்ட ஆசிரியர்களுக்கு அளிப்பதற்கு சென்ற மார்ச் மாதம் 25, 26, 27 ஆம் திகதிகளில் மகறகம தேசிய கல்வி நிறுவகத்தில் ஒழுங்குகள் செய்யப்பட்டிருந்தன. இதற்கான ஏற்பாடுகளை கிறிஸ்தவ பாடநெறிக்குப் பொறுப்பான அருட்தந்தை லொயிற் சாந்திக்குமார் அடிகளார் மேற்கொண்டிருந்தார்.

தேசிய ரீதியில் நடைபெற்ற இச்செயலமர்வுக்கு வளவாளர்களாக அருட்தந்தை நவாஜி (திரு/மட்.மறைமாவட்டம்), அருட்தந்தை ஜெயபாலன் குரூஸ் (மன்னார் மறைமாவட்டம்) ஆகியோர் அழைக்கப்பட்டிருந்தனர். மேலும் உயர்தர கிறிஸ்தவ பாடத்திட்டத்துக்கான ஆசிரியர் கையேடும் முதன் முறையாக தயாரிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## மன்னார் வைத்தியசாலையில் நோபட் அடிகளாரின் அன்புப் பணிகள்

வன்னியிலிருந்து காயப்பட்ட நிலையில் மன்னார் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்றுவரும் மக்களைத் தரிசித்து அவர்களுக்கு ஆறுதல் அளிக்கும் பணியில் அருட்பணியாளர் எஸ். நோபட் அடிகளார் ஈடுபட்டு வருகின்றார்.

அத்துடன் அந்த மக்களுக்கான உணவு தயாரிப்பதற்கு தன்னார்வத் தொண்டர்களை ஒழுங்குபடுத்துவது, வைத்தியர் மற்றும் தாதியர் போன்றோருடன் தொடர்புகொண்டு நோயாளிகளின் தேவைகளை விளக்குவது போன்ற பல்வேறு பணிகளையும் அவர் ஆற்றிவருகின்றார்.

அனைவருடனும் அன்பாகப்பேசி பழகும் நோபட் அடிகளாரின் இந்த அன்புப் பணிகளால் மன்னார் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுவரும் நூற்றுக்கணக்கான மக்கள் பெரும் நன்மை பெற்று வருகின்றனர்.

நோபட் அடிகளார் தற்போது மன்னாரில் உள்ள புனித வளனார் மாணவர் இல்லத்தின் அதிபராகப் பணியாற்றி வருகின்றார்.

## இந்துப் பிரமுகர்கள் திருத்தந்தைக்குப் பாராட்டு!

புனித வெள்ளியன்று உரோம் கொலோசேயத்தில் திருத்தந்தை 16ம் பெனடிக்ற் அவர்கள் நடாத்திய சிலுவைப் பாதை பக்தி முயற்சிகளில் இந்து சமயப் புனித நூலான உபநிடதத்தில் இருந்தும் ஏனைய இந்துசமய இலக்கியங்களில் இருந்தும் சிந்தனைகளைக் கையாண்டது குறித்து இந்துப் பிரமுகர்கள் தமது பாராட்டுக்களைத் தெரிவித்துள்ளனர்.

அமெரிக்காவிலிருந்து இந்துத் தேசியவாதி ராஜன் ஜெட் வெளியிட்டுள்ள அறிக்கையில், இரவீந்திரநாத் தாகூரின் கீதாஞ்சலியில் இருந்தும், மகாத்மா காந்தி குறித்தும் புனித வெள்ளி சடங்குகளில் குறிப்பிடப்பட்டது குறித்து நன்றியையும் மகிழ்ச்சியையும் தெரிவித்த அவர், அமைதியும் நீதியும் நிறைந்த ஓர் உலகைக் கட்டி எழுப்புவதில் அனைத்து மதத்தினரும் ஒன்றிணைந்து உழைக்க வேண்டியதன் அவசியத்தையும் வலியுறுத்தியுள்ளார்.

## உணவளித்து உயிர்காக்க உதவுங்கள்!

### திருமலை - மட்டுநகர் துணை ஆயர் அவசரக் கோரிக்கை



மன்னார் மாவட்டத்தில் தினமும் பஸ்களில் கொண்டுவந்து குவிக்கப்படும் வன்னி அகதிகளுக்கு குடிநீருக்கும் உணவுக்கும் உதவுமாறு திருகோணமலை - மட்டக்களப்பு மறைமாவட்டத் துணை ஆயர் மேதகு பொன்னையா ஜோசப் ஆண்டகை பொதுமக்களுக்கு அவசர வேண்டுகோள் விடுத்துள்ளார்.

கடந்த ஏப்ரல் மாதம் 24 ஆம் 25, ஆம் திகதிகளில் மன்னாருக்கு அவசர விஜயமொன்றை மேற்கொண்டுவிட்டு திரும்பியபின் அவர் மட்டக்களப்பு ஆயரில்லத்தில் வைத்து இந்த அவசர வேண்டுகோளை விடுத்துள்ளார்.

வன்னியில் போர் பிரதேசத்துக்குள்ளிலிருந்து தினம் தினம் வவுனியாவுக்குக் கொண்டுவரப்படும் அகதிகளில் பெரும்பாலானோரை வவுனியா செட்டிகுளம் மன்னார் வீதியின் இரு மருங்கிலுமுள்ள காட்டுப்பிரதேசங்களில் அரசாங்கம் கொண்டுவந்து இறக்கியுள்ளது. இப்பகுதிகளை அரச அதிகாரிகள் இயந்திரங்களைக்கொண்டு துரிதமாக துப்பரவு செய்து கொடுக்க, அவ்விடங்களில் தற்காலிக கொட்டில்களும், கூடாரங்களும், மலசல கூடங்களும் அமைக்கும் அவசர பணிகளில் தொண்டர் அமைப்புக்கள் இணைந்து செயலாற்றிக் கொண்டிருக்கின்றன.

நாம் மன்னாரில் நின்ற கடந்த ஏப்ரல் 24ஆம் 25ஆம் திகதிகளில் பெருந்தொகையான பெண்களும் சிறுவர்களும் சிறுமியர்களும் வயது முதிர்ந்த ஆண்களும் பஸ்களில் கொண்டுவந்து இறக்கப்படுவதைக் கண்டோம். இவர்கள் உடுத்த உடுப்புக்கு மாற்றுடை இல்லாமல் காணப்பட்டனர். இந்தக் கையறு நிலையில் அவர்களுக்கு எதுவும் வழங்கக்கூடிய நிலையில் யாரும் இருக்கவில்லை. இவர்களுக்கு தினமும் ஆயிரம் உணவுப் பார்சல்களைக்கூட வழங்கமுடியாத நிலையில் தாங்கலிருப்பதாக மன்னார் ஆயர் இராயப்பு யோசப் ஆண்டகை என்னிடம் கூறிக் கண்ணீர் வடித்தார்.

இந்த நேரத்தில் இன, மத, பேதங்களுக்கு அப்பால் மனித நேயத்துடன் மற்றவர்கள் அந்த அகதிகளுக்கு உணவளிக்க முன்வரவேண்டும். நாள்தோறும் அவர்களுக்கு உணவளிப்பதே முக்கியம். அதுவே அவசரம். அதன் பிறகே மற்றதெல்லாம்.

நேற்றைய நாள் கடந்துவிட்டது. நாளை என்ன நடக்குமோ தெரியாது. இன்றைய நாள் எமது கரங்களில் உள்ளது. இன்று துன்பத்தில் ஓலமிடும் எமது சகோதரர்களின் அவலக்குரலைக் கேட்டும் நாம் உதவிசெய்ய மறுத்தால், பின்வாங்கினால் நாம் வாழ்ந்தும் பயனில்லை.

உணவோடு குடிநீரும், குழந்தைகளுக்கான பால்மா, மருந்துப்பொருட்கள், உடைகளும் அவர்களுக்குத் தேவை. அவலப்படும் இவர்களுக்கு செய்யும் உதவிகள் அந்த இறைவனுக்கே செய்வதாகுமென்று ஆயர் மேலும் தெரிவித்தார்.

## திருச்சிலுவைக் கன்னியர்களின் புதிய மாகாணத் தலைமைத்துவம்

### மாகாணத் தலைவியாக அருட்சகோதரி இம்மாக்குளேற் மீண்டும் நியமனம்

திருச்சிலுவைக் கன்னியர்களின் புதிய மாகாணத் தலைமைத்துவ நியமனங்கள் வெளியிடப்பட்டுள்ளன. மாகாணத் தலைவியாக அருட்சகோதரி வைத்திய கலாநிதி இம்மாக்குளேற் ஜோசவ் அவர்கள் மீளவும் நியமிக்கப்பட்டுள்ளார். ஏனைய உறுப்பினர்களின் விபரங்கள் வருமாறு: உதவி மாகாணத் தலைவி - அருட்சகோதரி கிளாரா சுவாமி (மீள் நியமனம்).

ஆலோசகர்களாக அருட்சகோ. யூடித் இராயப்பு, (மீள் நியமனம்), அருட்சகோ. றீனா இராசையா, அருட்சகோ. லூசியா யோசவ், அருட்சகோ. றொபினா பவுலின் ஆகியோர் நியமிக்கப்பட்டுள்ளனர். இவர்கள் தமது பணிப்பொறுப்புக்களை ஏற்றுக்கொண்ட நிகழ்வானது கடந்த மார்ச் மாதம் 1ம் திகதி நீர்கொழும்பு தலுவக்கொற்றுவவில் உள்ள மாகாண இல்லத்தின் புதிய சிற்றாலயத்தில் இடம்பெற்றது. புதிய மாகாணத் தலைமைத்துவத்திற்கு மன்னாவின் செபங்களும் நல்வாழ்த்துக்களும்.

## கத்தோலிக்க பல்கலைக்கழகத்தில் ஒபாமாவுக்கு எதிராக ஆர்ப்பாட்டம்



அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமா அந்நாட்டின் மிகப்பெரிய கத்தோலிக்க பல்கலைக்கழகமொன்றிற்கு மேற்கொண்ட விஜயத்தின்போது கருக்கலைப்புக்கு எதிரான குழுவினர் அவருக்கு எதிராக ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

கருக்கலைப்பு உரிமைகள் தொடர்பான அமெரிக்க அரசாங்கத்தின் கொள்கைகளுக்கு எதிர்ப்பு தெரிவித்தே இந்த ஆர்ப்பாட்டம் நடாத்தப்பட்டது.

இண்டியானா மாநிலத்தில் உள்ள நொட்றிடேம் பல்கலைக்கழகத்தில் பட்டம் பெறும் மாணவர்கள் மத்தியில் உரையாற்றிய பராக் ஒபாமா அப்பல்கலைக்கழகத்திலிருந்து கௌரவ பட்டம் ஒன்றை பெற்றார்.

அமெரிக்க ஜனாதிபதியாக பதவியேற்று வெள்ளை மாளிகையில் நுழைந்த சமயம் பராக் ஒபாமா, முன்னாள் ஜனாதிபதி புஸ்ஸின் காலத்தில் மூலவுயிர் கல ஆராய்ச்சிக்கு விதிக்கப்பட்டிருந்த தடையை நீக்கியமை அமெரிக்க பழமைவாதிகளிடையே கடும் சினத்தை ஏற்படுத்தியுள்ளது.

அமெரிக்காவிலுள்ள சுமார் 60 மில்லியன் உரோமன் கத்தோலிக்கர்களில் அரைப் பங்கினர் கருக்கலைப்பு உரிமைகளுக்கு ஆதரவளிக்கின்ற அதேசமயம், 42 சதவீதமானவர்கள் கருக்கலைப்பு என்பது சட்டவிரோதமான ஒரு காரியம் என்ற கருத்தைக் கொண்டுள்ளதாக அண்மைய ஆய்வொன்று கூறுகின்றது.

## வன்னியில் இருந்து இறுதியாக வெளியேறிய மன்னார் மறைமாவட்டக் குரு அருட்பணி. நேரு



வன்னியில் யுத்த களமுனையில் மக்களோடு வாழ்ந்து பணிசெய்துவந்த மன்னார் மறைமாவட்டக் குருக்கள் படிப்படியாக ஏற்கனவே வன்னியிலிருந்து வெளியேறிய நிலையில் நேரு என அழைக்கப்படும் அருட்பணியாளர் யூட் ஞானராஜ் குரூஸ் அவர்கள் வன்னியிலிருந்து வராமல் பலவித பயங்கரங்கள், உயிராபத்துக்கள் மத்தியில் தொடர்ந்து மக்களோடு தங்கியிருந்து பணிபுரிந்துவந்தார். இந்நிலையில் அவருடைய பாதுகாப்புப்பற்றிய பயமும் அங்கலாய்ப்பும் மன்னார் மறைமாவட்டத்தில் இருந்துவந்தது.

இந்நிலையில் கடந்த மே மாதம் 17ம் திகதி இராணுவத்தால் மேற்கொள்ளப்பட்ட இறுதிக்கட்ட தாக்குதலை அடுத்து இறுதியாக வெளியேறிய மக்களோடு அருட்பணியாளர் நேரு அவர்கள் ஏனைய சில யாழ் மறைமாவட்டக் குருக்களோடு வெளியேறிவந்தது அனைவருக்கும் ஆறுதலை அளித்துள்ளது. இவர் தற்போது வவுனியாவில் உள்ள காமினி மகாவித்தியாலய நலன்புரி நிலையத்தில் தங்கவைக்கப்பட்டுள்ளார்.

## மன்னார் மறைமாவட்ட செய்திகள்

### செட்டிகுளத்தில் உள்ள நலன்புரி நிலையங்களில்

# செட்டிகுளம் பங்குத்தந்தையர்களின் அயராத பணிகள்

## ஞாயிறு தினத்தில் 23 திருப்பலிகள்!

வன்னியிலிருந்து இடம்பெயர்ந்த நிலையில் செட்டிகுளத்தில் அமைக்கப்பட்டுள்ள நலன்புரி நிலையங்களில் தங்கவைக்கப்பட்டுள்ள பல்லாயிரக்கணக்கான மக்களின் அடிப்படைத்தேவைகளையும் ஆன்மீகத்தேவைகளைப் பூர்த்திசெய்யும் பெரும் பணியில் செட்டிகுளம் பங்குத்தந்தையர்கள் அயராது ஈடுபட்டு வருகின்றனர். செட்டிகுளம் பங்குத்தந்தை அருட்பணி. செலஸ்ரின் மஸ்கிறிஞ்ஞு (அமதி), உதவிப் பங்குத்தந்தையர்கள் அருட்பணி. ஏ. ஜுட்ஸ் முரளிதரன் மற்றும் அருட்பணி. மில்ரன் தேவராஜா (நியூட்டன்) ஆகியோர் இப்பணியில் ஈடுபட்டு உழைத்து வருகின்றனர்.

நலன்புரி நிலையங்களில் தாம் மேற்கொள்ளும் பணிகள் தொடர்பாக மன்னாவுக்குக் கருத்துத் தெரிவித்த முரளி அடிகளார் பின்வருமாறு கூறினார், "கடந்த வருடம் நவம்பர் மாதத்திலிருந்து இடம்பெயர்ந்த வன்னி மக்கள் செட்டிகுளத்திற்குக் கொண்டுவரப்பட்டு தங்கவைக்கப்பட்டு வருகின்றனர். இவர்களுக்கு நாம் எம்மாலான அனைத்து உதவிகளையும் செய்து வருகின்றோம்.

எமது ஆலயத்திற்கு அருகாமையில் உள்ள பாடசாலையில் தங்கவைக்கப்பட்டுள்ள மக்களை நாம் அடிக்கடி தரிசித்து அவர்களுக்கு உதவி செய்கின்றோம். இன்னும் ஏனைய கதிர்காமர் நிவாரணக் கிராமம், ஆனந்தகுமாரசாமி நிவாரணக் கிராமம், அருணாச்சலம் நிவாரணக் கிராமம் போன்ற அனைத்து இடங்களுக்கும் சென்று மக்களைத் தரிசித்து திருப்பலிகளை நிறைவேற்றி, ஆறுதல் அளித்து வருகின்றோம்.

வலையம் 2 போன்ற இடங்களுக்கு நாம் செல்ல இதுவரை அனுமதி கிடைக்கவில்லை. காலை உணவாக 10,000 பணிஸ்களை வழங்குகிறோம். இன்னும் கறிற்றாஸ் மன்னார் (வாழ்வுதயம்) நிறுவனம் ஊடாக ஒவ்வொரு நாளும் ஆயிரக்கணக்கான உணவுப் பார்சல்களை இந்த மக்களுக்கு விநியோகிக்கின்றோம்.

எமது இந்த முயற்சிகளுக்கு கறிற்றாஸ் மன்னார் (வாழ்வுதயம்) வழங்கும் அபரிதமான பல்வகை உதவிகள், அன்புக்கன்னியர்களின் உதவிப் பொருட்கள், அமதிகளின் உதவிகள் போன்றன கைகொடுக்கின்றன. எமது ஆன்மீகப் பணிகளையும் மக்களின் தேவைக்கேற்ப அதிகரித்து வருகின்றோம். தற்போது ஒவ்வொரு ஞாயிறு தினமும் 23 திருப்பலிகளை இந்த நிவாரண முகாம்களில் ஒப்புக்கொடுக்கின்றோம். இதற்கு யாழ் மறைமாவட்டக் குருக்களின் உதவியும் எமக்குக் கிடைக்கின்றன" எனத் தெரிவித்தார்.



அருட்பணியாளர் முரளிதரன்

## பேராலயத்தில் தந்தையர் தினம்

கடந்த ஏப்ரல் மாதம் 26ம் திகதி மன்னார் புனித செபஸ்தியார் பேராலயத்தில் தந்தையர் தினம் கொண்டாடப்பட்டது. அன்றைய தினம் திருவுளப்பணிச் சபையின் மாகாண முதல்வர் அருட்பணியாளர் டன்ஸ்ரன் அடிகளார் தலைமையில் பேராலயத்தில் கூட்டுத்திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டது.

தந்தையர் தினத்தை முன்னிட்டு கடந்த மே மாதம் 03ம் திகதி மாலை 6.00 மணிக்கு பேராலய மேல் மண்டபத்தில் ஆண்கள் தோழமைக் குழுவினால் ஒன்றுகூடலும், கலைநிகழ்வும், இராவுணவு உபசாரமும் நடைபெற்றது.



## மன்னார் மறைமாவட்டப் பங்குகளில் இருந்து ஒரு இலட்சத்திற்கும் அதிகமான உணவுப் பார்சல்கள்

செட்டிகுளம் நலன்புரி நிலையங்களில் உள்ள இடம்பெயர்ந்த வன்னி மக்களுக்கு மன்னார் மறைமாவட்டத்தின் பல்வேறு பங்குகளிலும் இருந்து இதுவரை (28.05.2009 வரை) ஒரு இலட்சத்தி 10 ஆயிரம் உணவுப் பார்சல்கள் சேகரித்து வழங்கப்பட்டுள்ளதாக செட்டிகுளம் உதவிப் பங்குத் தந்தை முரளிதரன் அடிகளார் தெரிவித்தார். இந்தப் பார்சல்கள் அனைத்தும் வாழ்வுதயம் அமைப்பின் ஊடாகவே பங்குகளில் சேகரிக்கப்பட்டு வழங்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

## மன்னார் புனித செபஸ்தியார் பேராலயத்தில் முதற் தடவையாக பங்கு அருட்பணிப் பேரவை

மன்னார் புனித செபஸ்தியார் பேராலயத்தில் முதற் தடவையாக பங்கு அருட்பணிப் பேரவை ஏற்படுத்தப்பட்டுள்ளது. கடந்த ஏப்ரல் மாதம் 04ம் திகதி மாலை 4.00 மணிக்கு நடைபெற்ற அங்குரார்ப்பணக் கூட்டத்தில் நிர்வாகத் தெரிவு இடம்பெற்றது.

சட்டப்படியான தலைவராக பங்குத்தந்தை இருப்பதால் செயலாளர் மற்றும் பொருளாளர் தெரிவு இடம்பெற்றது. செயலாளராக திரு. டீ. பீ. எவ். ஞானப்பிரகாசம் அவர்களும், பொருளாளராக திரு. ஜீ. அன்ரனி சங்கர் அவர்களும் தெரிவு - செய்யப்பட்டனர். அதன்பின் வழிபாட்டுக் குழுவிற்கும் நிதிக்குழுவிற்கும் தலைவர் பங்குத்தந்தை என்பதால் ஏனைய 5 குழுக்களுக்கும் தலைவர் தெரிவு இடம்பெற்றது.

கல்வி, மறைக்கல்வி, விவிலியப் பணிக்குழுவிற்கு அருட்சகோதரி ஜெயசீலி றொட்றிக்கோவும், திருச்சபை வளர்ச்சிக் குழுவிற்கு அருட்சகோதரி அலிஸ் அவர்களும், குடும்பம்,பொதுநிலையினர் பணிக்குழுவிற்கு திரு. எஸ். ஏ. இராஜகாரியர் அவர்களும், கலை, கலாச்சாரப் பணிக்குழுவிற்கு திரு. இ. கி. அ. ஜோண் பொஸ்கோ அவர்களும் சமூகப் பணிக்குழுவிற்கு திரு. சி. எம். ஏ. ஜெயதாஸ் அவர்களும் தலைவர்களாகத் தெரிவு செய்யப்பட்டனர். நிதிக்குழுச் செயலாளராக திரு. அன்ரனி சங்கர் அவர்களும், வழிபாட்டுக் குழுவின் செயலாளராக செல்வி. ரி. ஜெசி பெனாண்டோ ஆகியோரைத் தவிர ஏனைய குழுக்கள் தங்களுக்குள்ளே செயலாளர்களை ஏகமனதாகத் தெரிவுசெய்துகொண்டனர்.

மேலே குறிப்பிடப்பட்ட பணிக்குழுக்களின் தலைவர்கள் மற்றும் செயலாளர்களோடு சேர்த்து திரு. ரி. ஜெயக்குமார், செல்வி. சாந்தினி கஸ்மிர், திரு. செ. இன்பதாசன், திருமதி சுகந்தன் நிர்மலா ஆகியோர் பேரவையின் செயற்குழு உறுப்பினர்களாகத் தெரிவுசெய்யப்பட்டனர்.

புதிதாக அங்குரார்ப்பணம் செய்யப்பட்ட பங்கு அருட்பணிப்பேரவையினரின் பணிப்பொறுப்பும், அர்ப்பணத் திருப்பலியும் கடந்த ஏப்ரல் மாதம் 19ம் திகதி ஞாயிறு அன்று இடம்பெற்றது. மன்னார் ஆயர் மேதகு இரா. யோசேப்பு ஆண்டகை அவர்கள் தலைமையில் இத்திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டது.

## பெரிய குஞ்சுக்குளக் கிராமத்தின் முதல் குருவின் முதல் திருப்பலி

பெரிய குஞ்சுக்குளம் கிராமத்தின் முதல் குருவாகிய அருட்பணி. பெர்ணான்டோ இயூஸ்ரஸ் அடிகளார் கடந்த சித்திரைத் திங்கள் 27.04.2009 அன்று தனது முதல் நன்றித் திருப்பலியை பெரிய குஞ்சுக்குளம் புனித அங்காமத்து மாதா ஆலயத்தில் ஒப்புக்கொடுத்தார். புதிய குருமணி பிரதான வீதியில் இருந்து மாலையிட்டு, இசைக்கச்சேரியுடன், பூக்கள் தூவி, வழியில் வெண்துகில் விரித்து அழைத்துவரப்பட்டார். அதனைத் தொடர்ந்து மங்கள விளக்கேற்றலுடன் திருப்பலி ஆரம்பமானது.

திருப்பலியைத் தொடர்ந்து கலைநிகழ்வுகள் நடைபெற்றன. உதவிப் பங்குத்தந்தை அருட்பணி. இ. செபமாலை வரவேற்புரை நிகழ்த்தினார். நடனம், பாடல்கள், வாழ்த்துப்பா, கவிதை எனப் பல நிகழ்வுகள் அரங்கேற்றப்பட்டன.

புதிய குருமணிக்கு அழைத்தல் விதையை ஊன்றிய அருட்பணி. மாக்கஸ், திருவுளப்பணிச் சபை முதல்வர் அருட்பணி. டன்ஸ்ரன், கற்கடந்தகுளம் பங்குத்தந்தை அருட்பணி. சீமான் மரியதாசன் ஆகியோரால் உரைகள் வழங்கப்பட்டன. தொடர்ந்து கிராமத்தின் பெரியோர்களால் கவி பாடப்பட்டு அனைவரும் மன்/ பெ. கு. குளம் றோ. க. த. க. பாடசாலை -க்கு மதிய போசனத்திற்காக அழைத்துச் செல்லப்பட்டார்கள்.

தகவல்: எம். எம். நிரோஜன் (றெஜிந்தன்)

# புதிய குருக்களின் வாழ்க்கை வரலாறு

### அருட்சகோ. பஸ்ரி ஜயந்த

அருட்சகோதரர் மெனோ பஸ்ரி ஜயந்த அவர்கள் பள்ளிமுனைப் பங்கின் பள்ளிமுனைக் கிராமத்தைச் சேர்ந்தவர். இவர் திரு. திருமதி தேவாலகம ஆராச்சிகே ஜெயரத்ன மற்றும் லூசி மரிய ஸ்கொலஸ்ரிக்கா பிகிறாடோ தம்பதிகளின் புதல்வனாக 02.03.1979ல் பிறந்தார். இவர் தனது ஆரம்பக் கல்வியை பள்ளிமுனை மன்/ புனித லூசியா றோ.க.த.க. பாடசாலையிலும் உயர் கல்வியை மன்/ புனித சவேரியார் ஆண்கள் தேசிய பாடசாலையிலும் நிறைவுசெய்தார்.

அருட்பணியாளர் அல்பன் இராஜசிங்கம் (அமதி) அவர்களினால் அழைத்தல் ஊக்கம் பெற்று 1997ஆம் ஆண்டு யாழ்ப்பாணம் கொழும்புத்துறையில் உள்ள புனித சூசையப்பர் அமதிகள் சிறிய குருமடத்தில் இணைந்து தனது குருத்துவ உருவாக்கற் பயணத்தை ஆரம்பித்தார்.

தொடர்ந்து 2001ம் ஆண்டு கண்டி அம்பிட்டிய தேசிய குருத்துவக் கல்லூரியில் மெய்யியல் கல்வியை ஆரம்பித்த இவர் அங்கு மெய்யியல்மாணிப் (B.Ph) பட்டத்தைப் பெற்றுக் -கொண்டார். 2003ஆம் ஆண்டு யாழ்ப்பாணம் கொழும்புத்துறையில் உள்ள புனித பிரான்சிஸ் சவேரியார் உயர் குருத்துவக் கல்லூரியில் இறையியல் கல்வியை ஆரம்பித்த இவர் அங்கு இறையியல்மாணிப் (B.Th) பட்டத்தையும் பெற்றுக்கொண்டார்.

கடந்த 18.12.2008 அன்று திருத் - தொண்டராகத் திருநிலைப்படுத்தப்பட்ட இவர் யாழ்ப்பாணம் பருத்தித்துறையில் உள்ள 'அஞ்சலியகம்' என்ற அமதிகளின் உளவளத் துணை நிலையத்தில் தனது திருத்தொண்டர் பணியினை மேற்கொண்டார். இவர் தனது முதற் திருப்பலியை 07.06.2009 அன்று பள்ளிமுனை புனித லூசியா ஆலயத்தில் ஒப்புக்கொடுப்பார்.

### அருட்சகோ. அமலராஜ்

அருட்சகோதரர் இயூஜின் அமலராஜ் அவர்கள் நெடுந்தீவுப் பங்கின் நெடுந்தீவுக் கிராமத்தைச் சேர்ந்தவர். இவர் திரு. திருமதி பர்நாந்து அமிர்தநாதர் மற்றும் கிருசாந்து செபமாலையம்மா தம்பதிகளின் புதல்வனாக 03.10.1976ல் பிறந்தார். இவர் தனது ஆரம்பக் கல்வியை பள்ளிமுனை நெடுந்தீவு றோ.க.ம.வி. யிலும் உயர் கல்வியை யாழ்.புனித சம்பத்திரிசியார் கல்லூரியிலும் நிறைவுசெய்தார்.

அருட்பணியாளர் அன்ரனிதாஸ் அவர்களினால் அழைத்தல் ஊக்கம் பெற்று 1996ஆம் ஆண்டு யாழ்ப்பாணம் கொழும்புத்துறையில் உள்ள புனித சூசையப்பர் அமதிகள் சிறிய குருமடத்தில் இணைந்து தனது குருத்துவ உருவாக்கற் பயணத்தை ஆரம்பித்தார்.

தொடர்ந்து 2001ம் ஆண்டு கண்டி அம்பிட்டிய தேசிய குருத்துவக் கல்லூரியில் மெய்யியல் கல்வியை ஆரம்பித்த இவர் அங்கு மெய்யியல்மாணிப் (B.Ph) பட்டத்தைப் பெற்றுக் -கொண்டார். 2003ஆம் ஆண்டு யாழ்ப்பாணம் கொழும்புத்துறையில் உள்ள புனித பிரான்சிஸ் சவேரியார் உயர் குருத்துவக் கல்லூரியில் இறையியல் கல்வியை ஆரம்பித்த இவர் அங்கு இறையியல்மாணிப் (B.Th) பட்டத்தையும் பெற்றுக்கொண்டார்.

கடந்த 18.12. 2008 அன்று திருத் - தொண்டராகத் திருநிலைப்படுத்தப்பட்ட இவர் கப்புத்தளை புனித வனத்து சின்னப்பர் ஆலயத்தில் தனது திருத்தொண்டர் பணியினை மேற்கொண்டார்.

இவர் தனது முதற் திருப்பலியை எதிர்வரும் 21.06.2009 அன்று நெடுந்தீவு புனித அந்தோனியார் ஆலயத்தில் ஒப்புக்கொடுப்பார்.

## மன்னார் மறைமாவட்டத்தின் திருவழிபாட்டு நாட்காட்டி

### யூன் மாதம்

01 - திருத்தந்தையின் தினம் 02 - தூய அந்தோனியார் - சுவாமி தோட்டம்
04 - தூய நீக்கிலாஸ் திருவிழா - வாழ்க்கைப்பெற்றான் கண்டல்
13 - தூய அந்தோனியார் திருவிழா - வவுனியா, செட்டிகுளம், தட்சனாமருதமடு, தள்ளாடி, பள்ளங்கோட்டை, கறுக்காக்குளம், கொக்குப்படையான், பருத்திப்பன்னை, சிறுத்தோப்பு, கோவில் குளம், துவரங்கேணி, பிடாரிகுளம், உவரி, கனகராயன்குளம், ஓலுமடு, சிறுக்கண்டல்
14 - தூய அந்தோனியார் திருவிழா - மணற்குளம்
17 - தூய அந்தோனியார் திருவிழா - பொந்தீவுகண்டல், பாலைப்பெருமாள்கட்டு
19 - தூய சவேரியார் திருவிழா - சிலாவத்துறை
திருஇருதய ஆண்டவர் திருவிழா - கவயன்குடியிருப்பு, பரிகாரிகண்டல்
திருஇருதயத் திருவிழா - குருக்கள் இயேசுவின் திருஇருதயத்திற்கு ஒப்புக்கொடுக்கப்பட்ட நாள் - குருக்கள் மறைக்கோட்ட ரீதியில் ஒன்றுகூடி வழிபாட்டில் ஈடுபடுவர்.
21 - தூய அந்தோனியார் திருவிழா ஆச்சிபுரம், திரு இருதய ஆண்டவர் திருவிழா - சிதம்பரபுரம்
22 - தூய அந்தோனியார் திருவிழா - அலைகல்லு போட்டகுளம்
23 - மடுத்திருப்பதியில் ஆடித்திருவிழாவிற்கான கொடியேற்றம் - நவநாள் ஆரம்பம்
27 - தூய அந்தோனியார் திருவிழா - சாவற்கட்டு
28 - திருஇருதய ஆண்டவர் திருவிழா - வேப்பங்குளம், தூய இராயப்பர் திருவிழா - உயிலங்குளம்
30 - தூய அந்தோனியார் திருவிழா - நடுக்குடா

### யூலை மாதம்

02 - மடுமாதா திருவிழா 03 - யாழ் ஆயர் தோமஸ் ஆண்டகையின் பெயர் கொண்ட தினம்
05 - தூய தோமையார் - கல்நாட்டி
06 - மன்னார் ஆயர் யோசேப்பு ஆண்டகை மன்னார் ஆயராக நியமனம் பெற்ற தினம் (1992)
- தூய செபமாலை அன்னை திருவிழா - பாலையடி புதுக்குளம்
- மன்னார் மறைமாவட்ட சமூகத்தொடர்பு அருட்பணி மைய தினம்
10 - தூய ஆரோக்கிய அன்னை திருவிழா - நானாட்டான்
12 - வழிபாட்டுக்குழுத் திருநாள் 13 - தூய செபஸ்தியார் - மருதமடு
16 - தூய கார்மேல் அன்னை திருவிழா -ஆவணம், அளவக்கை, இளமருதங்குளம், பொற்கேணி
- தூய சிந்தாத்திரை மாதா திருவிழா - பறப்பாங்கண்டல்,
- தூய கப்பலேந்தி மாதா திருவிழா - பெரிய நொச்சிக்குளம்
18 - ஆரோக்கிய அன்னை திருவிழா - மன்னார் வைத்தியசாலை
- தூய வேளாங்கண்ணி அன்னை திருவிழா - சிலாவத்துறை
25 - தூய யாகப்பர் திருவிழா - பறப்பாங்கண்டல், சிறுநீலாசனை, விடத்தல்தீவு, கொக்குப்படையான், கட்டுக்காரன் குடியிருப்பு, முருங்கன் கமம், நறுவிலிக்குளம்.
26 - தூய அன்னம்மாள் திருவிழா - வங்காலை, 29 - சுதேச குருக்கள், துறவியர் தினம்.

இலங்கைத் திருச்சபைச் செய்திகள்

# திருச்சபை சமூகத்தொடர்புச் சாதனங்களைப் பயன்படுத்தி நற்செய்தி அறிவிப்புப் பணியை சிறப்பாக மேற்கொள்ள முடியும்

## உரோமில் நடைபெற்ற ஊடக மாநாட்டில் கலந்துகொண்ட ஆயர் கிங்ஸ்சிலி கருத்து

சமூகத்தொடர்புச் சாதனங்களைப் பயன்படுத்தி திருச்சபை தனது நற்செய்தி அறிவிப்புப் பணியினை சிறப்பாக மேற்கொள்ள முடியும் என உரோமையில் பாப்பிறை ஆணையத்தால் ஏற்பாடு செய்யப்பட்ட சமூகத்தொடர்பு சாதனங்கள் தொடர்பான மாநாட்டில் கலந்துகொண்டு அண்மையில் நாடு திரும்பிய திருகோணமலை - மட்டக்களப்பு மறைமாவட்ட ஆயர் மேதகு கிங்ஸ்லி சுவாம்பிள்ளை ஆண்டகை அவர்கள் தெரிவித்தார்.

மேலும் அவர் கூறுகையில், "ஊடகங்கள் இன்று உலகு முழுவதையும் ஊடுருவிக் கொண்டிருக்கின்றன. தொழிநுட்ப ரீதியாக அனைத்து நாட்டு மக்களது வாழ்க்கையிலும் இவை தமது செல்வாக்கைச் செலுத்தி வருகின்றன. ஊடகங்கள் இல்லையேல் உலகு இல்லை என்றாகிவிட்டது. விரைவாக மாறிவரும் உலகிலே ஊடகங்களின் பங்களிப்பு மிக மிகத் துரிதமடைந்துள்ளது. எனவே தொழிநுட்ப ரீதியாக ஊடகங்களைப் பயன்படுத்தி எதிர்காலச் சமூகத்தை முன்னேற்றுவற்காக இன்றைய சமுதாயம் பயிற்றப்பட வேண்டும். மேலும் இன்று ஊடகங்கள் உலகை ஊடுருவி வர்த்தகம், களியாட்டங்கள், கலை கலாச்சாரங்கள் மற்றும் குடும்ப ரீதியாகவும் தனது செல்வாக்கைச் செலுத்தி வருகின்றன. இதேவேளை பொருளாதார ரீதியாக பெரும் சவாலாகவும் இது அமைந்துள்ளது. இலங்கை அரசும் நடப்பு ஆண்டை ஆங்கிலம் மற்றும் தொலைத்தொடர்பு ஆண்டாகப் பிரகடனப் - படுத்தியுள்ளது.

எனவே தொழில்நுட்ப ரீதியாக "இச்சமூகத் தொடர்புசாதனங்களைப் பயன்படுத்தி திருச்சபை தனது நற்செய்தி அறிவிப்புப் பணியினை சிறப்பாக மேற்கொள்ள முடியும். இன்று ஊடகங்கள் குடும்ப உறவுகளையும் சிதைக்கக்கூடிய வல்லமை யுடையதாகத் திகழ்கின்றன. எனவே இன்றைய சமூதாயத்தை நாம் சிறந்த முறையில் பயிற்றுவிப்பதன் மூலம் எதிர்காலச் சமூதாயத்தை முன்னேற்ற முடியும்.

பணித்தளங்களிலே குடும்பங்களை உரிய முறையில் வளர்க்க வழிசமைக்கப்பட வேண்டுமென்று கூறிய ஆயர் அவர்கள் இதற்கான ஆவணமொன்றை வத்திக்கான் சமூகத்தொடர்புப் பணிக்கான ஆணையம் விரைவில் அனுப்பி வைத்து அமுல்படுத்தவும் இருக்கிறது என்றார்.



இலங்கை ஆயர் மன்றம் சார்பாக அதன் இணைத்தலைவரான மேதகு ஆயர் கிங்ஸ்லி சுவாம்பிள்ளை ஆண்டகை அவர்கள் இந்நிகழ்வில் கலந்துகொண்டார். உலகளாவிய ரீதியில் சுமார் 65 ஆயர்கள் இந்நிகழ்வில் பங்கு பற்றினர்.

## வசந்தசீலன் அடிகளார் கொழும்பில் சிகிச்சை பெறுகிறார்

வன்னியில் நடைபெற்ற மோதல்களின்போது படுகாயமடைந்த யாழ் மறைமாவட்டக் குருவும் வன்னி கியூடக் நிறுவனத்தின் இயக்குனருமாகிய அருட்பணியாளர் வசந்தசீலன் அடிகளார் தற்போது கொழும்பு ஆஸா வைத்தியசாலையில் சிகிச்சைபெற்று வருகின்றார்.

இவரை கொழும்புப் பேராயர் உட்பட பல குருக்கள் துறவியர் சென்று பார்வையிட்டுள்ளனர். இவருக்காகத் தொடர்ந்து செபிக்கும்படி மன்னா இறைமக்களைக் கோரிநிற்கின்றது.

## அறிவித்தல்

### மறைமாவட்டங்களின். பங்குகளின் முக்கிய செய்திகளை வரவேற்கின்றோம்

*'இலங்கைத் திருச்சபைச் செய்திகள்'* என்ற இந்தப் பக்கத்தில் மன்னார் மறைமாவட்டம் தவிர்ந்த ஏனைய மறைமாவட்டங்களின், பங்குகளின் முக்கிய செய்திகளை மன்னா வெளிக்கொண்டுவரத் தயாராய் இருக்கிறது.

உங்கள் மறைமாவட்டத்தின், பங்கின் முக்கிய செய்திகளை பங்குத்தந்தையரின் கையொப்பத்துடன் அனுப்பினால் செய்தியின் முக்கியத்துவம் கண்டு நாம் பிரசுரிப்போம்.

*'மன்னா'* மன்னார் மறைமாவட்டப் பத்திரிகையாய் இருந்தாலும் அது அனைத்து மறைமாவட்டங்களையும், தமிழ் மக்கள் செறிந்து வாழும் அனைத்து வெளிநாடுகளையும் சென்று சேர்கிறது என்பதை தயவுசெய்து நினைவில்கொள்ளுங்கள்.

## யாழ் ஆயரின் புதிய செயலர்

யாழ் மறைமாவட்ட ஆயரின் புதிய செயலராக அருட்பணியாளர் இ. ஜினோல்ரன் விஜின்ரஸ் அடிகளார் நியமிக்கப்பட்டுள்ளார். கடந்த ஆண்டு குருவாக திருநிலைப் - படுத்தப்பட்ட இவர் மானிப்பாய் பங்கில் உதவிப் பங்குத்தந்தையாக பணியாற்றினார்.

கடந்த ஆறு ஆண்டுகளாக மிகவும் இக்கட்டான காலத்தில் யாழ் ஆயரின் செயலாளராகச் சிறப்பாகப் பணியாற்றிய அருட்பணியாளர் செ. எயின்ஸ்லி றொசான் அடிகளார் இந்தியாவில் உள்ள லொயலா கல்லூரியில் ஊடகம் பற்றிய உயர்கல்வியைக் கற்பதற்காக செல்கின்றார். றொசான் அடிகளாருக்கு மன்னாவின் நல்வாழ்த்துக்கள்!

## *சலேசியன் சபை உபமுதல்வர்* இலங்கை விஜயம்

சலேசிய சபையின் உபமுதல்வர் அருட்தந்தை அட்றியானோ பிறகோலின் (Very Rev. Fr. Adriano Bregolin) அவர்கள் கடந்த பெப்ரவரி மாதம் 7 - 10ம் திகதிகளில் இலங்கைக்கான விஜயத்தை மேற்கொண்டு இலங்கையில் உள்ள சலேசிய சபையின் உப மாகாணத்தைத் தரிசித்தார்.

இலங்கை விஜயத்தின்போது நீர்கொழும்பு டொன்பொஸ்கோ தொழிநுட்பப் பயிற்சி நிலையத்தில் அவருக்கு மாபெரும் வரவேற்பு அளிக்கப்பட்டது. சலேசிய சபையின் இலங்கை பதில் மாகாணத்தின் முதல்வர் பின்ரோ அடிகளாரும் அவ்வேளையில் உடனிருந்தார்.

## திருமலை – மட்டுநகர் துணை ஆயருக்கு மன்னாரில் வரவேற்பு



திருகோணமலை - மட்டக்களப்பு மறைமாவட்டத்தின் துணை ஆயர் பொன்னையா ஜோசப் ஆண்டகை அவர்கள் முதற் தடவையாக மன்னார் மறைமாவட்டத்திற்கு. கடந்த 25.04.2009 அன்று வருகை தந்தபோது மன்னார் பேராலயத்தில் பங்குத்தந்தை தேவராஜா கொடுதோர் அடிகள் மற்றும் குருமுதல்வர் விக்ரர் சோசை அடிகளார் ஆகியோரினால் வரவேற்கப்படுகின்றார்.

## 'உறவில் வளர்வோம்' என்ற பெயரில் யாழ் மறைமாவட்டத்தில் அன்பிய எழுச்சிப்பாடல்கள் வெளியீடு

திரு. கெனத் அவர்களின் இசை உருவாக்கத்தில், ஆத்ம இராக வெளியீடாக 'உறவில் வளர்வோம்' என்னும் இறுவட்டு ஒலி நாடா அண்மையில் வெளியிடப்பட்டது.

அன்பிய வாழ்வின் பண்புகளைத் தாங்கிய பாடல்களை இது கொண்டுள்ளது. இவ் ஒலி நாடாவின் பாடல் வரிகள் அருட்பணி. இரவிசந்திரன், அருட்பணி. றொபின்சன், திரு. கெனத் ஆகியோரால் எழுதப்பட்டுள்ளன.

அன்பிய ஒன்றுகூடல்களில் இலகுவாக எல்லோராலும் பாடப்படக்கூடிய வகையில் இதன் பாடல்கள் உருவாக்கப்பட்டுள்ளன.

யாழ் ஆயர் சவுந்தரநாயகம் ஆண்டகை அவர்களால் வெளியிட்டுவைக்கப்பட்ட இவ் இறுவட்டு ஒலி நாடவை அருட்பணி. றெக்ஸ் சவுந்தரா அடிகள் ஆய்வு செய்தார். இவ் இறுவட்டை யாழ் மறைக்கல்வி நிலைய அன்பியத் தொடர்பகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

## வெளிவாரி பட்டப்படிப்பு மாணவர்களுக்காக அருட்பணியாளர் பிலேந்திரன் அடிகளாரினால் 'கிறிஸ்தவமும் நாகரிகங்களும்' நூல் வெளியீடு

யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்தின் கிறிஸ்தவ, இஸ்லாமிய நாகரீகத்துறை தலைவரும், முதுநிலை விரிவுரையாளருமாகிய அருட்பணி. ஞா. பிலேந்திரன் அடிகளாரால் எழுதப்பட்ட 'கிறிஸ்தவமும் நாகரிகங்களும்' என்ற நூல் அண்மையில் வெளியிடப்பட்டது.



வெளிவாரி மாணவர்களுக்கான நூல் வரிசையில் முதலாவது நூலாக வெளிவந்துள்ள இதனைத்தொடர்ந்து தமிழ்க் கிறிஸ்தவ இலக்கியங்கள், விவிலிய அடிப்படைச் சிந்தனைகள், கிறிஸ்தவக் கலைகள், கிறிஸ்தவ மெய்யியற் சிந்தனைகள், நவீன இறையியற் சிந்தனைகள் ஆகிய தலைப்புகளிலும் நூல்கள் வெளியிடப்படவுள்ளதாக பிலேந்திரன் அடிகளார் தெரிவித்துள்ளார்.

## துன்புறும் எமது சகோதரர்களுக்கு உதவிக் கரம் நீட்டுவோம்

### பேராயரின் அவசர வேண்டுகோள்

இரு பகுதியிலும் யுத்த அனர்த்தங்களுக்குப் பலியாகும் மக்கள் மட்டில் நாம் அக்கறை உள்ளவர்களாயிருக்கிறோம். உள்ளூரில் இடம்பெயர்ந்த மக்கள் வவுனியா, கிளிநொச்சி மற்றும் எல்லையோரங்களில் அமைந்துள்ள முகாம்களில் தங்கவைக்கப்பட்டுள்ளனர். இவர்களின் தேவைகள் கவனிக்கப்படவேண்டும். மற்றும் காயமடைந்த படையினருக்கு உடனடியான அடிப்படைத் தேவைகள் உள்ளன.

எனவே இன, குல நிற, பாகுபாடுகளைக் கடந்து துன்புறும் எமது சகோதரர்களுக்கு கிறிஸ்தவ அன்புடன் உதவிக்கரம் நீட்டுவதற்கு முன்வருவோமாக என்று கொழும்புப் பேராயர் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

## பிளவுபட்டு நிற்கும் எமது நாட்டிற்கு நாளாந்த செபமாலை விமோசனத்தைக் கொண்டுவரும்

### – கொழும்புப் பேராயர் –

களுத்துறையில் அமைந்துள்ள லூர்து அன்னை கெபியில் கொண்டாடப்பட்ட பெருவிழாவின் முந்திய நாள் மாலை ஆராத -னையை கொழும்புப் பேராயர் அதிமேதகு ஒஸ்வோல்ட் கோமிஸ் ஆண்டகை அவர்கள் தலைமைதாங்கி நடாத்தினார்.

அப்போது அவர் தனது மறையுரையில் பாவிகளின் மனமாற்றத்திற்காக தவம் செய்யுங்கள், செபம் செய்யுங்கள் என்று எமது அன்னை மரியாள் லூர்து நகரில் கூறினார் என்று எடுத்து உரைத்தார்.

நாமும் மனம்மாறி புதியதொரு வாழ்வை ஆரம்பிக்க வேண்டும் என்று அன்னை மரியாள் எமக்குச் சவால் விடுக்கிறாள்; எமக்கு அழைப்பு விடுக்கிறாள். எனவே எமக்காக, பாவிகளின் மனம்மாறுவதற்காக, எமது நாட்டின் அமைதிக்காக நாம் நாளாந்தம் செமாலை செபிப்பதற்கு அழைக்கப்படுகின்றோம்.

லூர்து நகரில் மரியன்னை அளித்த செய்தியை அழுத்திக்கூறிய பேராயர், எமக்குள்ளும் எமது குடும்பங்களிலும் எமது நாட்டிலும் உள்ள பிளவுகளைக் குணப்படுத்துவதற்கு நாம் நாளாந்தம் செபமாலை செபிக்க வேண்டும். குணப்படுத்தலை ஏற்படுத்தும் மிகப்பெரிய கருவி இதுவே என்றும் பேராயர் மேலும் கூறினார்.

## கிழக்கு பல்கலைக்கழகத்தின் முழுநேர விரிவுரையாளராக அருட்பணியாளர் நவாஜி நியமனம்

கிழக்குப் பல்கலைக்கழகத்தில் கிறிஸ்தவ பாடநெறிக்கான முழுநேர விரிவுரையாளராக அருட்பணியாளர் ஏ. ஏ. நவரெட்ணம் (நவாஜி) அடிகளார் நியமிக்கப்பட்டுள்ளார். கடந்த பெப்ரவரி மாதம் 02ஆம் திகதி கிழக்குப் பல்கலைக்கழகத்தில் இவர் தனது கல்வித்துறை வாழ்க்கைப் பயணத்தைத் தொடங்கியுள்ளார்.



கிழக்குப் பல்கலைக்கழகத்தில் கலை கலாச்சாரப் பீடத்தின் புதிய கற்கை நெறியாக இக்கிறிஸ்தவ பாடநெறி கடந்த இரு வருடங்களுக்கு முன் ஆரம்பிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. நவாஜி அடிகளாருக்கு மன்னாவின் செபங்களும் நல்வாழ்த்துக்களும்.

## பொதுநிலையினரின் பொறுப்பும், பங்களிப்பும் நிறைந்து காணப்படும்

# ஒரு சகாப்தத்தில் நாம் வாழ்கின்றோம்

### தேசிய பொதுநிலையினர் தினத்தையொட்டி தேசிய இயக்குனர் செய்தி

கடந்த மே மாதம் 6ம் திகதி அன்று கொண்டாடப்பட்ட தேசிய பொதுநிலையினர் தினத்தையொட்டி பொதுநிலையினர் பணிகளுக்கான தேசிய இயக்குனர் அருட்பணி. லியோ போல் (அமதி) அடிகளார் விடுத்திருக்கும் செய்தியில், திருச்சபையின் பணிகளில் பொதுநிலையினரின் பொறுப்பும், பங்களிப்பும் நிறைந்து காணப்படும் ஒரு சகாப்தத்தில் நாம் வாழ்கின்றோம் எனக் குறிப்பிட்டுள்ளார். அச்செய்தியின் முக்கிய பகுதிகளைக் கீழே தருகின்றோம்.

திருச்சபையின் பணிகளில் பொது நிலையினரின் பொறுப்பும், பங்களிப்பும் நிறைந்து காணப்படும் ஒரு சகாப்தத்தில் நாம் வாழ்கின்றோம். இத்தகைய பொறுப்பும், பங்களிப்பும் திருச்சபையின் நாளாந்த எண்ணத்திலும், பேச்சிலும் எதிரொலித்துக் கொண்டிருக்கின்றது.

திருச்சபையில் பொதுநிலையினர் செயலற்ற பார்வையாளராக, அன்றேல் "செபித்தல், பணம் செலுத்துதல், அமைதல்" என்ற நூற்றாண்டு கால கண்ணோட்டம் மாறிவிட்டது. "19ம் நூற்றாண்டில் படிப்படியாக ஒரு விழிப்புணர்வு ஏற்பட்டது அதன்படி பொதுநிலையினர் தமது திருமுழுக்கினாலும் கிறிஸ்துவில் இணைக்கப் -பட்டமையினாலும் திருச்சபையின் முழுமையான அங்கத்தினர் என்ற கருத்து ஏற்றுக்கொள்ளப்பட்டது. எனவே "பங்கேற்கும் திருச்சபை" என்பது முன்னேற்றகரமான ஒரு பாய்ச்சல் ஆகும். 2ம் வத்திக்கான் சங்க ஏட்டின் திருச்சபை என்னும் கொள்கைத்திரட்டில் கூறியிருப்பதாவது, "திருச்சபையின் நிறைவாழ்வுப் பணியில் பங்குபெறுவதே பொதுநிலையினரின் திருச்சபைப் பணியாகும்."(33). 35வது எண் அனைத்துப் பொதுநிலையினரதும் அப்போஸ்தலிக்க பணியாற்றும் கடமையைப்பற்றி கூறுகின்றது. ஒவ்வொரு சகாப்தத்திலும் வாழும் மனிதருக்கு மீட்பின் இறைத்திட்டத்தை அறிவிக்கவேண்டிய கடமை அவர்கள்மேல் சுமத்தப்பட்டுள்ளது. 2ம் வத்திக்கான் சங்க ஏட்டின் பொதுநிலையினரின் திருத்தூதுப்பணி எனும் கொள்கைத்திரட்டின்படி திருச்சபையின் அனைத்து அங்கத்தவர்களும் இயேசுவால் அளிக்கப்பட்ட பணியை ஆற்றுவதற்கு அழைக்கப்பட்டுள்ளார்கள் என்று கூறுகிறது.

இவ்வேளையில் எமது நாட்டு மக்களுக்கு இறைவனின் குணப்படுத்தும் அன்பை வெளிப்படுத்தும் பணிக்கான தேவை அதிகமாயுள்ளது. இன்று எமது மக்கள் ஏழைகளாக, அடைக்கப்பட்ட நிலையில் துன்புறுகிறார்கள். எமது மக்களிடம் வளமான கலாச்சாரம் இருந்தது. ஆனால் கண்டிப்பான பாரம்பரியங்களால் அது அடிமைப்படுத்தப் - பட்டுள்ளது. எமக்கு மனித வளம் இருந்தது, ஆனால் இனமுரண்பாடுகளால் அது முடக்கப்பட்டுள்ளது. நாம் ஆழமான மதச்சார்புள்ளவர்கள். ஆனால் நுகர்வுக் கலாச்சாரம் மற்றும் உலோகாயுதப்போக்குகளால் ஏமாற்றப்பட்டுள்ளோம்.

நாம் நம்பிக்கையில் திளைத்திருந்தோம். ஆனால் வறுமையின் தாக்கத்தால் கீழே வீழ்ந்து கிடக்கின்றோம். எமக்குப் பலமான குடும்ப விழுமியங்கள் இருந்தன. ஆனால் பொருளாதார நலிவுகளால் வாழ்வில் உடைவுக்கு முகம் கொடுக்கிறோம்.

இத்தகைய பரிமாணங்களைக் கொண்ட இலங்கையரின் வாழ்வில் எமக்கு ஒரு பணி உண்டு. அதாவது கலாச்சாரத்தின் ஊடாக விடுதலையளிப்பதற்கு, சகோதரத்துவத்தினூடாக அமைதியைக் கொண்டுவருவதற்கு, நொறுங் - குண்ட நம்பிக்கையை மீளப்பெறுவதற்கு, சமூக வாழ்வுக்கான விழுமியங்களை மீளக் கட்டியெழுப்புவதற்கு, அடக்கப்பட்டவர்களுடன் துன்புற்று இறைவனின் மீட்பளிக்கும் அன்பாகிய நற்செய்தியை ஏழைகளுக்கு அளிப்பதற்கு எமக்குப் பணி உண்டு.

# தமிழர்களுக்கு இன்று வாழ்வு இல்லை! பாலைவன அனுபவம் அவர்களைச் சூழ்ந்துள்ளது!

## அமதிகளின் யாழ் மாகாண முதல்வர்



தமிழர்களுக்கு இன்று வாழ்வு இல்லை; மாறாக ஒரு பாலைவன அனுபவம் அவர்களைச் சூழ்ந்துள்ளது. தமிழர்களுக்குத் தவக்காலம் என்பது வெறுமனே வருடாந்தம் வரும் நாற்பது நாள் நிகழ்வு அல்ல. மாறாக 1948ம் ஆண்டு தொடக்கம் இடையீடின்றி தொடர்ந்துவரும் நிகழ்வு என அமலமரித் தியாகிகளின் யாழ் மாகாண முதல்வர் அருட்பணியாளர் போல் நட்சத்திரம் அடிகளார் குறிப்பிட்டுள்ளார். 'யாழ்த் தொனி' (ஜனவரி - ஏப்ரல் 2009) என்னும் யாழ் மாகாண அமதிகளின் செய்தி மலருக்கு வழங்கியுள்ள செய்தியிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார். அச்செய்தியில் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது,

இத்தவக்காலம் தமிழ்ச் சமுதாயத்திற்கு முக்கியமானதாக, பொருத்தப்பாடுடையதாக உள்ளது. தமிழ்ச் சமுதாயம் இன்று சமூக, பொருளாதார, சமய வேறுபாடுகளைக் கடந்து பல்வேறு வடிவங்களில் தனது பாஸ்கா மறைபொருளை அனுபவிக்கின்றது. அதாவது, துன்பங்கள், மரணம்; பயம், நம்பிக்கையீனம்; பதட்டம், வெறுமை; கைவிடப்பட்ட நிலை, வேறுபாடு காட்டுதல்; பிரிவினை, தனிமை; ஒருங்கிணைப்பற்ற தன்மை போன்றவையே இந்தப் பாஸ்கா மறைபொருள்களாகும்.

தமிழர்களுக்கு இன்று வாழ்வு இல்லை; மாறாக, ஒரு பாலைவன அனுபவம் அவர்களைச் சூழ்ந்துள்ளது. தமிழர்களுக்குத் தவக்காலம் என்பது வெறுமனே வருடாந்தம் வரும் நாற்பது நாள் நிகழ்வு அல்ல. மாறாக 1948ம் ஆண்டு தொடக்கம் இடையீடின்றி தொடர்ந்துவரும் நிகழ்வு. எமக்கு உயிர்ப்பும் இறைவனின் பிள்ளைகளுக்குரிய சுதந்திரமும் இருக்கின்றதோ இல்லையோ உயிர்த்த இயேசுவில் நாம் எமது வாழ்வை மகிழ்ச்சியோடு வாழ்வோமோ இல்லையோ அது இறைவனுக்கு மட்டும்தான் தெரியும். எப்படியிருந்தாலும் எமது நம்பிக்கையும் விசுவாசமும் இவற்றை நோக்கி ஆழமாக வழிநடத்தப்படட்டும். இந்தச் சந்தர்ப்பத்தில் சவால்விடுக்கக்கூடிய சில வினாக்கள் எம்மை நோக்கி எழுப்பப்படுகின்றன. நாமும் ஏனையவர்களும் அனுபவிக்கும் பாஸ்கா அனுபவம் எமது சொந்தப் பாவநிலை மற்றும் சுயநலம் ஆகியவற்றிலிருந்து எம்மைத் தூய்மைப்படுத்தியுள்ளதா? அவை இறைவனிடமும் ஏனையோரிடமும் எம்மை நெருக்கமாகக் கொண்டுசேர்த்துள்ளதா? கடுமையாகத் துன்புறுகின்றவர்களின் தேவைகள் மட்டில் நாம் உணர்வுள்ள சிறந்த மனிதர்களாக அன்றேல் துறவிகளாக இருக்க அவை எம்மை மாற்றியமைத்திருக்க வேண்டும். எமது சொந்த வரையறைகள் மற்றும் இறைவனிடத்தில் தங்கியிருத்தல் ஆகியவை மட்டில் நாம் உணர்வுள்ளவர்களாயிருக்க எமக்கு அவை உள்ளுணர்வை அளித்திருக்க வேண்டும். எமது சமுதாயத்தை அழிக்கும் தீமைகளை எடுத்துரைக்கக்கூடிய துணிவுள்ள இறைவாக்கினர் -களாகவும் பொருத்தமான நற்செய்தியாளர் - களாகவும் எம்மை மாற்றியமைத்திருக்க வேண்டும். நாம் சமூக நீதிக்காக உழைப்பவர் களாகவும் அதிகம் தாக்கத்திற் குள்ளானவர்களுடன் எம்மை இனம்காணவும் கூடிய ஒரு சக்திமிக்க ஆன்மீகத்தை அவை எம்மில் உருவாக்கியிருக்க வேண்டும். நாம் குரலற்றவர்களின் குரலாக ஒலிப்பதற்குரிய சக்தியையும் தைரியத்தையும் அவை எமக்கு அளித்திருக்க வேண்டும். ஆனால் இவற்றிற்கு மாறாக, நாம் எரிந்துகொண்டிருக்கும் இந்தப் பிரச்சினைகளைக் கண்டு தப்பி ஓடுகிறோம். குருக்கள் துறவிகள் என்ற மட்டில் எமது பொறுப்புக்களைத் தட்டிக்கழிக்கின்றோம்.

கிறிஸ்துவின் பாஸ்கா மறைபொருள் (பாடுகள், மரணம், உயிர்ப்பு) எமக்கு வாழ்வை முழுமையாக அளித்துள்ளது; பாவத்திலிருந்து விடுதலை அளித்துள்ளது; எம்மை இறைவனின் பிள்ளைகள் ஆக்கியுள்ளது. ஆகவே எமது சொந்தப் பாஸ்கா மறைபொருள் எம்மைக் கிறிஸ்துவைப்போல் ஆக்க வேண்டும். கிறிஸ்துவைப்போல் ஆவதற்கு நாம் எமது சொந்தச் சிலுவைகளைச் சுமக்கவேண்டும்; இந்தச் சிலுவைகள் தரும் வேதனைகளையும் துன்பங்களையும் நல்மனதுடன் ஏற்க வேண்டும். துன்பங்களும் வேதனைகளும் எமக்கு நம்பிக்கையீனத்தைத் தரும். ஆனால் அவற்றை இயேசுவின் மனநிலையின் ஒளியில் விளங்கிக் கொள்வோமானால் அவை எம்மைத் தூய்மைப்படுத்தி எமக்கு விடுதலை அளிக்கும்.

## அமதிகளின் செய்திகள் சில வரிகளில் ........

- அருட்பணியாளர் ஸ்ரனிஸ்லோஸ் சுவாம்பிள்ளை (அமதி) அவர்கள் பிலிப்பைன்ஸ் மனிலாவில் தனது பயிற்சிநெறியை யூன் மாத முடிவில் நிறைவுசெய்கிறார்.

- திருகோணமலை ஜே.ஆர்.எஸ். இணைப் - பாளராகப் பணிபுரியும் அருட்பணி. யூஜின் பெனடிக்ற் (அமதி) அவர்கள் பல்வேறு செயற்திட்டங்களை வெற்றிகரமாக நிறைவேற்றி யுள்ளார். யூன் மாத இறுதியில் திருமணம் மற்றும் குடும்பம் இறையியல் பற்றிய உயர் கல்வியை மேற்கொள்ள உரோமைக்குச் செல்ல உள்ளார்.

- தனது உயர் கல்வி ஆய்வறிக்கையை வெற்றிகரமாகச் சமர்ப்பித்த அருட்பணியாளர் ஏ. எவ். தேவராஜா (அமதி) அவர்கள் நாடு திரும்பியவுடன் வவுனியா அமதிகள் இல்லத்தின் தலைமைப் பொறுப்பை ஏற்றுக்கொள்வார்.

- அருட்பணி. பி. பெனிக்னஸ் அவர்கள் வன்னியின் தற்போதைய சூழ்நிலையால் அன்பகம் சிறுவர் இல்லத்தின் பொறுப்பை ஏற்கமுடியாத நிலையில் தற்போது மறையுரைஞர் குழுவில் இணைந்து இறைவார்த்தையை அறிவிக்கும் பணியில் ஈடுபட்டுள்ளார்.

- அருட்பணியாளர் ஏ. பி. வின்சன் (அமதி) அவர்கள் தனது கற்பித்தல் பணியோடு CATWAS எனப்படும் கணனி நிலையத்தின் இயக்குனராகவும் நியமிக்கப்பட்டுள்ளார்.

- அருட்பணி. வின்சன்ற் பற்றிக் (அமதி) மன்னாரின் CRADA என்ற அமைப்பின் இயக்குனராக நியமிக்கப்பட்டுள்ளார். அருட்பணி. ஜேசுராஜன் அவர்கள் இவருக்கு உதவியாக நியமிக்கப்பட்டுள்ளார்.

## அமதிகளின் யாழ் மாகாணச் செய்திகள்

Omi news letter

### சர்வதேச குருத்துவ பயிற்சியகம்

இவ்வாண்டு மார்ச் மாதம் 6ம் திகதி முதல் பாங்கொக்கில் இறுதியாக நடைபெற்ற AORC கூட்டத்தின் தீர்மானத்திற்கு இணங்க 2011ம் ஆண்டு மனிலாவில் சர்வதேச குருத்துவ பயிற்சியகம் (The International Scholasticate) ஏற்படுத்தப்படவுள்ளது. ஒவ்வொரு மாகாணப் பிரிவும் இரண்டு மாணவர்களை இந்தப் பயிற்சியகத்திற்கு இறையியற் கல்விக்காக அனுப்பவேண்டுமென எதிர்பார்க்கப்படுகிறது.

### சங்கமத்தின் தற்காலிக இயக்குனராக லொசிங்கரன் அடிகளார்

முழங்காவிலில் இயங்கிவந்த அன்பகம் என்ற சிறுவர் இல்லத்தின் இயக்குனராக நான்கரை ஆண்டுகள் இருந்து அச்சிறுவர்களின் உருவாக்கத்தில் தன்னை முழுமையாக அர்ப்பணித்து உழைத்த அருட்பணியாளர் ஏ. எவ். லொசிங்கரன் அவர்கள் தற்போதைய இராணுவ நடவடிக்கையால் பல்வேறு இடங்களுக்கும் இடம்பெயர்ந்து இறுதியாக 2008 டிசம்பர் மாதத்தில் வன்னியைவிட்டு வெளியே வந்தார்.

தற்போது இவர் கோப்பாயில் உள்ள சுனாமியால் பாதிக்கப்பட்ட குழந்தைகளின் இல்லமான சங்கமம் இல்லத்தின் தற்காலிக இயக்குனராக நியமிக்கப்பட்டுள்ளார்.

### ஆற்றுப்படுத்தல் பணியில் செபஸ்ரியன் அடிகளார்

கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவு மாவட்டங்களின் அமதிகள் முதல்வராகவும் 'ஞானவழி'யின் இயக்குனராகவும் பணியாற்றிய அருட்பணி. எஸ். எம். செபஸ்ரியன் (அமதி) அவர்கள் தற்போதைய இராணுவ நடவடிக்கை காரணமாக பல்வேறு நெருக்கடிகள், துன்பங்களுக்கு முகம்கொடுத்த நிலையில் இறுதியாக வவுனியாவுக்கு வருகை தந்துள்ளார்.

இவர் தற்போது வவுனியா தெற்கு இலுப்பைக்குளத்தில் அருட்பணி. ஜேசுராஜனுடன் தற்காலிகமாகத் தங்கியிருந்து வன்னியிலிருந்து இடம்பெயர்ந்து வரும் மக்களுக்கு தனது ஆற்றுப்படுத்தல் மற்றும் உளவியல் சார்ந்த சமூகப் பணிகளை மேற்கொள்கின்றார்.

### நம்பிக்கையில் ஒன்றிணைந்த பயணம்

அ.ம.தி.களின் யாழ் மாகாண புதுப்பித்தல் நிகழ்ச்சித்திட்டம், "எமது பணிக்கு அர்த்தம் கொடுப்பவராகிய இயேசுகிறிஸ்துவை மையமாகக்கொண்டு மிகவும் ஆழமான விதத்தில் தனிப்பட்ட குழு மாற்றத்திற்கு நாம் எம்மை அர்ப்பணிக்கின்றோம்." என்ற தலைப்பில் 2009 ஆகஸ்ட் 5-15 வரை நடைபெறும்.

### கற்வோஸ் குழுமம் – கணனி நிலையம்

இந்நிலையத்தின் 7வது பட்டமளிப்பு விழா 2009 மார்ச் 15ம் நாள் நடைபெற்றது. இந்நிகழ்வில் அ.ம.தி. களின் யாழ் மாகாணத் தலைவர் அருட்பணி. எம். போல் நட்சத்திரம் அடிகளார் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டார். இவர் தனது உரையில் அ.ம.தி.களுடைய அருங்கொடையின் உண்மையான அடையாளத்தை இந்த நிலையம் முன்னெடுத்துச் செல்கிறது என்று கூறினார். சிறப்பு விருந்தினராக அருட்பணி. ஏ. எச்.வேதநாயகம் (அமதி) அடிகளார் கலந்துகொண்டார். இந்த நிகழ்ச்சித்திட்டத்தை அமுல்படுத்துவதற்கு நான்கு திறமைமிக்க உறுப்பினர்களைக்கொண்ட ஒரு குழு நியமிக்கப்பட்டுள்ளது. அ.ம.தி.களின் அருங்கொடை இளைஞர் பணியை மேலாக மதிக்கிறது.

### நித்திய வாக்குத்தத்திற்கு இணைந்த ஆயத்தம்

அமதிகளின் யாழ் மாகாணத்தைச் சேர்ந்த 11 குருத்துவ மாணவர்கள் (Scholastics) கொழும்பு மாகாண வேட்பாளர்களோடு (Candidates) இணைந்து தமது நித்திய வாக்குத்தத்தத்திற்கான ஆயத்தத்தில் ஈடுபடவுள்ளனர். இதற்கான ஆரம்ப அமர்வுகள் ஆகஸ்ற் மாதத்தில் கண்டி அம்பிட்டிய அமதிகள் குருமடத்தில் இடம்பெறும்.

# உலகத் திருச்சபைச் செய்திகள்

## உயிர்ப்பு என்பது வெறும் வார்த்தைத் தத்துவமல்ல,

# அது மண்ணுக்கும் விண்ணுக்கும் இடையே

# புதிய பாதையைத் திறந்த ஒரு வரலாற்று உண்மை!

### உயிர்ப்பு விழா அன்று 'உரோம் நகருக்கும் உலகுக்குமான' வாழ்த்துச் செய்தியில் திருத்தந்தை

உயிர்ப்பு என்பது வெறும் வார்த்தைத் தத்துவமல்ல. அது மண்ணுக்கும் விண்ணுக்கும் இடையே புதிய பாதையைத் திறந்த ஒரு வரலாற்று உண்மை. இது தனித்துவம் நிறைந்த நிகழ்வு. கல்லறையிலிருந்து வெற்றியுடன் வெளியேறிய நிகழ்வு என திருத்தந்தை 16ம் பெனடிக்ற் அவர்கள் தனது உயிர்ப்புவிழாச் செய்தியில் தெரிவித்தார். பாரம்பரிய நடைமுறையைப் பின்பற்றி உயிர்ப்புப் பெருவிழா நண்பகல் புனித பேதுரு பசிலிக்கா பேராலய வளாகத்தில் கூடியிருந்த ஒரு இலட்சத்திற்கும் மேற்பட்ட விசுவாசிகளுக்கு வழங்கிய 'உரோமை நகருக்கும் உலகுக்குமான' (Urbi et Orbi) செய்தியில் அவர் மேலும் தெரிவித்ததாவது,

சாவுக்குப்பின் என்ன என்ற கேள்வி மனிதர்களை அதிகம் அதிகமாக ஆக்கிரமிக்கிறது. மரணம் என்பது இறுதி வார்த்தையல்ல, வாழ்வே இறுதியில் வெல்லும் என்பதை எடுத்துரைக்க இன்றைய பெருவிழா நமக்கு உதவுகின்றது. இயேசுக் கிறிஸ்து சிலுவையில் அறையப்பட்டு, அடக்கப்பட்டு, மகிமைநிறை உடலோடு உயிர்த்தெழுந்த வரலாற்று உண்மையை இவ்விழா அடிப்படையாகக் கொண்டது. இயேசுவில் நம்பிக்கைக் கொண்டுள்ள நாமும் முடிவற்ற வாழ்வைப் பெறும்பொருட்டு உயிர்த்தெழுவோம். இயேசு உயிர்த்தெழுந்தார். இதுவே நற்செய்தியின் மையப்பகுதி. புனித பவுல் கூறுவது போல, இயேசு உயிர்த்தெழவில்லையெனில் நம் போதனைகளும் வீண், நம் விசுவாசமும் வீணே.

உயிர்ப்பு என்பது வெறும் வார்த்தைத் தத்துவமல்ல. அது மண்ணுக்கும் விண்ணுக்கும் இடையே புதிய பாதையைத் திறந்த ஒரு வரலாற்று உண்மை. இது தனித்துவம் நிறைந்த நிகழ்வு. கல்லறையிலிருந்து வெற்றியுடன் வெளியேறிய நிகழ்வு.



இயேசுவின் உயிர்ப்பைக் குறித்த அறிவிப்பு நாம் வாழும் இவ்வுலகின் இருண்ட பகுதிகளை ஒளிர்விப்பதாக உள்ளது.

லோகாயுதப் போக்குகள் நிறைந்த இவ்வுலகைப்பற்றிக் குறிப்பிடுகிறேன். லோகாயுதப் போக்குகளால் நம்பப்படும் ஒருவித வெறுமை உணர்வையே மனித வாழ்வின் நோக்காகக் கொண்டுள்ளோம். இயேசு உயிர்க்கவில்லை - யெனில் இந்த வெறுமை நிலையே அனைத்தையும் ஆக்கிரமித்திருக்கும்.

உயிர்ப்பு நாள் அன்று அனைத்தும் புதுப்பிக்கப்பட்டன. இதனை ஏற்பவர்களின் வாழ்வை இந்தப் புதிய நிலை மாற்றுகிறது. புனிதர்களின் வாழ்விலும், புனித பவுலின் வாழ்விலும் இதுவே நிகழ்ந்தது எனத் திருத்தந்தை மேலும் தெரிவித்தார்.

## திருத்தந்தையின் புனித வார வழிபாடுகள்

### ஓர் கண்ணோட்டம்

புனித வியாழனன்று கிறிஸ்துவின் இறுதியுணவை நிறைவேற்றிய திருத்தந்தை தன் உரையில், கிறிஸ்து சாதாரண உணவைத் தன்னோடு ஒன்றிணைக்கும் ஆன்ம உணவாய் மாற்றினார், உயிர்ப்பின் உலகமாக, கடவுளின் உலகமாக இவ்வையகத்தை மாற்றுவதன் தொடக்கம் இதுவென்று ஆக்கினார் என்றார்.

புனித வெள்ளியன்று திருப்பாடுகளின் நினைவுச் சடங்குகளை நிறைவேற்றிய திருத்தந்தை, அன்றிரவு 'கோலொசீயம்' அரங்கில் சிலுவைப்பாதைப் பயணத்தை நடத்தினார். கிறிஸ்தவர் என்ற ஒரே காரணத்துக்காக் கடும் துன்பங்களையும் சாவையும் சென்ற ஆண்டு சந்தித்த இந்தியச் சமுதாயம் கிறிஸ்து ஒருவராலேயே நம்பிக்கையைக் கைவிடாமல் இருக்கிறது என்பதை இந்தியாவின் குவகாத்தி பேராயர் எழுதிய உரைகள் பிரதிபலித்தன. கிறிஸ்துவின் பாடுகள் அவர் நம்மீது கொண்ட அன்பைக் காட்டுகின்றன. நம்முடைய எல்லாத் துன்பங்களையும் அவர் அனுபவித்திருக்கிறார். அதேவேளையில், துன்பம் காணும் வெள்ளி வெற்றியின் உயிர்ப்பு ஞாயிறை நோக்கி - யிருக்கிறது என நம் விசுவாசம் சொல்கிறது என திருத்தந்தை கூறினார்.

நள்ளிரவில் பேராலயத்தில் அவர் நடத்திய உயிர்ப்பு நாள் புனித சடங்குகளில் பல்லாயிரம்பேர் எரியும் மெழுகுதிரிகளைப் பிடித்துப் பங்கேற்றார்கள். இத்தாலி, சீனா அமெரிக்க ஐக்கிய நாடுகளைச் சேர்ந்த ஐந்து பேர் அவரிடம் திருமுழுக்குபெற்றுக் கத்தோலிக்கத் திருச்சபையில் சேர்ந்தார்கள். உயிர்த்த கிறிஸ்துவே இன்றைய சூழ்நிலையில் மனக்குழப்பத்தில் வாடிவரும் மனித சமுதாயத்திற்கு ஒளியும் வாழ்வுதரும் ஊற்றுமாகும் என அவர் மேலும் தெரிவித்தார்.

காலையில் வளாகத்தில் நடாத்திய திருப்பலியில் எல்லாக் கிறிஸ்தவர்களையும் பழைய பாவ வழியை இன்னும் விட்டுவிடாத இவ்வுலகை மாற்றியமைக்கும் 'புளிப்பு மாவாக' மாற அறைகூவல் விடுத்தார்.

## கிறிஸ்துவோடு ஒன்றிணைந்து நடக்காமல் இருந்தால்

# நமது வாழ்வு வெற்றிக்கனியை எட்டாது

### இளையோருக்கான செய்தியில் திருத்தந்தை

திருச்சிலுவையை ஏற்காமலும் ஒவ்வொரு நாளும் கிறிஸ்துவோடு ஒன்றிணைந்து நடக்காமலும் இருந்தால் நமது வாழ்வு வெற்றிக்கனியை எட்டாது என திருத்தந்தை 16ம் பெனடிக்ற் அவர்கள் இளையோரிடம் கூறினார்.

குருத்து ஞாயிறன்று மறைமாவட்ட அளவில் சிறப்பிக்கப்பட்ட 24ம் சர்வதேச இளையோர் தினத்தை முன்னிட்டு வத்திக்கான் புனித பேதுரு வளாகத்தில் ஏறத்தாழ நாற்பதாயிரம் விசுவாசிகளுக்குத் திருப்பலி நிகழ்த்தி மறையுரை ஆற்றியபோதே திருத்தந்தை இவ்வாறு கூறினார்.

அன்பு நண்பர்களே, இயேசுவைக் காண வேண்டுமென்ற காரணத்திற்காக நாம் இங்குக் குழுமியுள்ளோம் என்றுரைத்த திருத்தந்தை, இதே நோக்கத்திற்காக இலட்சக்கணக்கான இளையோர் கடந்த ஆண்டு சிட்னி சென்றார்கள் என்றார்.

இந்தத் திருப்பலியின் இறுதியில் சர்வதேச இளையோர் தினத் திருச்சிலுவையை, ஆஸ்திரேலிய இளையோர், ஸ்பெயின் இளையோரிடம் கொடுப்பார்கள் என்று அவர் கூறினார். இந்தத் திருச்சிலுவை உலகின் ஒரு பகுதியிலிருந்து அடுத்த பகுதிக்கு கடல் கடந்து வந்துள்ளது. அதன் பாதையில் நாம் செல்லும்போது நமது பாதையைக் கண்டு கொள்கிறோம். உண்மையில் அச்சிலுவையை நாம் தொடும்பொழுதும், அதனைத் தூக்கும்பொழுதும் இறைவனின் மறைபொருளை, இயேசுக் கிறிஸ்துவின் பேருண்மையைத் தொடுகிறோம் என்ற அவர், மீட்பளிக்கும் ஒரே உண்மையாகிய கடவுளன்பின் பேருண்மையைத் தொடுகிறோம் என்றார்.

திருச்சிலுவையை ஏற்காமலும் ஒவ்வொரு நாளும் கிறிஸ்துவோடு ஒன்றிணைந்து நடக்காமலும் இருந்தால் நமது வாழ்வு வெற்றிக்கனியை எட்டாது என்றும் உரைத்த திருத்தந்தை, இந்த இறையன்பிற்காகச் சில தியாகங்கள் செய்தால் நமது வாழ்வு வளமடையும் என்றும் கூறினார்.

"தமக்கென்றே வாழ்வோர் தம் வாழ்வை இழந்து விடுவர். இவ்வுலகில் தம் வாழ்வைப் பொருட்டாகக் கருதாதோர் நிலைவாழ்வுக்குத் தம்மை உரியவராக்குவர்" என்ற திருத்தந்தை நாம் உடனடியாகச் செயற்படுத்த வேண்டிய உண்மையானது நமக்கு விடுதலையளிக்கும் என்று குறிப்பிட்டார். நம்மைக் கடவுளுக்கு அர்ப்பணிப்பதற்கு இயேசுவின் வாழ்வும் மரணமும் உயிர்ப்பும் உத்தரவாதம் அளிக்கின்றன, இவ்வாறு அவரது அரசு நிஜமாகின்றது என்றும் திருத்தந்தை குருத்தோலை ஞாயிறு மறையுரையில் கூறினார்.

## ஆபிரிக்கப் பயணம் தொடர்பான தன் மன உணர்வுகளை

# திருத்தந்தை வெளிப்படுத்துகிறார்

ஆபிரிக்காவுக்கான என் முதல் அப்போஸ் - தலிக்கத் திருப்பயணம் காமரூன் நாட்டில் தொடங்கியது. அங்கு பல்வேறு கத்தோலிக்கக் குழுக்களையும் முஸ்லீம் சமூகப் பிரதிநிதிகளையும் சந்தித்து மகிழ்ந்தேன். அந்நாட்டின் ஆழமான சமய உணர்வும், அந்நாட்டுக் குடிமக்கள் அமைதியில் வாழவும் ஒன்றிணைந்து பணிசெய்யவும் கொண்டுள்ள ஆர்வமும் என்னை மிகவும் கவர்ந்தன.

காமரூன் நாட்டில் பயணத்தை நிறைவுசெய்து அங்கோலா சென்றேன். அந்நாடு நீண்ட கால உள்நாட்டுச் சண்டைக்குப்பின் ஒப்புரவுக்காகவும் நாட்டை மீண்டும் கட்டி எழுப்பவும் தொடர்ந்து கடும் முயற்சி செய்து வருகிறது.

இப்பணியில் தங்களது பங்கை அளிப்பதற்கு அனைத்து அங்கோலியர்களையும், சிறப்பாக இளையோரின் மனச்சாட்சிகளை உருவாக்கு - வதன் வழியாக இதில் ஈடுபடுமாறு ஊக்கப்படுத்தினேன்.

அந்நாட்டில் நான் பயணம் மேற்கொண்ட போது, குருத்துவ மாணவர்கள், வேதியர்கள், மகளிர் அமைப்புகள், இளையோர் மற்றும் பலரைச் சந்திக்க வாய்ப்புக் கிடைத்ததை நன்றியோடு நினைக்கிறேன். Instrumentum Laboris என்ற ஆபிரிக்காவுக்கான இரண்டாவது சிறப்பு ஆயர் மாமன்றத்திற்கான விவாதத் தொகுப்பு ஏட்டை வெளியிட்டது என இத்திருப்பயணத்தில் குறிப்பிட்டுச் சொல்லும்படியான தருணமாக இருந்தது.

(தொடர்ச்சி 19ம் பக்கம்)

# குருத்துவ மாணவர்கள்

## 2ம் வத்திக்கான் சங்க ஏடுகளை வாசிப்பதற்குப்

# பயிற்றுவிக்கப்பட வேண்டும்

கடந்த மார்ச் மாதம் 16ம் நாள் இடம்பெற்ற குருக்களுடனான சந்திப்பின்போது திருத்தந்தை குருத்துவ மாணவர்களுக்கான உருவாக்கத்தின் முக்கியத்துவத்தைப் பற்றி குறிப்பிட்டார்.

"உடைபடாத பயிற்சியைத் தாமதப்படுத்தும் அன்றேல் நிறுத்திவைக்கும் சோதனைக்கு உட்படாதிருக்க குருத்துவ மாணவர்களுக்கு - தைரியமூட்ட வேண்டும். குருத்துவக் கல்லூரி மாணவர்கள் "திருச்சபைக் கோட்பாட்டு மரபுகளின் ஒளியில்" விளக்கப்பட்டுள்ள 2ம் வத்திக்கான் சங்க ஏடுகளைத் தகுந்த முறையில் வாசிப்பதற்கு பயிற்றுவிக்கப்பட வேண்டும் என்று திருத்தந்தை மேலும் கூறினார்.

குருத்துவத்தின் மறையறிவிப்பு அடையாளத்தைப் பலப்படுத்துவதன் தேவையை அழுத்திக்கூறிய திருத்தந்தை குருத்துவப் பணியின்றி ஆற்றக்கூடிய மேய்ப்புப்பணித் திட்டங்களின் சாத்தியகூறுகளுக்கு எதிராக எச்சரிக்கை விடுத்தார். இத்தகைய திட்டங்கள் குருத்துவப்பணியை மேலும் பலவீனப் - படுத்துவதற்கு அத்திவாரமிடும்.

குருக்களில்லாத பங்குகளுக்கான திட்டங்களைத் தெளிவாக ஆலோசித்தல் வேண்டும். குருக்கள் அதிகளவு பற்றாக் குறையாயுள்ள பிரதேசங்களில் இத்தகைய பற்றாக் குறையைச் சமாளிப்பதற்கு மேற்கொள்ளப்படும் முயற்சிகள் உண்மையிலேயே பிரச்சினையை மேலும் மோசமடையச் செய்யும் என்று திருத்தந்தை எச்சரிக்கை விடுத்தார்.

## கத்தோலிக்க திருச்சபையின் ஆயர்கள், குருக்கள்,

## இறைமக்களின் எண்ணிக்கையை வெளிப்படுத்தும்

# கத்தோலிக்க ஆண்டறிக்கை –2008

வத்திக்கான் செயலர் கர்தினால் தார்சியோ பெர்த்தோனே, பேராயர் பெர்னான்டோ பிலோனி ஆகியோர் 2009 ஆம் ஆண்டிற்கான "திருப்பேராய ஆண்டறிக்கையை" திருத்தந்தை பதினாறாம் பெனடிக்ட் அவர்களிடம் ஒப்படைத்தனர்.

அதன்படி 2008ஆம் ஆண்டு திருத்தந்தை ஓர் உயர் மறைமாவட்டத்தையும், பதினொரு புதிய மறைமாவட்டங்களை உருவாக்கியுள்ளார். மேலும் நான்கு உயர் மறைமாவட்டங்களும் இரண்டு புதிய மறைமாவட்டங்களும் ஒரு அப்போஸ் - தலிக்க மறைமாவட்டமும் உருவாக்கப்படவுள்ளது. 169 ஆயர்கள் புதிதாக நியமிக்கப்பட்டுள்ளனர்.

உலகம் முழுவதும் 2006 ஆம் ஆண்டு கணக்கெடுப்புப்படி 113 கோடியே 10 லட்சமாக இருந்த கத்தோலிக்கர்களின் எண்ணிக்கை 2007 ஆம் ஆண்டு 114 கோடியே 70 லட்சமாக மிகக்குறைந்த வீதத்தில் உயர்ந்துள்ளது. உலகம் முழுவதும் ஆயர்களின் எண்ணிக்கை 2006 ஆம் ஆண்டில் 4,898 ஆக இருந்தது. 2007 ஆம் ஆண்டில் 4,946 ஆக உயர்ந்துள்ளது. உலகம் முழுவது உள்ள கத்தோலிக்க குருக்களின் எண்ணிக்கை 2000 ஆம் ஆண்டில் 4 இலட்சத்து 5 ஆயிரத்து 178ஆக இருந்தது. ஆனால் 2007 ஆம் ஆண்டில் 4 லட்சத்து 8 ஆயிரத்து 24ஆக உயர்ந்துள்ளது. ஆனால் இதற்கு முந்தைய இருபது ஆண்டுகளின் மிகவும் கடுமையான சரிவைச் சந்தித்த குருக்களின் எண்ணிக்கை சாதுரியமாக உயர்ந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

ஆபிரிக்காவில் 21.2 விழுக்காடும் ஆசியாவில் 27.6 விழுக்காடும் முறையே உயர்ந்துள்ளது. ஆனால் அமெரிக்காவில் குருக்களின் எண்ணிக்கை நிலையாக, மாறாமல் உள்ளது. ஆனால் ஐரோப்பாவில் 6.8 விழுக்காடு, ஓசியானியாவில் (அவுஸ்ரேலியா உள்ளிட்ட) 5.5 விழுக்காடு சரிவு ஏற்பட்டுள்ளது. ஆசியாவில் மட்டும் இக்கால கட்டத்தில் 1.7 வளர்ச்சி இருந்தது.

உலகம் முழுவதிலும் உள்ள கத்தோலிக்க கிறிஸ்தவர்களின் எண்ணிக்கை மாறாமல் நிலையாக உள்ளது. உலகில் உள்ள மக்கள் தொகையில் கத்தோலிக்க கிறிஸ்தவர்களின் எண்ணிக்கை 17.3 விழுக்காடாகும்.

### தமிழர்களாகிய எமக்கு இது முக்கியமான காலம்!

# விடை தெரியாத கேள்விகளோடு இருக்கின்ற நாம் ஆவியானவரின் ஆட்கொள்தலுக்காகக் காத்திருப்போம்

**பாதுகாவலன் பத்திரிகையின் ஆசிரியர் அருட்பணி. ஜெபரட்ணம்**

தமிழர்களாகிய நமக்கு இது முக்கியமான காலம். விடைதெரியாத பல கேள்விகளோடு இருக்கும் நாம் தூய ஆவியானவரின் ஆட்கொள்தலுக்காகக் காத்திருப்போம் என பாதுகாவலன் பத்திரிகையின் ஆசிரியரும் யாழ். புனித பிரான்சிஸ் சவேரியார் உயர் குருத்துவக் கல்லூரியின் உப அதிபருமாகிய அருட்பணியாளர் ப. யோ. ஜெபரட்ணம் அடிகளார் தெரிவித்தார்.

கடந்த ஏப்ரல் 26ம் திகதி வெளியிடப்பட்ட பாதுகாவலன் பத்திரிகையின் 'எமது எண்ணம்' என்ற ஆசிரிய தலையங்கத்திலேயே அவர் இந்தக் கருத்துக்களைத் தெரிவித்திருக்கின்றார்.

ஆவியின் அபிசேகம்தான் முதல் திருச் - சபையை உயிரோட்டமுள்ள திருச்சபையாக மாற்றியது. கதவுகளை மூடி அக்கினி அபிசேகத்திற்காக சீடர்கள் செபத்தில் நிலைத்திருந்த இக்காலத்தின் முக்கிய - த்துவத்தை நாம் இன்று மறந்துவிடக்கூடாது. நாம் இனி வாழப்போகும் வாழ்வை நெறிப்படுத்தும் வல்லமையின் ஆவியான - வருக்காக மரியன்னையோடு இணைந்து ஆழமான செப வாழ்வுக்குள் நிலைத் - திருப்போம்.

இன்று எமக்கு தூய ஆவியாரின் அருட்பொழிவு இன்னும் அபரிமிதமாக வேண்டும். ஏனென்றால் தமிழ் மக்களாகிய எமது வரலாற்றில் இக்காலம் மிக முக்கியமானது. இன்று நடக்கின்ற விடயங்கள் எமக்கு நன்றாகத் தெரியும். ஆனால் அதன் அர்த்தங்கள் எமக்குப் புரிந்துகொள்ள முடியாதவை. இன்றைய நிலையை எவ்வாறு புரிந்துகொள்வது? இனி எப்படியான நடவடிக்கையில் இறங்குவது? எமது எதிர்காலம் எப்படியாக அமையப்போகிறது. அதற்கு எமது பங்களிப்பு எப்படியானதாக இருக்கவேண்டும்? இதுவரை நடந்து முடிந்துவிட்ட துன்ப வரலாற்றினை எவ்வாறு விளக்குவது? போன்ற பல விடைதெரியாத கேள்விகளோடு நாம் இன்று இருக்கின்றபோது எமக்குத் தேவையானவர் தூய ஆவியானவர்தான்.

அவர்தான் நம்மை உண்மையின் வழியில் நடத்திச்செல்லக்கூடியவர். எனவே எமது உணர்வுகளுக்கு மட்டும் அடிமைப்பட்டு அவ்வறிவின் அடிப்படையில் பேசிக்கொண்டும், செயற்பட்டுக்கொண்டும் தொடர்ந்தும் தவறான எதிர்காலத்தைத் தேடாமல், சரியான, தெளிவான உண்மையின் வழியைக் காட்டும் தூய ஆவியானவரின் அபிசேகத்தைப் பெற முயற்சிப்போம்.

"உங்கள் எண்ணங்கள் எனது எண்ணங்களல்ல" என்ற இறைவனின் வார்த்தையை ஏற்றுக்கொண்டு அவருடைய எண்ணங்கள் எம் வாழ்வில் செயல்களாக வெளிப்பட அவருடைய ஆவியின் ஆட்கொள்-தலுக்காகக் காத்திருப்போம். தமிழ் மக்களாகிய நாம் எமது எதிர்காலத்தை இனியாவது தூய ஆவியானவரின் பொறுப்பில் ஒப்படைப்போமா? எல்லாவற்றுக்கும் அவரிலேயே தங்கியிருப்போமா? என ஜெபரட்னம் அடிகளார் குறிப்பிட்டுள்ளார்.

தூய ஆவியே வாரும்!



## பாவத்தை எதிர்த்து போராட வேண்டியவர்கள்

**இளையோர் மத்தியில் போல் றொபின்சன் அடிகள்**



இளையோராகிய நீங்கள் இயேசுவுக்குச் சொந்தமானவர்கள். இயேசுவால் அபிசேகம் செய்யப்பட்டவர்கள். ஆகவே இயேசுவுக்காக தீமையை, பாவத்தை எதிர்த்துப் போராட வேண்டியவர்கள் என திருகோணமலை-மட்டக்களப்பு மறைமாவட்டக் குருவும் புனித யூதாததேயு திருத்தலத்தின் பங்குத்-தந்தையுமாகிய அருட்பணியாளர் போல் றொபின்சன் அடிகளார் குறிப்பிட்டார்.

கடந்த ஏப்ரல் மாதம் 15ம் திகதி யாழ்ப்பாணம் சென். பற்றிக்ஸ் கல்லூரி மண்டபத்தில் இளைஞர் யுவதிகளுக்கென பிரத்தியேகமாக நடைபெற்ற இறை தியான வழிபாட்டில் அருளுரையாற்றியபோதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

இவ்வழிபாட்டில் யாழ் குடாநாட்டின் எல்லா இடங்களிலிருந்தும் ஏறக்குறைய ஆயிரம் யுவதிகளும்
ஐநூறு வரையிலான இளைஞர்களும் கலந்து பயனடைந்தார்கள்.

காலை 9.00 மணி முதல் மாலை 5.00 மணி வரை நடைபெற்ற இவ்வழிபாட்டை யாழ் மறைமாவட்ட இளையோர் ஆணையம் ஒழுங்குசெய்திருந்தது.

# மன்னார் பிரதேசச் செய்திகள்

## இளைஞர் சேவைகள் மன்றத்திற்குக் கணனிகள்

மன்னார் தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்திற்கு 10 கணனிகள் கிடைக்கவுள்ளதாக மன்றத்தின் உதவிப் பணிப்பாளர் ஜனாப் ஏ. என். எம். முணவ்வர் கூறினார்.

மன்னார் தேசிய இளைஞர் சேவைகள் மன்றம் அண்மையில் புதிய அலுவலகத்திற்குக் குடிபெயர்ந்தது. சகல வசதியுடன்கூடிய இம் மண்டபத்தைப் பார்வையிட வந்திருந்த தேசிய இளைஞர் மன்றத்தின் தலைவர் திரு. பாஸ்வர சேனாங்க குணரத்ன அவர்களுக்கு தேசிய இளைஞர் சேவை மன்றத்தின் ஊழியர்களாலும், இளைஞர் யுவதிகளாலும் அளிக்கப்பட்ட வரவேற்பின் இறுதியில் கணனித் தொகுதிகளை விரைவில் ஒப்படைப்பதாக அவர் உறுதியளித்தார். இவ்வைபவத்தில் மன்னார் நிஸ்கோ முகாமையாளர் திரு. ஜோன் பொஸ்கோ, வவுனியா பிரதேச உதவிப் பணிப்பாளர் சிவதட்சனாமூர்த்தி ஆகியோர் கலந்துகொண்டனர். எம். ஏ. காதர்

## மன்னாரில் மினி கோப் சிற்றிகள்

மன்னார் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் மூன்று மினி கோப் சிற்றிகளை விரைவில் திறக்கவுள்ளது. இத்தகவலை அதன் தலைவர் திரு. சூசைதாசன் ஊடகங்களுக்குத் தெரிவித்தார்.

ஏற்கனவே மன்னார் நகரில் கோப் சிற்றி ஒன்று திறக்கப்பட்டு அது வெற்றிகரமாகச் செயற்படுவதாகவும் விரைவில் தாழ்வுபாடு, பேசாலை, பள்ளிமுனை ஆகிய இடங்களில் மினி கோப் சிற்றிகள் திறந்துவைக்கப்படும் எனவும் அவர் தொரிவித்தார்.

சில ஆண்டுகளுக்கு முன்னர் பாரிய நிதி மற்றும் பொருட்செலவினால் மூடப்பட வேண்டியிருந்த பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் புதிய இயக்குநர்களின் அயராத உழைப்பினால் வெற்றிகரமாக இலாபத்துடன் இயங்குவதாக அவர் மகிழ்ச்சி தெரிவித்தார்.

எம். ஏ. காதர்

## மன்னார் வைத்தியசாலையில் ஆற்றுப்படுத்தும் கலை நிகழ்வு

வன்னிப் பகுதியில் நடைபெறும் மோதலில் காயமடைந்து மன்னார் பொது வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுவரும் சிறுவர்களை அவர்களின் ஆழ்மனத்துயரில் இருந்து மீட்கும் நோக்கில் மன்னார் திருமறைக் கலாமன்றத்தின் வள அணியினரால் ஆற்றுப்படுத்தும் கலை நிகழ்வு நடத்தப்பட்டது.

இந்நிகழ்வினை சிறுவர்களும், பெரியவர் களும் கண்டு மகிழ்ந்தனர். மன்னார் திருமறைக்கலாமன்றத்தின் இணைப்பாளர் திரு. ஜோன் பொஸ்கோ அவர்கள் இந்நிகழ்வை நெறிப்படுத்தியிருந்தார்.

## பள்ளிமுனைக்கு நீர் விநியோகம்

மன்னார் பள்ளிமுனைக்கு விரைவில் அதிக அளவு குழாய்நீர் கிடைக்கவுள்ளது. இதற்கான ஏற்பாடுகள் துரிதகதியில் நடைபெறுவதாக மன்னார் நீர் வடிகாலமைப்பு சபையின் முகாமையாளர் தெரிவித்தார்.

மிக நீண்ட காலமாகவே பள்ளிமுனை மக்கள் போதிய நீரின்றி வாடிவருகின்றனர். பல வருடங்களுக்கு முன்னரே புதிய நீர்த்தாங்கி அமைப்பு வேலைகள் நடைபெற்றும் அது முடிவுறவில்லை. இந்த நிலையில் புதிய ஒப்பந்தக்காரர் மூலம் வேலைகள் மீண்டும் ஆரம்பமாகியுள்ளன. தரைக் குழாய்கள் பதிக்கப்பட்டுள்ளன. நீர்த்தாங்கி வேலைகள் முடிவுற்றதும் பள்ளிமுனை மக்களுக்கு விரைவில் முழு நேரமும் நீர் கிடைக்க வழி பிறக்கும் என எதிர்பார்க்கலாம். எம். ஏ. காதர்

## வாழ்வாதாரக் கொடுப்பனவு

மன்னார் - உப்புக்குளம் வடக்கு மீள் எழுச்சித்திட்டம் கிராம அபிவிருத்தி அமைப்பின் ஊடாக வாழ்வாதாரக் கொடுப்பனவை மீள் எழுச்சித்திட்டப் பணிப்பாளர் திரு. ரொபர்ட் வலண்டைன்ஸ் பீரிஸ் வழங்கினார். சுமார் 1,730,400 ரூபாய்கள் 20-04-09ல் 99 பயனாளிகளுக்குப் பகிர்ந்தளிக்கப்பட்டன. இவர்கள் அனைவரும் தங்கள் வாழ்வாதாரத்திற்காகக் கொள்வனவு செய்யப்பட்ட பொருட்களைப் பெற்றுக கொண்டனர்.

உப்புக்குளம் கிராமத்தில் நடைபெற்ற இவ்வைபவத்தில், உப்புக்குளம் வடக்கு கிராம அபிவிருத்திச் சங்கத்தின் தலைவர் ஜனாப் என். எம். ஆலம் அவர்களின் ஊடாக இக்கொடுப் - பனவுகள் வழங்கப்பட்டன. எம். ஏ. காதர்

## சிகை அலங்காரிப்பாளர்கள் சங்கத்தின் இலவச சேவைகள்

மன்னார் மாவட்ட பொது வைத்தியசாலையில் காயமடைந்த நிலையில் அனுமதிக்கப்பட்டுள்ள வன்னி மக்களின் நலனைக் கருத்தில்கொண்டு அவர்களுக்கான முடி வெட்டுதல், மற்றும் முகச்சவரம் செய்யும் பணிகள் தொடர்ச்சியாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

மன்னார் மாவட்டத்தில் இயங்கிவரும் சிகை அலங்கரிப்பாளர்கள் சங்கத்தின் ஏற்பாட்டில் சிகை அலங்கரிப்புத் தொழிலில் ஈடுபடுகின்ற -வர்கள் ஒன்றிணைந்து சேவை அடிப்படையில் இலவசமாக மேற்படி பணிகளை இரண்டு வாரங்களுக்கு ஒருமுறை மேற்கொண்டு வருகின்றார்கள்.

சிறுவர்கள், இளைஞர்கள், வயோதிபர்கள் என அனைத்துத் தரப்பினரும் இந்த இலவச சேவையைப் பெறுகின்றார்கள். சிகை அலங்கரிப்பாளர்களால் முன்னெடுக்கப்பட்டு வருகின்ற இப்பணி அனைவரினாலும் வரவேற்கப் பட்டுப் பாராட்டப்படுகின்றது. - எஸ். சுஜிதா

## நெடுந்தீவில் கியூடெக் நிறுவனத்தால் வீடுகள் கையளிப்பு

நெடுந்தீவு பகுதியில் உள்ள 40 வறிய குடும்பங்களுக்கு நிரந்தர வீடுகள் அமைத்து கொடுக்கும் அரசாங்கத்தின் செயற்திட்டத்தை முழுமைப்படுத்த கியூடெக் நிறுவனத்தின் பங்களிப்பாக ஒவ்வொரு குடும்பத்திற்கும் ஒரு இலட்சம் ரூபா வீதம் 40 இலட்சம் ரூபா வழங்கி வீடுகள் கையளிக்கப்பட்டது.

இந்நிகழ்வில் யாழ் அரச அதிபர் திரு. கே. கணேஷ் மற்றும் கரித்தாஸ் - யாழ்ப்பாணம்-(கியூடெக் நிறுவன) இயக்குனர் அருட்பணி. கி. யோ. ஜெயக்குமார் அடிகளார் மற்றும் அரச உத்தியோகத்தர்களுடன் பங்குத்தந்தையும் பயனாளிகளும் கலந்துகொண்டனர்.

# நீங்காத நினைவுகள்

### 6ம் ஆண்டு நினைவு



மலர்வு 10 - 07 - 1921
உதிர்வு 07 - 06 - 2003

**அமரர். சந்தான் செபமாலை**

*(இளைப்பாறிய குள அதிகாரி, கண்டல்)*

எம் அன்புத் தந்தையே, இவ்வுலகில் எமக்காய் வாழ்ந்து, எம் இன்ப துன்பங்களை நீரே சுமந்து எம்மைப் பண்போடு இவ்வுலகில் வாழவைத்தீர். இறைவனின் நிலைவாழ்வில் அமைதிபெற அருள்வேண்டி நித்தமும் பிரார்த்திக்கின்றோம்.

*பிரிவால் வருந்தும்,*
மனைவி, பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்.

### 2ம் ஆண்டு நினைவு

மண்ணில் 29 12 1971



விண்ணில் 17 06 2007

**டேவிற் கொன்சால் சில்வா**
**தாழ்வுபாடு**

வாழ்வோர் மேலும் இறந்தோர் மேலும் ஆட்சி செய்கின்ற பரலோகத் தந்தையே! உமது அன்பின் விண்ணகப் பணிக்காய் அழைத்துக்கொண்ட எம் சகோதரனை உம் திருக்கரத்திலே ஒப்புக்கொடுக்கின்றோம். இவர் வழியாய் நீர் செய்த நன்மைத்தனங்களுக் - காய் உமக்கு நன்றி சொல்கின்றோம்.

இவருடைய தியாக வாழ்வே இவரை உமது விண்ணக வாழ்விற்கு அழைத்துச் சென்றது என்பதை நாம் விசுவசிக்கின்றோம். இவருடைய பிரிவால் துயருற்று வாழ்ந்து கொண்டிருக்கும் மனைவி பிள்ளைகள் உறவு -கள் அனைவரையும் நீரே ஆசீர்வதித்தருளும்.

*இவரின் பிரிவால் துயருறும்*
மனைவி, பிள்ளைகள், உறவுகள்

புனித பவுல் ஆண்டு மற்றும் நற்செய்தி அறிவிப்பு ஆண்டு

கட்டுரைத் தொடர் 4

# பவுலின் திருமுகங்கள்

எழுத்துருவாக்கம் ஆயர் செ. சூசைமாணிக்கம்



பழைய ஏற்பாட்டில் கடிதங்கள், கடிதங்களின் சுருக்கங்கள், கடிதங்கள் பற்றிய குறிப்புகள் பல காணப்படுகின்றன. புதிய ஏற்பாட்டின் சிறப்புக் கூறு என்ன என்றால் கடிதம் ஓர் இலக்கிய வகையாகவே பயன்படுத்தப்படுகின்றது. 27 நூல்களுள் 21 நூல்கள் கடிதங்கள். இவற்றுள் 13- அதாவது, புதிய ஏற்பாட்டின் மூன்றில் ஒரு பகுதி – பவுலின் பெயரில் உள்ளன என்பது குறிப்படத்தக்கது. கிறிஸ்துவின் போதனைகளை வழங்கி, கிறிஸ்தவர்களை ஊக்குவித்திடும் கருவியாக அவர் தம் கடிதங்களைக் கையாண்டார்.

## ஆசிரியர்

கணனிக் காலத்தில் வாழ்கின்ற நமக்கு எழுதுதல் எவ்வளவோ எளிதாகிவிட்டது. ஆனால் 2000 ஆண்டுகளுக்கு முன்பு எழுதும் பணி மிகவும் கடினமானதாய் இருந்தது. இதனால் கடிதம் எழுத விழைந்தோர் தம் கைப்பட எழுதுவதற்குப் பதிலாகச் செயலர்களையே பொதுவாகப் பயன்படுத்தினர் (உரோ 16:22). செயலர்களின் செயல்பாடு பல் வகைப்படும்.

1. விடுநர் சொல்லச் சொல்லல் செயலர் செய்தியைச் சுருக்கெழுத்துக் குறியீடுகள் கொண்டு வேகமாக எழுதி, பின் அதை விரித்து எழுதுவது ஒரு முறையாகும். பவுல் தம் கைப்படப் பிலமோனுக்குத் திருமுகம் எழுதியிருக்கலாம்.

2. விடுநர் கருத்துக்களை மட்டும் கூறிட, அல்லது சில குறிப்புக்களை மட்டும் எழுத்தில் கொடுத்திடச் செயலர் அவற்றைக் கடிதப் பாணியில் விளக்கமாக எழுதுவார். இதனால் சொல்லாட்சி, நடை முதலியவற்றில் மாற்றம் ஏற்பட வழி உண்டு. கடிதத்தின் முடிவில் பவுல் கையெழுத்திடுவதற்குப் பதிலாக, செயலர் எழுதிய கடிதத்தைப் படித்துச் சரிபார்த்து அதற்கு ஒப்புதல் அளிக்கும் வகையில் தம் கைப்பட இறுதி வாழ்த்தை (2 தெச 3:17,1கொரி 16:21), அல்லது சில குறிப்புக்களைச் (கலா 6:11-18) சேர்ப்பார்.

3. தம் ஆசானின் கருத்துகளை மட்டுமல்ல, உளப்பாங்கையுமே பிரதிபலிக்கும் வகையில் அவர் தம் நண்பரோ சீடரோ கடிதம் எழுதி, அதை அவரது பெயரால் குறிப்பிட்டவர்களுக்கு அனுப்பிவைக்கும் பழக்கமும் அன்று வழக்கில் இருந்தது. ஆசானின் இறப்புக்குப் பின்னரும் இவ்வாறு செய்யும் பழக்கம் நிலவியது. ஆயர்பணித் திருமுகங்கள் இவ்வாறு எழுந்தவை என்பர்.

## தொகுப்பு

பவுலின் கடிதங்கள் பதின்மூன்றும் திகதி குறிப்பிடாதவை. அவை எழுதப்பட்ட காலத்தின் அடிப்படையில் அன்று, மாறாக அவற்றின் அளவைக் கொண்டே புதிய ஏற்பாட்டில் அவை வரிசைப்படுத்தப்பட்டுள்ளன. இவற்றைப் பொதுவாக நான்கு பகுதிகளாகப் பிரிப்பர்:

**1. முதல் கடிதங்கள் :**
1 தெசலோனிக்கர் (2 தெசலோனிக்கர்)

**2. பெரிய திருமுகங்கள் :**
உரோமையர், 1&2 கொரிந்தியர், கலாத்தியர்

**3. சிறைக்கூட மடல்கள் :**
பிலிப்பியர், பிலமோன், கொலோசையர், எபேசியர்

**4. ஆயர் பணித் திருமுகங்கள் :**
1&2 திமோத்தேயு, தீத்து

எபிரேயர் திருமுகத்தைப் பவுல் எழுதவில்லை என்பது தொடர்பாக அறிஞரிடையே கருத்து ஒற்றுமை ஏற்பட்டுள்ளது. ஆயர் பணித் திருமுகங்களும் எபேசியர் திருமுகமும் பவுலின் பெயரால் பிற்காலத்தில் அவருடைய சீடர்கள் எழுதியவை என்பதைப் பொறுத்தமட்டிலும் கருத்து உடன்பாடு உள்ளது. ஆனால் கொலோசையர், 2 தெசலோனிக்கர் திருமுகங்க - ளைப் பவுல் எழுதினாரா, அல்லது அவருடைய சீடர்கள் எழுதினார்களா என்பது பற்றி இன்றும் கருத்து வேறுபாடு நிலவுகிறது.

## அமைப்பு

**1. முன்னுரை**

முதலில் விடுநரைப் பற்றிய குறிப்புகள் இடம் பெறும். வெறுமனே பவுல் என ஓரிரு மடல்களில் குறிப்பிட்டாலும், தாம் யார் என்பதை அவர் தொடக்கத்திலேயே தம் வாசகர்களுக்குத் தெளிவாக்குகிறார். கிறிஸ்து இயேசுவின் திருத்தூதர் என்றும், பணியாளர் என்றும் தமக்கே அடைமொழி சூட்டிக்கொள்கிறார். தம் உடனுழைப்பாளர்களை – குறிப்பிட்ட சபையோடு சிறப்பான உறவுகொண்டிருந்த தம் நண்பர்களை – கடிதத்தின் இணைப்பாசிரியர்களாகக் குறிப்பிடத் தவறுவதில்லை.

அடுத்து அவர் பெறுநர் பற்றிக் குறிப்பிடுகின்றார். சகோதர சகோதரிகள், இறை மக்கள் என்றெல்லாம் தம் வாசகர்களை அழைத்தாலும், அவர்களைத் திருச்சபை எனச் சிறப்புப் பெயரிட்டு அழைக்கிறார். தமக்கும் அவர்களுக்கும் இடையே நிலவும் உறவை விளக்குகிறார்.

தொடர்ந்து அன்றைய வழக்கில் இருந்த கிரேக்க, யூத வாழ்த்து முறைகளைத் தழுவி, அருளும் அமைதியும் பெருகத் தம் வாசகர்களை வாழ்த்துகிறார். அவர்களை நினைத்து மகிழ்ச்சி அடைகிறார். அவர்கள் பொருட்டு இறைவனுக்கு நன்றி கூறுகின்றார். அவர்களுக்காக இறைவேண்டல் செய்கிறார். பவுல் தம் வாசகர்மீது கொண்டிருந்த அன்பு, நட்புறவு, நல்லெண்ணம், நம்பிக்கை ஆகியவை இங்கு பளிச்சிடுகின்றன.

**2. மையப் பகுதி**

இது கோட்பாட்டுப் பகுதி, அறிவுரைப் பகுதி என இரு பெரும் பகுதிகளாகப் பிரிக்கப்படும். கோட்பாட்டுப் பகுதி கிறிஸ்தவர்களுக்கு உரிய உயரிய நிலையை உணர்த்தும். அறிவுரைப் பகுதி கிறிஸ்தவர்கள் தங்களது நிலைக்கேற்ப வாழ்வதற்குத் தேவையான நடைமுறை அறிவுகளை வழங்கும். சில நிகழ்ச்சிகளும் இங்கு இடம்பெறும்.

சபைகள் நடுவே கொள்கைக் குழப்பங்கள் எழுந்தபோது, அல்லது மாறுபட்ட நடத்தையினால் சமய, சமூக உறவுகள் பாதிக்கப்பட்டபோது அவற்றைச் சீர்செய்வதற்காக பவுல் கையாண்ட வழிமுறைகளில் ஒன்று கடிதம் ஆகும். இதன் வழியாகப் பிரச்சினைகளைத் தீர்த்துவைத்தார், சபையில் ஒழுங்கையும், ஒற்றுமையையும், அன்பையும், அமைதியையும் நிலைநாட்டினார்.

பிரச்சினைகளுக்குத் தீர்வு காண வேண்டும் என்னும் எண்ணமே அவரின் மனத்தில் மேலோங்கி நின்றாலும், எடுத்த எடுப்பிலேயே பிரச்சினைகளை அவர் தொட்டுவிடுவதில்லை. பிரச்சினைகளோடு தொடர்புடைய சில அடிப்படைக் கோட்பாடுகளை முதலில் விளக்குவார். பின்னர் அக்கோட்பாடுகளின் அடிப்படையில் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பார். நடைமுறையில் கடைப்பிடிக்கச் சில அறிவுரைகளை வழங்குவார். இதுதான் பவுல் தன் மடல்களில் பொதுவாக கையாண்டு வந்த முறை.

ஆனால் சில மடல்களில் சிறப்பாக பவுல் கொரிந்தியருக்கு எழுதிய முதல் மடலில் வேறொரு அணுகுமுறையைக் கையாள்கிறார். முதலிலேயே அவர்களுடைய பிரச்சினைகளைத் தொட்டுவிடுகிறார். அவற்றுக்கு முடிவு சொல்ல வேண்டிய கட்டத்தில் தொடர்புடைய இறையியல் கோட்பாடுகளை வாசகர்முன் வைக்கிறார். இது வாழ்க்கையோடு இயைந்த நடைமுறைக்கு ஏற்ற முறை. இது சூழமைவுப் பொருள்கோளியலுக்குச் சிறந்த முன்னுதாரணம். இவ்வாறு முன்னோடிகளே இல்லாத அக்காலத்தில் இறையியளாக்கத்தில் ஈடுபட்ட பவுலை **முதல் இறையியலார்** என அழைப்பது மிகமிக பொருத்தம்.

**3. முடிவுரை**

தொடக்க வாழ்த்தை பெரும் அளவில் ஒத்திருந்தாலும், இறுதி வாழ்த்து குறுகியதாக உள்ளது. மேலும் நண்பர்களுக்கான வாழ்த்துக்கள், இறைபுகழ், ஆசி முதலியன இடம்பெறும்.

## சில எல்லைக் கோடுகள்

பவுலுடைய கடிதங்களைப் புரிந்துகொள்வது மிக எளிது. எனினும் சில வேளைகளில் அவர் கூறுகிற சில கருத்துக்களை முழுமையாகப் புரிந்து -கொள்வது கடினம் என்பதை பவுல் ஏற்றுக்கொள்கின்றார். *“நாங்கள் உங்களுக்கு எழுதும் திருமுகங்களில் நீங்கள் வாசித்துப் புரிந்துகொள்ள முடியாதது எதுவுமில்லை. இப்போது நீங்கள் எங்களை ஓரளவுக்குத்தான் புரிந்துகொண்டிருக்கின்றீர்கள். ஆனால் நம் ஆண்டவர் இயேசு வரும் நாளில் நீங்கள் எங்களை முழுமையாகப் புரிந்துகொள்வீர்கள் என்னும் எதிர்நோக்குடன் இருக்கிறேன். அப்போது நாங்கள் உங்களைக் குறித்துப் பெருமை கொள்வதுபோன்று நீங்களும் எங்களைக் குறித்து பெருமை கொள்வீர்கள்” (2 கொரி1:13-14).*

அதேவேளையில் அவருடைய கடிதங்களில் சில பகுதிகளைப் புரிந்துகொள்வதில் தொடக்க காலத்திலிருந்தே சிக்கல் இருந்திருக்கிறது. குறிப்பாக அவருடைய எதிரிகள் அவற்றைத் தவறாகப் புரிந்துகொண்டதோடு அவற்றுக்கு தவறான விளக்கங்களும் கொடுத்துள்ளனர். இதைப் பவுலின் தோழரான புனித பேதுருவே தம் திருமுகத்தில் பதிவுசெய்துள்ளார்: *“நம் ஆண்டவரின் பொறுமையை மீட்பு எனக் கருதுங்கள். நம் அன்பார்ந்த சகோதரர் பவுலும் தமக்கு அருளப்பட்ட ஞானத்தின்படி இவ்வாறுதான் உங்களுக்கு எழுதியுள்ளார். தம்முடைய திருமுகங்களில் இவை பற்றி பேசும்போதெல்லாம் இவ்வாறே அவர் சொல்லுகிறார். அவருடைய திருமுகங்களில் புரிந்துகொள்வதற்குக் கடினமானவை சில உண்டு. கல்வி அறிவில்லாதவர்களும் உறுதியற்றவர்களும் மறைநூலில் மற்றப் பகுதிகளுக்குப் பொருள் திரித்துக் கூறுவதுபோல் இவற்றுக்கும் கூறுகின்றனர். அதனால் தங்களுக்கே அழிவை வருவித்துக் கொள்கின்றனர்”* (2 பேது. 3:15-16). இந்நிலை இன்றுவரை நீடித்து வருகிறது என்பது வருந்தத் -தக்கது.

*பவுலின் கடிதங்களையும் அவற்றில் விளக்கப்படும் கருத்துக்களையும் சரியாகப் புரிந்துகொள்வதற்குப் பின்வரும் எல்லைக் கோடுகளை நம் எண்ணத்தில் கொள்வது இன்றியமையாதது.*

1. பவுல் மக்களின் நலனில் உண்மையான ஈடுபாடு கொண்டிருந்தார். ஆயருக்குரிய கவலையோடும் கரிசனையோடும் அவர்களின் பிரச்சினைகளை அணுகினார். (2 கொரிந்தியர் 11:28-29, 1கொரிந்தியர் 4:14-21) எனவே அவருடைய எழுத்துக்கள் மக்கள் மையம் கொண்டிருந்தனவே தவிர கோட்பாட்டு மையம் கொண்டிருக்கவில்லை. அதாவது ஒரு குறிப்பிட்ட கால இடச் சூழலில் எழுந்த பிரச்சினைகளை இறைவெளிப்பாடு, சபை மரபுகள், சமுதாய அமைப்புக்கள் முதலியவற்றின் ஒளியில் சிந்தித்து சீர்தூக்கிப் பார்த்த பின்னர், நடைமுறைக்கான சில முடிவுகளை அல்லது ஒழுங்கு நடவடிக்கைகளை உடனடியாக எழுத்து வடிவில் மக்களுக்கு வழங்கினார். எனவே பிரச்சினைகளை நிதானமாக அணுகவோ, முறையாக ஆராயவோ முழுமையாகப் பார்க்கவோ சூழ்நிலை அவருக்கு இடம் கொடுக்கவில்லை.

2. அன்றைய சமூதாய சமய பொருளாதார, அரசியல், பண்பாட்டு அமைப்புக்கள் பவுலுடைய எண்ணத்தையும் எழுத்தையும், சொல்லையும் செயலையும் பெரிதும் பாதித்திருந்தன. எடுத்துக்காட்டாக அடிமைகள் (1 கொரி 7:20-24), பெண்கள் (1 கொரி 11:12-16,14-33-35) தொடர்பான பிரச்சினைகளைப் பவுல் கையாளும் முறையை ஈண்டு குறிப்பிடலாம். எனவே இன்றைய கண்ணோட்டத்தை வைத்து நாம் பவுலை எடைபோடக்கூடாது. அதே நேரத்தில் அவர் அன்று கண்ட முடிவுகளை இக்காலப் பிரச்சினைகளுக்கான தீர்வுகளாக அப்படியே கண்மூடித்தனமாக ஏற்றுக்கொள்ளவும்கூடாது. மாறாக இன்றைய பிரச்சினைகளை கவனமுடன் ஆராய்ந்து, அவை எழுப்பும் வினாக்கள், விடுக்கும் சவால்கள் முதலியவற்றை பவுலின் கருத்துக்களோடு உரசிப் பார்த்து, ஒளியும் தெளிவும் பெறுவதே அறிவுடமையும் விவிலியப் பொருள்கோள் முறையும் ஆகும்.

3. கிறிஸ்துவின் உயிர்ப்பில் கருக்கொண்டு தூய ஆவியாரின் பொழிவால் உருவான திருச்சபை கிறிஸ்துவின் இரண்டாம் வருகையை மிகுந்த ஆவலோடு எதிர்நோக்கியிருந்தது. தீமைகள் நிறைந்த இந்த உலகம் விரைவில் ஒரு முடிவுக்கு வரும். அப்பொழுது நல்லார் எல்லோரும் மீட்படைவர். பொல்லார் எல்லோரும் அழிவுறுவர் என்னும் ஆழமான நம்பிக்கையை அது கொண்டிருந்தது. இதற்கு வெளிப்பாட்டுக் கண்ணோட்டம் எனப் பெயர். இதன் விளைவாக நிறைவுகாலப் பற்றின்மை தொடக்ககாலக் கிறிஸ்தவர்களின் சிந்தனையிலும் செயற்பாட்டிலும் தென்பட்டது. அதாவது இவ் உலக வாழ்வோடு தொடர்புடையவை மட்டில் - சமூகம், பொருளாதாரம், அரசியல், பண்பாடு முதவியவற்றைப் பொறுத்த மட்டில் - ஒருவகை அக்கறையின்மை காணப்பெற்றது. *“அன்பர்களே நான் சொல்வது இதுவே: இனியுள்ள காலம் குறுகியதே. இனி மனைவி உள்ளவரும் மனைவி இல்லாதவர்போல இருக்கட்டும். அழுபவர் அழாதவர் போலவும், மகிழ்ச்சியுறுவோர் மகிழ்ச்சியற்றவர் போலவும் பொருள்களை வாங்குவோர் அவை இல்லாதவர் போலவும் இருக்கட்டும். உலகச் செல்வத்தைப் பயன்படுத்துவோர் அவற்றில் முழுமையாக ஈடுபடாதவர்போல் இருக்கட்டும் இவ் உலகு இப்போது இருப்பதுபோல் நெடுநாள் இராது.” (1கொரி7:29-31)*

ஆனால் கிறிஸ்துவின் வருகை உடனடியாக நிகழப்போவதில்லை என்பதைக் கிறிஸ்தவர்கள் உணரத்தொடங்கியபோது, அவர்களுடைய நோக்கிலும் போக்கிலும் குறிப்பிடத்தக்க மாற்றம் ஏற்பட்டது. இதனால் இவ் உலக வாழ்விலே ஒரு வகைப் பிடிப்பு அவர்களுக்கு உண்டானது. எனவே சோம்பித் திரியாமல் கடமையாற்ற பவுல் மக்களுக்கு அறிவுரை வழங்கலானார். அவர்களின் அன்றாட அரசியல், சமூக, பொருளாதார, பண்பாட்டுப் பிரச்சினைகளிலும் ஆர்வம் காட்டலானார். “...... உழைக்க மனமில்லாத எவரும் உண்ணலாகாது’ என்று நாங்கள் உங்களிடையே இருந்தபோதும் உங்களுக்குக் கட்டளை கொடுத்திருந்தோம். உங்களுள் சிலர் எந்த வேலையும் செய்யாமல் சோம்பேறிகளாகச் சுற்றித் திரிந்து, பிறர் வேலையில் தலையிடுவதாகக் கேள்விப் - படுகிறோம்.” (2 தெச. 3:10-12)

இவ்வாறு கி. பி. 51 முதல் 57வரை – அவரது முதல் மடலாகிய 1 தெசலோனிக்கர் திருமுகம் கி.பி. 51- இலும், இறுதி மடலான உரோமையர் திருமுகம் 57- இலும் எழுதப்பெற்றன என்பர் அறிஞர். வெவ்வேறு காலகட்டங்களில் எழுத்து வடிவம் பெற்ற பவுலின் மடல்களை நாம் படிக்கின்றபொழுது அவருடைய கருத்துக்களில் வளர்ச்சியையும், தொடர்ச்சியையும் மாற்றத்தையும் ஏற்றத்தையும் - ஏன் முரண்பாட்டையுமே காணலாம். எனவே மடல்களை அந்தந்தச் சூழலில் பொருத்திப் பார்ப்பதோடு, ஒன்றோடு ஒன்றைத் தொடர்புப்படுத்திப் பார்ப்பதும் இன்றியமையாதது. அப்பொழுதுதான் ஒரு குறிப்பிட்ட பொருள் பற்றிப் பவுல் முடிவாக என்ன சொல்கிறார் என்பதை நாம் முறையாகப் புரிந்துகொள்ள முடியும்.

---

நெற்றிக் கண்

- எம். ஏ. காதர் -

## மன்னாரில் வாகன நெரிசல்

மன்னாரில் தறிகெட்டு ஓடும் வாகனங்களால் பொதுமக்கள் நடமாடவே அஞ்சுகின்றனர். மன்னாரில் வாகனங்கள் நிறைந்துவிட்டன. ஆனால் பாதைகள் சுருங்கிவிட்டன. இங்கு நூற்றுக்கணக்கான பேரூந்துகளும், சிற்றூர்ந்துகளும், சிறு ஊர்திகளும், ஆயிரக்கணக்கில் உந்துருளிகளும் முச்சக்கர வண்டிகளும் அசுர வேகத்தில் நாள் முழுவதும் ஓடித்திரிகின்றன.

ஆயினும் பிரித்தானியர் இங்கு அமைத்த ஒடுக்கமான பாதைகள் ஓர் அங்குலம்கூட அகலப்படுத்தப்படவில்லை. அத்துடன் குன்றும் குழியுமான கிரவல் பாதைகளே அதிகமாக வுள்ளன. இந்த நிலையில் மக்கள் பிரயாணம் செய்ய நடைபாதைகள்கூட இங்கு இல்லை.

அத்துடன் இங்கு வாகனங்களோடு போட்டி போட்டு கழுதைகளும், குதிரை யோட்டம் ஓடும். இதனால் பாதசாரிகள் விபத்துக்குள்ளாகி வைத்தியசாலையை நாடும் நிலை உள்ளது.

அத்துடன் முற்றிலும் குளிரூட்டப்பட்ட தன்னார்வத்தொண்டு நிறுவனங்களின் அசுர ஓட்டம் ஒரு புறம். இவைகள் பிரமாண்டமான இலச்சினைக் கொடிகளைப் பறக்கவிட்ட வண்ணம் ஓடித்திரியும். இந்தக் கொடிகள் மிதிவண்டிகளில் செல்லும் பாதசாரிகளை வீழ்த்திவிட்டுப் பறந்தோடிவிடும். இவைகளை மேற்பார்வை செய்து குற்றவாளிகளை நீதிமன்றத்தில் நிறுத்த வேண்டிய போக்குவரத்துப் போலீஸ் என்ன செய்கிறது என மக்கள் கேள்வி எழுப்புகின்றனர்.

# கலை இலக்கியச் சாளரம்

## கவிதைக் களம்

### அடிமை

வறுமையில் வாடாத மலர்கள்
எம் சின்னச் சின்ன சிறுவர்கள்
வானவில்லை இரசிக்கக் காலமில்லை
கடற்கரையில் விளையாடக் கால்களுமில்லை.
இன்றைய சிறுவர்கள்
நாளைய தலைவர்களாவதற்கு
இந்தச் சமுதாயம் இடமளிப்பது இல்லை.
கொப்பியுடன் பார்க்க வேண்டிய சிறுமியைக்
கையில் பாத்திரத்துடன் பார்க்கலாம்
சுற்றிப்பார்க்க வேண்டிய இடங்களை
சுற்றாமலே பார்க்கும் காலமதில்
சுற்றிவரும் வெடிகுண்டுகள்
சுற்றி அடித்தது இலங்கையிலே
இந்த அடிமை வாழ்வு எதுவரை இறைவா?

*ச. ஆஷா, பள்ளிமுனை கிழக்கு, மன்னார்.*

### சமாதானம்

சத்தம் ஓய வேண்டும்
யுத்தம் மறைய வேண்டும்
அடிமை நிலை மாற வேண்டும்
அமைதி எங்கும் நிலைக்க வேண்டும்.

பள்ளி செல்லும் பாலகரும்
பாடுபட்டுழைக்கும் தொழிலாளியும்
மனதில் பயமின்றியே - என்றும்
மனமகிழ்வுடனே வாழ்ந்திடனும்.

இறந்த காலத்தை மறந்தே - நாம்
எதிர்காலத்தை நோக்கிடுவோம்.
புதிய பாதையில் பாதங்களைப் பதித்திடுவோம்
சமாதானத்தை எதிர்நோக்கிடுவோம்.

*யே. நிலோஜினி பொன்தீவுகண்டல்*

### இறைவா அமைதி எங்கே?

தாயிலே பாசம் வைத்தாய்
வளர்ந்தபின் மறக்க வைத்தாய்.
நாட்டிலே போரை வைத்தாய்
வெளிநாட்டு மோகம் வைத்தாய்.
துன்பத்தில் இன்பம் வைத்தாய்
வாழ்க்கையில் வருந்த வைத்தாய்.
வேதனையில் சிரிக்க வைத்தாய்
சிரிப்பில் அழுகை வைத்தாய்.
பழிப்பிலே வெறுப்பு வைத்தாய்
காதலில் நாட்டம் வைத்தாய்.
மனதிலே சலனம் வைத்தாய்
அமைதியை இழக்க வைத்தாய்.
எம்மை இங்கு ஏன் படைத்தாய்?
என்று உன்னைக் கேட்க வைத்தாய்

*பே. ஸ்ரனிராஜ் - சாளம்பன்*



### வாழ்க்கை

உயிர் தந்த வாழ்க்கை
தொடர்பு கொடியுறவு வாழ்க்கை.....
தேடின வாழ்க்கை
தேவதை உன்னுடன் வாழ்க்கை.....
கிடைத்த வாழ்க்கை
சிறகுடைந்த வாழ்க்கை....
இருக்கும் வாழ்க்கை
இறைவன் தந்த வாழ்க்கை...

*"சிறகுடைந்த இளஞ்சிட்டு" தோட்டவெளி*



### தமிழரின் வாழ்வு

குண்டு மழையில் நனைகின்றோம்
குருதி வெள்ளத்தில் தத்தழிக்கின்றோம்
பிண மலைகளின் மத்தியில் உறங்குகிறோம்
செல்லின் தீப்பொறியில்
உறவினைத் தேடினோம் - ஆனால்
பிண உடல்களைத்தான் பொறுக்கினோம்.



கிபிரின் ஓசையில்
கிழிந்துபோனது செவிப்பறை
கிளம்பிய கந்தகப் புகையில்
கலங்கியது எம் கண்கள்.
கலங்கியோன காற்றில்
சுவாசிக்கத் திணறினோம்.
சிதறிய தசைகளின் துர்நாற்றம்
எம் மூக்கை மூடிக்கொண்டது.

உருக்குலைந்த மனித உருவங்களானோம்
உறவுகளின் அவல அழுகுரல்
ஓலமிட ஓடுகிறோம்.
உறங்காத விழிகளாய் உயிரற்ற உடல்களாய்
ஊர் ஊராய் அலைகின்றோம் அகதிகளாய்.

வானமே எங்கள் கூரையானது
கூடி வாழ்ந்த வீடு குட்டி முகாமானது
கொட்டும் மழையும் கொடூர வியாதியும் - எம்
குழந்தைகளை பறித்துச் சென்றது.

நெருப்பாய்க் கொழுத்தும் வெயில் - எம்
உடலைக் கருக்கியது
வேகத்துடன் வீசும் காற்று - எம்முடன்
வீரப்பு பேசி வேதனையூட்டியது.

தூறும் பனித்துளி - எம்
முதுமையை நகைத்து எம்மைத்
துயரத்திலாழ்த்தியது.
ஏனடா இந்த வாழ்வு என்ற எண்ணம்
எம் உள்ளத்தில் தாண்டவம் ஆட
அலைகின்றோம் ஊர் ஊராய்
நாதியற்ற அகதிகளாய்.

ஏங்குகின்றோம் எம் மக்களின் விடிவிற்காய்
இரஞ்சுகிறோம் இறைவனிடம் வல்லமைக்காய்
இரங்குமையா மக்களின்மேல் இரங்குமையா
அருளுமையா உம் அருளை அருளுமையா.

*சகோ. லோ. கனீசியஸ்*
*கப்பொச்சின் நவசன்னியாச இல்லம்*
*மாவில, நாத்தாண்டியா*

### சமாதானம்

வருக வருக சமாதானம்
இலங்கை வாழ் மக்களுக்கு சமாதானம்
சிறிய நாட்டிற்கு சமாதானம்

மண்ணில் பிறந்த மனிதனுக்கு சமாதானம்
மனு உரு எடுத்த இயேசுவின் சமாதானம்
வறுமையில் பிறந்த மனிதனுக்கு சமாதானம்
வாடிடும் மக்களுக்கு சமாதானம்

போர் முழக்கங்கள் நீங்கிட சமாதானம்
எல்லோரும் ஒன்றுபட்டு வாழ்ந்திட சமாதானம்
சின்னஞ் சிறுவர்களாகிய எங்களுக்கு
வருக வருக சமாதானம்.

*ஞா. மிதுஜனா,*
*சாம்பன் கட்டைக்காடு, நானாட்டான்.*

## சிறுகதை

*இராயப்பு இக்னேசியஸ், இலுப்பைக்குளம்*

# காதல் பின்னே காசு முன்னே



அருளும், ரோசியும் அழகான காதல் ஜோடிகள். வீட்டை விட்டுப்போய் ஆசையாக இருவரும் திருமணம் செய்துகொண்டார்கள்! ஆனால் ஒரே மாதத்தில் தற்கொலையும் செய்து கொண்டார்கள். ஏன்? வாழ்க்கை நடத்த காதல் மட்டும் போதாது! பணம் வேண்டும்!! என்பது பிறகுதான் அவர்களுக்குத் தெரிந்தது. காசேதான் கடவுளடா என்ற வார்த்தையின் பொருளை உணர்ந்தார்கள். பணம் இல்லாதவன் வெறும் பிணம் என்பது உறைத்தது. உருளும் உலகத்தில் உருண்டோடும் பணம் இல்லாவிட்டால் ஒருநாள்கூட வாழமுடியாது என்பது தெரிந்தது. கோழைகள்போல் தற்கொலை செய்து கொண்டார்கள்!

இத்தனைக்கும் இருவரும் அறியாப் பருவத்துச் சிறுவர்கள் அல்ல. படித்தவர்கள், நாகரீகம் தெரிந்தவர்கள். காதலன் அருளுக்கு 30 வயது காதலி ரோசிக்கு 27 வயது. இருவரும் கிராமத்தில் பிறந்தாலும் நகரத்தைத் தம் வசிப்பிடமாகக் கொண்டவர்கள். அருள் கல்லூரியில் படித்துப் பட்டம் பெற்றபோதும் அவனுக்கென்று நிரந்தர வேலை கிடைக்கவில்லை. நிரந்தர வருமானமும் இல்லை.

எதிர்ப்பு! இந்த நிலையிலும் இருவரும் காதலித்தார்கள். காதல் அவர்கள் மனப் புண்ணிற்கு மருந்தாக இருந்தது. கவலையை மறந்தார்கள். தங்களையும் மறந்தார்கள். இருவர் வீட்டிற்கும் இது தெரிந்தது. கடுமையான எதிர்ப்பு. மனித மாண்பை, மனித உணர்வுகளை மதிக்கத் தெரியாது காலில் போட்டு மிதிக்கும் நிலையில் இரு வீட்டாரும் போலிக் கௌரவங்களுக்குள் சிக்கித் தவித்தார்கள். "எங்கள் சொல்லை மீறினால் எங்கள் முகத்தில் கூட முளிக்காதீர்கள்" என்று கடும் வார்த்தைகளைக் கொட்டினார்கள்.

இருவரும் வீட்டைவிட்டு வெளியேறினார்கள். திருமணம் செய்துகொண்டார்கள்! ஆதரவு இல்லை. ஒரு மாதம் இனிமையாக ஓடியது. அதன்பின் செலவுகள் கையைக் கடித்தன. பசி வயிற்றைக் கிள்ளியது. "பார்த்தால் பசிதீரும். உன்னைப் பார்த்துகொண்டே இருந்தால் நேரம்போவதே தெரியாது" என்றெல்லாம் எத்தனையோ முறை வசனம் பேசியிருக்கிறார்கள். அதெல்லாம் வெறும் நாடக வசனம் என்பது இப்போதுதான் தெரிந்தது.

வேலையில்லை, வருமானமில்லை, சாப்பாட்டிற்கு வழியில்லை. ஆதரவுக்கரம் நீட்டுவார் எவரும் இல்லை. இருவரும் இந்தப் பரந்த உலகில் அனாதைகளாக நின்றார்கள்.

தற்கொலை! ரோசியின் சகோதரியின் வீட்டிற்கு இருவரும் போனார்கள். ஒரு வேளை சாப்பாடு கிடைத்தது. சகோதரி வேலைக்குப் போய்விட்டாள். அந்த நேரம் இவர்கள் இருவரும் ஒரு கடிதம் எழுதி வைத்தார்கள். அதில், "வேலை கிடைக்கவில்லை, உறவுகளும் எங்களை ஏற்கவில்லை. அதனால் வாழ முடியவில்லை. தற்கொலை செய்து கொள்கிறோம்." என்று குறிப்பிட்டிருக்கிறார்கள்.

பிழைக்கும் வழியைப் பாருங்கள். காதலர்களுக்கு இது ஒரு பாடம். காதலிப்பதற்குப் பணம் தேவையில்லை. ஆனால் திருமணம் செய்துகொள்ளாதீர்கள். குடும்ப சுமை என்பது பெருஞ்சுமை, வேலை தேடுங்கள், சம்பாதியுங்கள், யார் தயவும் இல்லாமல் சொந்தக் காலில் நில்லுங்கள். பிறகு திருமணம் செய்துகொள்ளுங்கள். யார் தயவும் இல்லாமல் இன்பமாக வாழுங்கள்.

## தூவானம்

**கவலை**
கள்ளமில்லா உள்ளத்தில்
கயவனாய் எழுந்துநின்று
காலமெல்லாம் கலங்கவைப்பான்!

**கோபம்**
வெயிலின் கொடுமையிலும்
விருட்சமாய் ஓங்கிநீந்து
விசாலமாய் விரிந்து நிற்கும்!

**துன்பம்**
துணிவிருக்கும் இடத்தில்
துட்டனாய் வந்து நிற்பான்!



**பரிவு**
பரிதவிக்கும் மனிதரைக்கண்டால்
பரிசுத்தவான்களின் மனதில்
பளிச்சென வெளிவரும் பண்பு!

**பொறுமை**
தாளமுடியாத துன்பத்திலும்
தாங்கொணா வேதனையிலும்
தாவிப்பிடித்தேன் ஆண்டவன் பாதத்தை!

**அன்பு**
அன்பின் மனதில்
அகமாய் விரிந்து
ஆழமாய் வேரூன்றியிருக்கும்!

**பணிவு**
பண்பட்ட மனிதரை
பக்குவப்படுத்தும்
பண்பாட்டில் ஒன்று!



**மகிழ்ச்சி**
மாந்தரின் மனதில்
மணி விளக்கேற்றிட
மாணிக்கமாய் தவழ்ந்து நிற்கும்

*அ. ஜஸ்மின் ஷரோன்,*
*ஆவணம், நானாட்டான்.*

**கல்வி** - வாழ்வை உயர்த்தும் வெற்றிப்படி.

**காதல்**
இதயத்தைத் துளைக்கும் அணுகுண்டு.

**மதுபானம்**
இளைஞர்களை மயக்கும் அழகிய தேவதை.

**கடவுள்**
விலை மதிப்பற்ற சொத்து.

*பி. மதுசாளினி, D/1, மடுக்கோவில்*

**சமாதானம்**
அமைதி எங்கே அமைதி எங்கே என்று
அலைந்து திரியும் ஆன்மா.

**செருப்பு**
இரத்தம் சிந்தாமலே
கல்லும் முள்ளும் அடிபட்டும்கூட
பொறுமையோடு இருக்கும் அமைதியான பூ

**நாக்கு**
உள்ளுக்குள் இருந்துகொண்டே
உத்தரவும் போடுபவன்.

**மனிதன்**
இந்த அழகான பாரினிலே
துன்பமும் இன்பமும் அநுபவிக்கும் மகன்.

*எ. துபாரகா, பள்ளிமுனை*

**தாய்**
பாசத்தை பாலாய் ஊட்டி
பண்பால் பிள்ளையினை வளர்ப்பவள்.

**இறப்பு**
உறவுகள் மௌனமாய் உருகும்
துன்பகரமான நிகழ்வு

**தவிப்பு**
உறவு ஏதும் இன்றி
தனிமையாக விடப்பட்ட குழந்தை

*சு. நியூஜினி (றெனி), கன்னாட்டி, அடம்பன்.*

## சிரிப்பு (பூ)க்கள்

வாங்குபவர் : ஒரு கிலோ வெங்காயம் என்ன விலை?
விற்பவர் : எழுபது ரூபாய்.
வாங்குபவர் : விலையைக் கொஞ்சம் குறைத்துத் தாங்கோவன்.
விற்பவர் : அரைக்கிலோ வெங்காயம் முப்பத்தைந்து ரூபாய்.

♦ ♦ ♦ ♦ ♦ ♦ ♦ ♦ ♦ ♦

ஆசிரியர் : சரி விகித உணவுக்கு உதாரணம் சொல்லு?
மாணவன் : அரிசி சோ்.
ஆசிரியர் : அது எப்படி என்று சொல்.
மாணவன் : அதில் சரிபாதி கல் கலந்திருக்கே.

*- ஏ. றெஜிவினி, சிறுக்கண்டல், முருங்கன்*

♦ ♦ ♦ ♦ ♦ ♦ ♦ ♦ ♦ ♦

சிறுவன் : இடி விழுகிறத நீ கண்ணால பாத்து இருக்கியா?
மற்ற சிறுவன் : ஆமாம். என் அம்மாகிட்ட அப்பா இடி வாங்கும்போது ........!

ஒருவர் : ஏன் உங்க வீட்டில இருக்கிற எல்லாத் துணிகளிலும் உங்க அம்மா பெயரை எழுதி வைச்சிருக்கிறீங்க.
மற்றவர் : முதல்லே என் மனைவி துவைச்சா அழுக்கே போகாது. என் அம்மாவில இருக்கிற கோபத்தில் என் மனைவி நல்லா அடிச்சு துவைப்பா அதற்காகத்தான்.

*கி. டெலா றோஸ், தரம் -12, ஜோசப்வாஸ் நகர், தோட்டவெளி.*

♦ ♦ ♦ ♦ ♦ ♦ ♦ ♦ ♦ ♦

நபர் I - காலையில் 7.00 மணிக்கு எழுந்து ஆபீஸ் போக முடியல்ல
நபர் II - ஏன்?
நபர் I - எவனும் வேல கொடுக்கல

♦ ♦ ♦ ♦ ♦ ♦ ♦ ♦ ♦ ♦

அமல்: முடி ஏன் கீழே விழுது
நிமல்: முடிக்கு நிற்க சக்தியில்ல

*எ. தியோப்பிலஸ் மட்டகலை*

# மாணவர் பக்கம்



## கிறிஸ்தவ பாடம்

### உயர்தரப் பரீட்சை

### மாதிரி வினாவிடை

**தொகுத்துத் தருபவர்**
**திருமதி. ஜெனிவி ஸ்ரீபன்**

### கிறிஸ்தவம் 1. பகுதி 1.

**மிகப்பொருத்தமான விடையின் கீழ் கோடிடுக**

01. படைப்பின் முதலாம் வரலாறு எழுதப்பட்டுள்ள மரபு யாது?
1. F 2. P 3. JP 4. J 5. D

02. கிரேக்க மொழியில் தங்கள் மூலப் பிரதிகளைக் கொண்ட ஏழு நூல்களுள் அடங்குவது,
1. 1 கொரிந்தியர், மக்கபேயர் 2. யூதித், 2 தெசலோனிக்கர் 3. யூதித், தொபியாஸ் 4. எஸ்ரா, நெகேமியா 5. யோவேல், ஆமோஸ்

03. எகிப்தை ஆண்ட அன்னிய ஆட்சியாளன் எவ்வாறு அழைக்கப்பட்டான்,
1. அன்னியன் 2. அயல் நாட்டு ஆட்சியாளன் 3. கைக்கோசு 4. செர்சோம் 5. எலியேசு

04. ஆபிரகாம், நோவா போன்றோருடன் இறைவன் உடன்படிக்கை செய்ததன் அடையாளம்,
1. காட்டுப் புறா, வானவில் 2. மேகத்தூண், நெருப்புத்தூண் 3. வானம், காற்று 4. விருத்தசேதனம், வானவில் 5. விண்மீன், அக்கினி நாக்கு

05. மோசேயின் மாமாவின் பெயர்,
1. தெராகு 2. ஆபிரகாம் 3. இத்திரோ 4. யோசேப்பு 5. யோசுவா

06. இறைவன் இஸ்ரேயலருக்கு உணவளித்த இடம்,
1. சீன் பாலைவனம் 2. இரபதிம் 3. அமலேக்கியா 4. பித்தோம் 5. இராம்சேசு

07. இஸ்ரேயலரின் முக்கிய தலைவர்கள்,
1. மோசே, யோசுவா, ஆரோன், கூர் 2. மோசே, ஆரோன், நாதாபு, அபகூ 3. யோசுவா, யாக்கோபு, கூர், ஆரோன் 4. இத்திரோ, மோசே, கூர், தெராகு 5. தெராகு, ஏகா, ஆரோன், மோசே

08. இறைவாக்கினர் காலம் என்று அழைக்கப்படும் காலம்,
1. கி.மு.180 – கி.மு.90 2. கி.மு.950 – கி.பி.100 3. கி.மு. 8 – கி.மு. 4 4. கி. மு.80 – கி. மு.100 5. கி. பி.10 – கி. பி 40

09. மாற்கு நற்செய்தியின் நோக்கம் எதைப்பற்றியது?
1. உடன்படிக்கை வாழ்வுபற்றி 2. இயேசுவே மீட்பர் பற்றி 3. இறைவாக்கினர் பற்றி 4. வல்லமை நிறைந்த செயல்கள் பற்றி 5. இறைவனின் மனநிலை பற்றி

10. "வன் கண்ணும், கடின இதயமும் கொண்ட மக்களிடம் உன்னை அனுப்புகிறேன்" இவ்வார்த்தையுடன் தொடர்புடைய இறைவாக்கினன்
1. எசேக்கியேல் 2. எரேமியா 3. ஏசாயா 4. ஆமோஸ் 5. ஓசே

11. உண்மையான விசுவாச வாழ்வை முக்கிய கற்பித்தலாக முன்வைத்த இறைவாக்கினர்,
1. எசாயா, எரேமியா 2. ஆமோஸ், ஓசியா 3. செக்கரியா, எசேக்கியேல் 4. எசாயா, ஆமோஸ் 5. ஓசியா, ஏசாயா

12. புனித யோவான் நற்செய்தியின் மையப்பொருள்,
1. இறையன்பு 2. நித்திய வாழ்வு 3. பாஸ்கா மறைபொருள் 4. இறையரசு 5. புதுவாழ்வு

13. பலஸ்தீன யூதர்களுக்கு எழுதப்பட்ட நற்செய்தி,
1. யோவான் 2. லூக்கா 3. நான்கு நற்செய்திகள் 4. மாற்கு 5. மத்தேயு நற்செய்தி

14. சிலர் தற்செயலாக, எதிர்பாராதவிதமாக இறையரசைக் கண்டடைவார்கள் என்பதைக் காட்டும் உவமை,
1. புதையல் உவமை 2. திருமண விருந்து உவமை 3. வலை உவமை 4. ஆட்டுப்பட்டி உவமை 5. முத்து உவமை

15. புனித யோவான் நற்செய்தியில் தூய ஆவியை ஒப்பிடுவது,
1. உயிருள்ள ஊற்றாக 2. உயிருள்ள உணவாக 3. உயிருள்ள நீர்த்தடாகமாக 4. உண்மையான வாழ்வாக 5. ஆறுதல் அளிப்பவராக

16. இயேசு பேதுருவை திருச்சபையின் தலைவராக ஏற்படுத்தியதன் காரணமாவது,
1. பேதுருவின் ஆழ்ந்த அமைதி 2. பேதுருவின் விசுவாசம், அன்பு, தாழ்மை 3. பேதுருவின் வயது, அறிவு, அனுபவம் 4. பேதுருவின் தோற்றம், அமைதி 5. பேதுருவின் தலைமைத்துவம்

17. பெந்தகோஸ்தே நாளில் பேதுருவின் அருளுரையில் குறிப்பிடப்பட்டுள்ள இறைவாக்கினர்,
1. யோவேல் 2.யோனா 3. மலாக்கி 4. தானியேல் 5. எரேமியா

18. திருச்சபையில் முதன்முதலாக வேதசாட்சியாக மரித்தவர்,
1. பேதுரு 2. பிலிப்பு 3. புனித செபஸ்தியார் 4. ஸ்தேவான் 5. பவுல்

19. பேதுரு லித்தாவில் செய்த புதுமை,
1. யுத்திக்கு என்ற இளைஞனைச் சுகப்படுத்தியது 2. பிறவி முடவனைச் சுகப்படுத்தியது 3. முடக்குவாதகார இளைஞனைச் சுகப்படுத்தியது 4. தொற்காவை உயிர்ப்பித்தது 5. அசுத்த ஆவியை விரட்டியது.

20. புனித பவுல் "அறியாத தெய்வத்தை" அறிவிப்பதாகக் கூறி உண்மை கடவுளைப் பற்றிய செய்தியைக் கொடுத்த இடம்,
1. எபேசு 2. தெசலோனிக்கா 3. ஏதென்சு 4. பிலிப்பு 5. கொரிந்து

**விடைகள் கிறிஸ்தவம் 1. பகுதி 1**
1.2, 2.3, 3.3, 4.4, 5.3, 6.1, 7.2, 8.3, 9.2, 10.1, 11.4, 12.2, 13.5, 14.1, 15.3, 16.2, 17.1, 18.4, 19.1, 20.3.

### கிறிஸ்தவம் 2. பகுதி 1.

**மிகப்பொருத்தமான விடையின்கீழ் கோடிடுக**

01. பாப்பரசர் 23ம் அருளப்பரால் வெளியிடப்பட்ட சுற்று மடல்கள் இரண்டு,
1. தொழிலாளர் சாசனம், குவாத்திரா ஜெசிமா
2. அன்னையும் ஆசிரியையும், அவனியில் அமைதி
3. தொழிலாளர் சாசனம், மனித உழைப்பு
4. மக்கள் முன்னேற்றம், மனித உழைப்பு
5. நேரும் நோவாரும், அன்னையும் ஆசிரியையும்

02. இறைவன் மனிதனைப் படைத்ததன் காரணம்,
1. சமூகத்தில் மனிதராக வாழ்வதற்கு 2. உலகை நவீனப்படுத்துவதற்கு 3. தனது திறமைகளை பிறருக்குக் காட்டுவதற்கு 4. படைப்பை ஆண்டு நடாத்த 5. சுயமாக செயலாற்ற

03. 'இன்றைய உலகின் திருச்சபை' என்ற கொள்கைத் திரட்டிற்கேற்ப பொது அதிகாரம் ஏற்படுத்தப்பட்டது.
1. கடவுளால் 2. மனிதரால் 3. அரசாங்கத்தால் 4. நாட்டுத் தலைவர்களால் 5. கல்வி அறிவால்

04. திருச்சபை ஒரு குறிப்பிட்ட அரசாங்கத்தோடோ, கட்சியோடோ சேர்ந்து ஒன்றுபடக்கூடாது ஏனெனில்,
1. உலக தாபனம் 2. ஆன்மீக தாபனம் 3. பொது நிறுவனம் 4. தூய ஆவியால் வழிநடத்தப்படுகிறது. 5. மனிதனைச் சார்ந்த காலத்தைக் கடந்தது.

5. டிடாக்கே என்ற நூலின் படிப்பினைகள் யாருடையது?
1. அப்போஸ்தலர்களின் 2. ஆரம்ப சபையின் பிதாக்களின் 3. அப்போஸ்தலிக்க ஏடுகளின் 4. கப்பதோகிய குருக்களின் 5. இறைவாக்கினர்களின்

06. திருச்சபை வரலாற்றில் முதல் ஏற்பட்ட குழப்பங்கள்,
1. அரச கலாபனைகள் 2. உரோமை கலாபனைகள் 3. குழுக் கலாபனைகள் 3. யூத கலாபனைகள் 5. கிரேக்க கலாபனைகள்

07. 'திருச்சபை கிறிஸ்துவின் உடல்' எனப் பவுல் குறிப்பிடுவது,
1. கொரிந்தியருக்கு எழுதிய திருமுகத்தில்
2. எபிரேயருக்கு எழுதிய திருமுகத்தில் 3. எபேசியருக்கு எழுதிய திருமுகத்தில் 4. கலாத்தியருக்கு எழுதிய திருமுகத்தில் 5. தெசலோனிக்கேயருக்கு எழுதிய திருமுகத்தில்.

08. இறைவன் நமக்கு அளிக்கும் கொடைகளில் சிறந்தது?
1. நித்திய வாழ்வு 2. திருவருட்சாதனம் 3. ஆன்மா 4. உயிர் 5. பரிசுத்த ஆவி.

09. தூய ஆவியின் செயற்பாடுகள் ஒவ்வொருவரிலும் வெளிப்படுவது,
1. பொது நன்மைக்காக 2. நற்செய்தியைப் போதிக்க 3. புகழைத்தேட 4. சமுதாயத்தில் நற்பெயர் எடுக்க 5. ஒருவரின் திறமைகளை வளர்க்க

10. நமக்காக அவர் ஏழ்மையானார் எனில் அந்த ஏழ்மை மூலம் அவர் திரட்டிய செல்வம்,
1. திருச்சபை 2. போதனைகள் 3. நிலைவாழ்வு 4. சிலுவை மரணம் 5. அருட்சாதனங்கள்

11. பரிசுத்த ஆவியைக் குறிக்க பவுல் பயன்படுத்தும் கிரேக்க சொல்,
1. ரூ ஆக் 2. காரிஸ் 3. பரூதியா 4. நெயூமா 5. எக்கிலேசியா

12. மனிதனை சடப்பொருளுக்கு மேலாக்க் கருதுவது,
1. சுதந்திரமானவன் 2. அமைதியானவன் 3. ஆறு அறிவுள்ளவன் 4. அழியாத ஆன்மா உள்ளவன் 5. உயிர் உள்ளவன்

13. இளைஞர்களுக்கு மிகத் தேவையான கல்வி,
1. புவியியல், சமயம் 2. பொருளியல், தமிழ் 3. பொருளியல், அரசியல் 4. சமயம், அரசியல் 5. குடியியல், அரசியல்

14. இலங்கையில் கிறிஸ்தவ சமூகம் ஒன்று இருப்பதை முதல் கூறும் ஓர் எழுத்தாளர்,
1. யுவாண்டிபரோஸ் 2. கொஸ்மஸ் 3. பெரிய பெருமாள் 4. அரசகேசரி 5. புவிராக பண்டார

15. போர்த்துக்கேயர் இலங்கையைக் கண்டுபிடித்தபோது வாழ்ந்த பாப்பரசர்,
1. பாப்பு 2ம் யூலியசு 2. பாப்பு 13ம் சிங்கராயர் 3. பதினாறாம் பத்திநாதர் 4. பாப்பு 23ம் அருளப்பர் 5. பாப்பு 2ம் அருள் சின்னப்பர்

16. போர்த்துக்கேயரிடமிருந்து இலங்கையருக்குக் கிடைத்த மிக முக்கிய கொடை எது?
1. மேலைநாட்டுக் கலாச்சாரம் 2. கத்தோலிக்க விசுவாசம் 3. கத்தோலிக்க ஆலயங்கள் 4. விலையுயர்ந்த பொருட்கள் 5. கத்தோலிக்க வழிபாட்டு முறை

17. திருவிவிலியத்தை எபிரேய மொழியிலிருந்து இலத்தீன் மொழிக்கு மொழி பெயர்த்தவர்,
1. புனித ஜெரோம் 2. புனித பசில் 3. புனித அகுஸ்தீனார் 4. புனித கிறிஸ்சோஸ்தம் 5. புனித அத்தனாசியர்

18. போர்த்துக்கேயர் இலங்கைத் திருச்சபையுடன் செய்துகொண்ட உடன்படிக்கை,
1. பத்ரோதோக 2. ஆதோ கரவி 4. போர்த்துக்கேய - திருச்சபை 5. மக்னட் ஆதோ 5. பத்ரோ ஆதோ

19. இலங்கைக்கு வந்த முதல் ஐரோப்பிய துறவற கன்னியர் சபை,
1. திருக்குடும்ப கன்னியர் சபை 2. வெஸ்லியன் சபை 3. புனித இராயப்பர் சபை 4. கார்மேல் சபை 5. புனித பிரான்சிஸ்கன் சபை

20. சங்கிலி அரசன் மகனிற்கு நற்செய்தியை அறிவித்து அவரை மனம் திருப்பியவர்,
1. யோசவ்வாஸ் 2. அந்திரோ டி சூசா 3. பிரேவி கென்ரே 4. பிரான்சிஸ் சவேரியார் 5. யாக்கோமே கொன்சால்வேஸ்

**விடைகள் கிறிஸ்தவம் 2. பகுதி 1**
1.2, 2.4, 3.1, 4.3, 5.1, 6.4, 7.3, 8.5, 9.1, 10.3, 11.4, 12.4, 13.5, 14.2, 15.1, 16.2, 17.1, 18.5, 19.1, 20.2

## நீதிக்காய் உழைப்போம்

- அருட்பணி. அ. சகாயநாதன் (தி.ப) -

போராட்டமே வாழ்வாகிப்போன நம் வாழ்வில், சாவு மலிந்துபோன எம் மண்ணில் இழப்புக்கள் எமக்குப் புதியவை அல்ல. சோகங்களும் வேதனைகளும் எமக்குத் தாங்க முடியாதவை அல்ல. இருந்தாலும் இனிப் பெறமுடியாத, பெறுமதி மிக்க உயிர்கள் பலியாகிக்கொண்டிருப்பதுதான் தாங்கமுடியாத வேதனை!

சொந்த மண்ணிலே இடம்பெயர்ந்து உடலால், உறவால் அனைத்தையும் இழந்து மனிதப் பேரவலத்துக்குள் மரணத்தின் விளிம்பில் நின்று வாழ்வா? சாவா? இதில் எதைத் தெரிவது என்று தெரியாமல் எம் உடன்பிறப்புக்கள் நிற்கின்றார்கள். கொடிய, நீதியற்றவர்களின் போருக்குள் சிக்குண்டாலும் எல்லாவற்றையும் தாங்கி இலக்கை நோக்கி நிற்கவேண்டியவர்களாகின்றோம். "வாரும் ஆண்டவரே, எமக்கு விடுதலை அளிக்க வாரும்" என்பதே சாவுக்குள் வாழும் மக்களின் இறுதிச் செபமாகவுள்ளது.

மறுபக்கத்தில் தங்கள் எதிர்காலம் எப்படி இருக்கும் என்றே தெரியாமல், என்ன நடந்தால்தான் நம்மால் என்ன செய்ய முடியும்? என்ற எண்ணத்தில் வரும் எல்லாக் கஸ்ர துன்பங்களையும் ஏற்றுக்கொள்வதைவிட வேறு வழியேயில்லை என்ற நிலையும் மேலோங்கி நிற்கிறது. இப்படியான தப்பான மனப்பான்மை நமது முன்னேற்றத்திற்கான மரண அடி ஆகும். இந்நிலை நீடித்தால் எம்மினம் சீரழிந்தே போய்விடும்.

நாம் எதிர்பார்க்கும் விடுதலைபெற்ற புதிய சமூதாயம் திடீரென்று ஒரு நாளில் வந்துவிடப்போவதில்லை. ஒருவரையொருவர் நேசிக்கின்ற, மதிக்கின்ற, சமாதானமும உண்மையும் நிறைந்த சமூதாயம் வளரவேண்டும் என்று நாம் விரும்பினால் மட்டும் போதாது. அதற்கு வேண்டிய செயல்களில் நாம் ஈடுபட வேண்டும். இப்புதிய சமூதாயத்தை உருவாக்க கிறிஸ்தவ மக்களாகிய நாம் தலைமையேற்று, பொறுபேற்று பெரும் பணி செய்யலாம், செய்ய வேண்டும்.

இலட்சக்கணக்கான மக்களின் வாழ்வை, வாழ்விடங்களை சீர்குலைத்து தலைவிரித்துத் தாண்டவமாடும் அநீதியான போரை, அதற்குக் காரணமானவர்களைத் தட்டிக்கேட்க வேண்டும். பாதிக்கப்பட்ட மக்களுக்கு மறுவாழ்வு அளித்து நீதி வழங்கிட, சீர்குலைந்த வாழ்வைச் செப்பனிட மனிதத் தன்மையையும் மகிமையையும் அதன் பெறுமதியையும் அளித்திட முன்வர வேண்டும்.

திருச்சபை மேற்கொள்ளவேண்டிய முதன்மையான பணி நீதிக்காகவும் உண்மைக்காகவும் உழைப்பதைவிட வேறெதுவாகவும் இப்போதைய சூழ்நிலையில் இருக்கமுடியாது. இன்று பல்வேறு பகுதிகளில் நீதிக்காகவும் உரிமைக்காகவும் உண்மைக்காகவும் போராடி உயிர் துறக்கும் எண்ணற்ற இதயங்களுடன் நாமும் போராடி ஒத்துழைப்போமாகில், "நீதியின் நிமித்தம் துன்புறுத்தப்படுவோர் பேறுபெற்றோர்" (மத். 5:10) என்று கூறிய கிறிஸ்துவின் வார்த்தைக்கு உயிர் கொடுக்கிற தியாகிகள் நாம் என்பதை உலகுக்கு உணர்த்த முடியும். இப்படிப்பட்ட தலைவர்களுக்காக, பணியாளர்களுக்காக*போராடும் எமது இனம் இன்று எதிர்பார்த்துக்கொண்டிருக்கின்றது. ஆபத்து அருகில் உள்ளதைக் காண்கிறார்கள். ஆனால் நிச்சயமாகக் கிடைக்கப்போகும் வெற்றியை உணரவில்லை.

நாம் இப்போது இறுக்கமான காலத்தில் நீதிக்காகவும் உண்மைக்காகவும் உரிமைக்காகவும் முழு அர்ப்பணத்தோடு உழைக்க முன்செல்லாவிட்டால் நாம் மட்டுமல்ல நம் சந்ததிகளும் விடுதலையடையப் போவதில்லை. இப்போதைய வரலாறும் வாழ்வின் கொடுமைகளும் நமது விசுவாசத்திற்கும் திருச்சபைக்கும் பெரும் சவால். இதை செய்யத் தவறினால் கிறிஸ்தவ வாழ்வு சாரமற்ற உப்பாகிவிடும். நீதியின் அரசை அறிவித்து அடிமை மக்களின் உரிமைக்காகப் போராடி சிலுவை மரணம் அடைந்த கிறிஸ்துவின் திருச்சபை நீதியையும் உண்மையையும் நிலைநாட்டுவதைத் தன் உயிர் மூச்சாகக் கொள்ளவேண்டும். இதைச் செய்வது மிகக் கடினம்தான். ஆனால் எதிர்கால கிறிஸ்தவ சமூதாயம் இதில்தான் அடங்கியுள்ளது. பல பின்னடைவுகளுக்குள்ளும் இறப்புக்கள், இழப்புக்கள், இடம் பெயர்வுகள், அடக்குமுறைகள் போன்றவற்றிற்குள்ளால் வருகின்ற எதிர்கால சமூதாயம் இத்தகைய பணிகளை இரந்து கேட்கிறது. இதில் வீச்சாகச் செயற்பட்டால் நிறைவான பலம் உண்டு.

நம் வரலாற்றைப் பதிவு செய்வது நாம் அல்ல, நமது எதிர்காலச் சந்ததிகள்தான். அவர்கள் பதியப்போவது நாம் போதிப்பதை மட்டும் அல்ல, நாம் சாதித்தவைகளையும் செய்கின்ற செயல்களையும்தான். ஆகவே நாம் பேசுவதும் செய்வதும் போதிப்பதும் சாதிப்பதும் சாட்சிபகர்வதும் முரண்பாடாகிவிடக்கூடாது. நீதிக்கும் உண்மைக்கும் சாட்சி பகர்ந்து உரிமைபெற்ற, விடுதலை பெற்ற புதிய சமூகத்தை உருவாக்குவோம்.

## உலகத் திருச்சபைச் செய்திகள்



## இலங்கைத் தமிழர்களுக்கு ஆதரவாக

# தமிழகத் திருச்சபையினரின் குரல்கள்

### வேளாங்கண்ணி பேராலயத்தில்

வேளாங்கண்ணிப் பேராலயத்தில் பெப்ரவரி 22ஆம் திகதி ஈழத்தமிழர்களுக்கு ஆதரவாகவும், இலங்கையில் நடைபெறும் போரை நிறுத்தும்படியும் உண்ணாவிரதப் போராட்டம் நடைபெற்றது.

காலை 9.00 மணி முதல் மாலை 4.00 மணிவரை இது நடைபெற்றது. மாலை 4.00 மணியளவில் பெருந்திரளான அன்னையின் பக்தர்கள் பங்கேற்ற மெழுகுவர்த்தி ஊர்வலம் நடைபெற்றது. அதன் முடிவில் ஐந்து மணியளவில் அமைதி திரும்புவதற்கான சிறப்புத்திருப்பலி நடைபெற்றது. பேராலய அதிபர் பேரருள்திரு சேவியர் அடிகளார் இதற்குத் தலைமை தாங்கினார். பங்குத் தந்தையும் துணை அதிபருமான அருள்திரு ஆரோக்கிய தாஸ் முன்னிலை வகித்தார். உதவி அருட்தந்தை டேவிட் தனராஜ் இதற்கான ஏற்பாடுகளை திறம்படச் செய்திருந்தார்.

### தூத்துக்குடி மறைமாவட்டத்தில்

தூத்துக்குடி மறைமாவட்ட (நகர) கிறிஸ்தவ வாழ்வுரிமை இயக்கத்தின் சார்பில் ஈழத்தமிழர்களுக்கு ஆதரவாகவும் போர் நிறுத்தம் கோரியும் பெப்ரவரி 8ஆம் திகதி காந்தி சிலை அருகில் உண்ணாநிலைப் போராட்டம் நடைபெற்றது.

மறைமாவட்ட முதன்மைக்குரு பேரருட்திரு ஆஸ்வால்டு இதனைத் தொடக்கிவைத்து தலைமையுரையாற்றினார். திருச்செந்தூர் மக்களவை முன்னாள் உறுப்பினர் திரு. ஏ. டி. கே. ஜெயசீலன் மாவட்ட வழக்குரைஞர்கள் சங்கத்தலைவர் திரு. டி. எம். பிரபு வழக்குரைஞர்கள் அதிசயக்குமார், நக்கீரன், செங்குட்டுவன் ஆகியோரும் பெரியார் திராவிடக்கழகச் செயலாளர் மனோகரன், விடுதலைச் சிறுத்தைகள் நகரச் செயலர் மோகன் குமார், நெய்தல் ஆன்டோ, அருட்சகோ. ரோஸ்சின், திருமதி ஜோஸ்பின், அருட்பணி செல்வன், அருள் பணி. ச. தே. செல்வராசு, அருட்பணி. வெனி, திரு. தமிழ்மாந்தன், திரு. ஜார்ஜ் கோமஸ், பாஸ்டர் கிப்சன் உள்ளிட்ட பலரும் எழுச்சியுரை ஆற்றி கண்டனம் தெரிவித்தனர்.

காலை முதல் மாலை வரை நிகழ்ச்சிகளை மறைமாவட்ட கிறிஸ்தவ வாழ்வுரிமை இயக்கத்தின் பொறுப்பாளர் திரு. ஜார்ஜ் வில்பிரட் தொகுத்து வழங்கினார். அதன் மறைமாவட்ட ஒருங்கிணைப்பாளர் அருட்பணி ஜேம்ஸ் விக்டர், பவளம் தொலைக்காட்சி இயக்குநர் அருட்பணி ஜெரால்டு மற்றும் நகர கிறிஸ்வர் வாழ்வுரிமை இயக்கப் பொறுப்பாளர் இதற்கான ஏற்பாடுகளைச் செய்திருந்தினர்.

### கும்பகோணம் மறைமாவட்டத்தில்

கும்பகோணம் மறைமாவட்ட கிறிஸ்தவ வாழ்வுரிமை இயக்கம் மற்றும் இளையோர் இயக்கத்தின் சார்பில் பெப்ரவரி 26ஆம் திகதி இலங்கையில் போர் நிறுத்தம் கோரியும் தமிழினப் படுகொலையை நிறுத்தக் கோரியும் மாபெரும் கண்டனப் பேரணி நடைபெற்றது.

தூய மரியன்னை பேராலயத்தில் தொடங்கிய இப்பேரணி கும்பகோணம் நகரை வலம் வந்தது. குடந்தை ஆயர் அந்தோனிசாமி இதற்குத் தலைமை வகித்தார். முதன்மைக்குரு பேரருள்திரு சி. பீட்டர் பிரான்சிஸ், மறைமாவட்ட முதன்மைக்குரு பேரருள்திரு. ஜோசப் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

திரளான மறைமாவட்டக் குருக்களும், அருட்சகோதரிகளும், இதயா மகளிர் கல்லூரி மாணவிகள் உள்ளிட்ட இளம்பெண்களும், இளையோர் இயக்க உறுப்பினர்களும் இதில் கலந்துகொண்டனர். ஏறக்குறைய 5000 பேர் கண்டன ஊர்வலத்தில் பங்கேற்றது கும்பகோண நகரத்தில் தக்க பரப்புரையை மேற்கொள்ள உறுதுணையாக இருந்தது.

அங்ஙனமே இலால்குடி மறைவட்டத்தில் பெப்ரவரி 16 ஆம் திகதி முதன்மைகுரு பேரருள்திரு பாக்கியசாமி தலைமையிலும், பெப்ரவரி 03ஆம் திகதி மைக்கேல்பட்டி மறைவட்டத்தில் முதன்மைக்குரு பேரருள்திரு சந்தியாகு தலைமையிலும் கண்டனக்கூட்டங்கள் நடைபெற்றது. திரளாக கிறிஸ்தவர்களும், பிறமதச் சகோதரர்களும் பங்கேற்றுத் தங்கள் ஈழத்து உறவுகளுடனான தோழமையை வெளிப்படுத்தினர்.

### கோவை மறைமாவட்டத்தில்

மார்ச் முதல் திகதியன்று கோவை மறைமாவட்டத்தில் இலங்கையில் போர்நிறுத்தத்தை வலியுறுத்தி ஆயர் தாமஸ் அக்குவினாஸ் தலைமையில் ஐயாயிரத்திற்கும் மேற்பட்ட கிறிஸ்தவர்கள் பங்கேற்ற அறவழி மௌன ஊர்வலம் கோவையில் நடைபெற்றது.

ஈழத்தமிழர்களின் துன்பியலோடு தமிழகத் திருச்சபை கொண்டுள்ள தோழமை இப்போராட்டத்தில் வெளிப்படுத்தப்பட்டது. அனைவரும் இலங்கையில் போர் நிறுத்தப்பட வேண்டும், "இந்திய அரசே, தலையிட்டு அமைதியைக் கொணர்ந்திடு" என்றெல்லாம் பதாகைகளை ஏந்தி தங்கள் எண்ணங்களை வெளிப்படுத்தினர்.

இதனைக் குறித்துக் கருத்து தெரிவித்த ஆயர், "போர் நிறுத்தம் மேற்கொள்ளப்பட வேண்டும். அப்பாவி மக்கள் கொல்லப்படுவது முடிவுக்கு வரவேண்டும். எங்கள் தோழமையை, உடனிருப்பை அறவழியில், அமைதி ஊர்வலத்தின் வழியாகத் தெரிவிக்கின்றோம். அமைதி ஏற்படுத்த போர் மட்டும் தீர்வாக அமைந்திடாது. இப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காணப்பட வேண்டும். இருதரப்பும் அமர்ந்து பேச்சுவார்த்தையின் மூலம் அமைதியை ஏற்படுத்த வேண்டும்" என்றார்.

அமைதி ஊர்வலத்தின் முடிவில் இலங்கையில் அமைதி திரும்ப ஆயரின் தலைமையில் கூட்டுத் திருப்பலி நடைபெற்றது.

### பாளையங்கோட்டையில்

## ஈழத்தமிழர்களுக்கு ஆதரவுக் குரல்

ஈழத் தமிழர் படுகொலையைக் கண்டித்து பாளையங்கோட்டை மறை மாவட்டத்தின் கிறிஸ்தவ வாழ்வுரிமை இயக்கம் மற்றப் பணிக் குழுக்களோடு இணைந்து மாபெரும் அமைதிப் பேரணியை மேற்கொண்டது.

இந்தப் போராட்டத்தை மூன்று கட்டங்களாக நடத்தத் தீர்மானிக்கப்பட்டது. முதல் கட்டமாக 06.02.2009 அன்று மறைமாவட்டத்தின் அனைத்துப் பள்ளிகளிலும் (துறவற சபைகள் நடத்தும் பள்ளிகள் உட்பட) மெழுகுதிரிப் பவனியும் அஞ்சலியும் நடத்தப்பட்டது. அதற்கு அடுத்தபடியாக 15-02-2009 ஞாயிறு அன்று தென்காசி, சங்கரன்கோவில், பாளையங்கோட்டை, அம்பாசமுத்திரம் ஆகிய நான்கு இடங்களிலும் மாலை 4.00 மணியளவில் மாபெரும் அமைதிப் பேரணி நடத்தப்பட்டது.

எல்லாப்பகுதிகளிலும் மக்கள் பல்லாயிரக்கணக்கில் திரண்டு வந்து தமது எழுச்சியை வெளிப்படுத்தினர். எல்லாப் பகுதிகளிலும் நகரின் முக்கிய பகுதிகள் வழியாக பேரணி சென்றது. மற்ற மக்களுக்கு இது ஒரு விழிப்புணர்வை ஏற்படுத்துவதாக அமைந்தது. இதில் அந்தந்தப் பகுதிகளுக்கு உட்பட்ட பங்குத்தந்தையர்களும், அருட்சகோதரிகளும், இறை மக்களும் கலந்துகொண்டு தங்கள் எதிர்ப்பைத் தெரிவித்தனர். துண்டுப் பிரசுரங்களும் விநியோகிக்கப்பட்டன.

பேரணியின் முடிவில் முழக்கங்களும், மெழுகுதிரி அஞ்சலியும் மேற்கொள்ளப்பட்டது. தொடர்ந்து தற்பொழுது 10,000,000 கையெழுத்து வேட்டை மறைமாவட்டம் முழுவதும் நடந்துகொண்டு இருக்கின்றது. அமைதி திரும்பும்வரை போராட்டம் பல வடிவங்களில் மேற்கொள்ளப்படும். இதைப் போராட்ட செயற்குழு முடிவெடுத்து செயல்படுத்தும்.

மறை மாவட்டத்தின் முதன்மைக் குரு, மூன்று வட்டார அதிபர்கள், அருட்தந்தையர்கள், அருட்சகோதரிகள், பொதுநிலையினரைத் தாங்கிய அந்தச் செயற்குழுவை மறைமாவட்டத்தின் கிறிஸ்தவ வாழ்வுரிமை இயக்க ஒருங்கிணைப்பாளர் அருட்பணி. ராஜேஷ் ஒருங்கிணைத்துச் செல்கின்றார். *தொடர்ந்து போராடுவோம். வாழ்வைப் பெற்றுக்கொடுப்போம்.*

---

### இருமனங்கள் இணைவதே திருமணம்

### உயரமெல்லாம் திருமணத்திற்குத் தடையில்லை!

## சாதாரண உயரமுடைய காதலரை கரம்பிடித்த குள்ளமான யுவதி



சியரா லியோனில் வாழும் மிகவும் குள்ளமான பெண்ணான மாஸிரே கமாராவுக்கும், சாதாரண உயரமுடைய அவரது காதலருக்கும் நடந்த திருமணத்தை கண்டுகளிக்க பல்லாயிரக்கணக்கானோர் அந்நாட்டுத் தலைநகரில் கூடினர்.

சந்தையில் தேயிலை விற்கும் இப்பெண்ணின் திருமணமானது அந்நாட்டு அரச தொலைக்காட்சியில் நேரடியாக ஒளிபரப்பப்பட்டது. மணமகள் மாஸிரே கமாரா ஒரு கிறிஸ்தவர். அவரது காதலரான மணமகன் மொஹமட் பஸிரு அல்காரி ஒரு முஸ்லிம் ஆவார்.

இதன் பிரகாரம் மேற்படி திருமணம் கிறிஸ்தவ முறைப்படி தேவாலயத்திலும், இஸ்லாமிய சம்பிரதாயப்படி பள்ளிவாசலிலும் நடாத்தப்பட்டது.

திருமண நிகழ்வில் சியரா லியோனின் பாராளுமன்ற உறுப்பினர்கள் பலரும், முன்னாள் பிறீடவுண் மேயரும் கலந்து கொண்டனர். இதன்போது மாஸிரே கமாரா கதிரையொன்றில் ஏறி தனது கணவருடன் முதல் முத்தத்தை பரிமாறிக்கொண்டார்.

---

### இறைபணியில் 15 ஆண்டுகளை நிறைவுசெய்யும்

## அருட்தந்தை பீற்றர் சுபராஜ் (C. M. F.)



கொழும்பு மாநகரிலே செக்கடித்தெருவில் அமைந்துள்ள புனித அன்னம்மாள் மற்றும் புனித வேளாங்கண்ணி மாதா ஆலயத்தின் பங்குத்தந்தை அருட்பணியாளர் பீற்றர் சுபராஜ் (சி. எம். எவ்.) அவர்கள் இவ்வாண்டு தனது குருத்துவ வாழ்வில் 15 வருடங்களை நிறைவுசெய்கின்றார்.

சுமார் 500 வருட பழமை வாய்ந்த மங்காத புகழுடைய அன்னம்மாள் அன்னை வேளாங்கண்ணிப் பங்கு கடந்த 45 வருடங்களாகத் தனித் தமிழ் பங்காக இயங்கி வருகிறது. இது தனிப்பங்காக உருவாக உழைத்தவர் அருட்தந்தை மைக்கல் சவிரிமுத்து ஆவார். 45 ஆண்டுகாலப் பகுதியில் கடந்த 10 ஆண்டுகள் எம் பங்கின் பொற்காலம் எனலாம்.

இந்தியாவின் தென்னவனாய் வேம்பார் எனும் ஊரிலே திரு. திருமதி பீற்றர் மொறைஸ் - மெட்டில்டா வாஸ் தம்பதிகளின் மூத்த புதல்வனாக 1964-07-09ல் எம் பங்குத்தந்தை பீற்றர் சுபராஜ் அடிகளார் பிறந்தார். ஆரம்பக் கல்வியை சென். பொஸ்கோவில் கற்றார். இறை அழைத்தல் பெற்று இமையம் போன்ற புனித கிளரசியன் கிளாரட் சபையில் இணைந்து குருவானார்.

கடந்த 2000ம் ஆண்டு இவர் இந்தியாவில் இருந்து எம் பங்கிற்கு வந்தார். எமது எண்ணங்களும் கனவுகளும் நிறைவேற பங்கின் வளர்ச்சியில் தன்னை முழுமையாக அர்ப்பணித்தார். இவருடைய அயராத கடும் முயற்சியினால் அன்னை வேளாங்கண்ணி ஆலயம் இப்போது பளிங்குக் கற்களில் மின்னுகின்றது.

இளைஞர்கள் இமையம் தொடவும், இளம் சிறார்கள் நலம் பெறவும் இலவசமாய் எண்ணற்ற பயிற்சிகளை இடைவிடாமல் தொடர்ந்துகொண்டிருக்கிறார். கணனி, தையல், மறைக்கல்வி, இசைக்கல்வி, நாடகம், நடனம், பாடர்குழாம் என இவருடைய பணிகளைச் சொல்லிக் கொண்டே போகலாம்.

நோயிற்றோருக்கு மருத்துவ வசதிகளும், ஏழைப் பெண்களுக்கு திருமணமும் மறுவாழ்வும், ஏழை எளியவர்களுக்கு உபகாரமும், வியாபாரிகளுக்கு விருத்திச் செயற்பாடும், இளம் சிறார்களுக்கு வங்கிக் கணக்கு என வரையறுத்து முறையாக எம் பங்குத்தந்தை செயற்பட்டு வருகிறார். அது மட்டுமா இறைமக்களாக வாழ இறைவனுடனும் அயலவரிடத்திலும் உண்மையான இறை ஆன்மீகத்தில் ஈடுபடவும், அன்போடும் பண்போடும் வாழவும் வழிநடத்திச் செல்கின்றார். அடிகளாருக்கு எமது நல்வாழ்த்துக்களையும் செபங்களையும் தெரிவிக்கின்றோம்.

- பங்குமக்கள், பங்கு மேய்ப்பு சபை, மறைக்கல்விப் பிள்ளைகள்.

---

## 18 வயதுக்கு கீழ்ப்பட்ட சிறுமிகளின் திருமணத்துக்குத் தடை



சவுதி அரேபியாவானது 18 வயதுக்குக் கீழ்ப்பட்ட சிறுமிகளுக்குத் திருமணம் செய்துவைப்பதற்கு தடைவிதிக்கவுள்ளதாக அந்நாட்டு நீதி அமைச்சர் மொஹமட் அல் - ஈஸா தெரிவித்தார். 8 வயது சிறுமியொருவரை, அச்சிறுமியைவிட 40 வயது அதிகமான நபரொருவருக்குத் திருமணம் செய்துவைத்த வழக்கானது சர்வதேச ரீதியான கண்டனத்தைச் சம்பாதித்ததையடுத்தே இத்தடையை விதிக்கத் தீர்மானித்ததாக நீதி அமைச்சர் கூறினார். 18 வயதுக்குக் கீழ்ப்பட்ட சிறுமி ஒருவர் குடும்பப் பொறுப்பை ஏற்கவோ தாய்மை அடையவோ பொருத்தமற்றவர் என அவர் தெரிவித்தார்.

# பழைய கேள்விகளும் புதிய பதில்களும்

**அடிப்படைவாத பெந்தக்கோஸ்தேசபைச் சகோதரர்களின் கேள்விகளுக்கு விவிலிய அடிப்படையில் தெளிவான, அழுத்தமான பதில்களைத் தாங்கி இத்தொடர் வருகிறது.**

தொடர் – 22

தருவது தஞ்சை டோமி

**கேள்வி :–** கத்தோலிக்கர்கள் விக்கிரக ஆராதனைக்காரர்கள். அதுதான் எனக்குப் பிடிக்கவில்லை. ஏன் கத்தோலிக்கர்கள் உருவ வழிபாட்டை கைவிட மறுக்கின்றனர்?

விடை: அண்மையில் நான் பாண்டி சென்றிருந்தேன். எனக்கு நன்றாகப் பரிச்சயமான குடும்பம் அங்குள்ளது. அவர்கள் குடும்பம் பாரம்பரியமாக கத்தோலிக்க விசுவாசத்தில் ஊறிய குடும்பம். திருச்சபையில் மிகுந்த ஈடுபாடுள்ள குடும்பம். நல்ல வசதியான குடும்பம். நான் அவர்கள் வீட்டிற்கு நீண்ட நாட்களுக்குப்பின் சென்றேன். வீட்டில் செப அறையில் விவிலியமும், இயேசுவின் படமும் மட்டுமே இருந்தது. அவர்கள் குடும்பம் பாரம்பரியமாக புனித அந்தோனியாரின் பரிந்துரையில் பற்றுள்ளவர்களாக வாழ்ந்தவர்கள்.

அவர்களுடன் பேசிக்கொண்டிருந்தபோது அவர்கள் மகள் மருத்துவத்துறைக்காகப் படித்துக்கொண்டிருக்கின்ற பக்தியுள்ள பெண் ஜான்சி, "பாதர் நாங்க இப்ப நம் ஆர். சி. சேர்ச்சுக்கே போவதில்லை. நாங்கள் பெந்தகோஸ்தே கொட்டகைக் கோயிலுக்குத்தான் போறோம்" என்றாள். காரணம் கேட்டேன். "நம் கோயில்ல வழிபாடு ஓர் உணர்ச்சியற்றதாக, உயிரோட்டமில்லாததாக இருக்கு பாதர். அதுமட்டுமல்ல கத்தோலிக்கத் திருச்சபையில் விக்கிரக ஆராதனை செய்கின்றனர். அதுதான் எனக்குப் பிடிக்கவில்லை. ஏன் பாதர் கத்தோலிக்கர்கள் உருவ வழிபாட்டைக் கைவிட மறுக்கின்றனர்?" என்று கேள்வி எழுப்பினாள். ஏறக்குறைய மூன்று மணிநேரம் பேசிய பின்தான் ஜான்சியையும், அவரது தாயையும் என்னால் நம்பவைக்க முடிந்தது. படித்துப் பட்டம் பெற்ற டாக்டர்களையே பசப்பு வார்த்தை ஆடு திருடர்கள் ஏமாற்றிவிட்டார்கள் என்றால் சாமானியக் கிறிஸ்தவர்கள் எம்மாத்திரம் என்பதால்தான் அன்று அந்த ஜான்சியுடன் நான் மேற்கொண்ட விவிலிய எதார்த்தம் கலந்த உரையாடலை மன்னா வாசகர்களுக்கு வழங்கி போலிகளோடு போராடக்கூடிய தைரியம்பெற இதை எழுதியுள்ளேன்.

கத்தோலிக்கத் திருச்சபைமீது பிரிவினைச் சபைகள் குறிப்பாக பெந்தகோஸ்தே சபைகள் சாற்றும் பெரிய குற்றச்சாட்டு விக்கிரக ஆராதனை விஷயம்தான். பரம்பரை பரம்பரையாகக் கத்தோலிக்க விசுவாசத்தில் ஆழப்பட்டு இருந்த இந்தப் போலிகளின் பொய் வார்த்தைகளை நம்பி உணர்வுக்குக் கிடைக்கும் சுதந்திரத்திற்காக உள்ளன்புடன்கூடிய விசுவாசத்தை உதறித் தள்ளியுள்ளதைக் கத்தோலிக்க போதகர்கள் சாதாரணமாக எடுத்துக்கொள்ளக் கூடாது.

சரி நமது எதார்த்தம் கலந்த, விவிலியம் சார்ந்த, விக்கிரக ஆராதனை பற்றிய விவாதத்திற்கு வருவோம். அமரர் ஜாவான் ஜோதி என்றால் இந்தியா பற்றி ஓரளவு தெரிந்தவர்களுக்கும், டெல்லி சென்றவர்களுக்கும் தெரியும். சாதாரணமாக பார்ப்பவர்களுக்கு அது டெல்லியில் தொடர்ந்தெரியும் ஒரு தீபம், அவ்வளவுதான். ஆனால் இந்தத் தீபத்திற்கு முன் இந்தியாவின் ஜனாதிபதியாகட்டும், பிரதமராகட்டும், இராணுவ தளபதிகளாகட்டும் காலணிகளைக் கழற்றிவிட்டு தலை வணங்குகிறார்களே ஏன்? காரணம் இது பெரும் தீப்பந்தம் மட்டுமல்ல. தாய் நாட்டின் விடுதலைக்காகப் போராடி உயிர்த்தியாகம் செய்த ஆயிரக்கணக்கான வீரர்களின் தியாகத்தைக் குறிக்கும் ஓர் அடையாளம். இங்கு வணக்கம் பெறுவது தீப்பந்தமல்ல. மாறாக அது குறித்துக்காட்டும் தியாகம். தியாகத்தை அந்தரத்தில் காண முடியுமா? எனவே மனிதனுக்கு அடையாளம் அவசியம். இந்தியக் கலாச்சாரப்படி திருமணத்தின்போது தாலி கட்டப்படுகிறது. அல்லது மோதிரம் மாற்றப்படுகிறது. தாலியோ அல்லது மோதிரமோ திருமணமல்ல. தாலிதான் திருமணமென்றால் அது மூடநம்பிக்கை. ஆனால் திருமணத்தில் தம்பதிகளிடையே ஓர் உயிருள்ள உறவு அமைந்துள்ளது. ஒரு திருவருட்சாதன பந்தம் ஏற்பட்டுள்ளது என்பதைக் குறிக்க இது ஓர் அடையாளமே. திருமணத்தகுதியை தம்பதியர்களுக்கு வழங்குவது தாலியல்ல. மாறாக அது குறித்துக்காட்டும் திருவருட்சாதன உறவே. திருமண உறவை அந்தரத்தில் காணமுடியுமா? முடியாது. எனவே மனிதனுக்கு அடையாளம் (தாலி) அவசியம்.

காதலர்கள் ரோஜாப் பூவைப் பரிசளித்து தங்கள் காதலை வெளிப்படுத்துகின்றனர். காதல் என்பது ரோஜாப் பூ அல்ல. அது ஓர் உறவு நிலை. இந்த உறவு நிலையை அந்தரத்தில் வெளிப்படுத்த முடியுமா? முடியாது. எனவே உறவு நிலையை வெளிப்படுத்த அடையாளம் தேவைப்பட்டது.

இறந்துபோன நமது பெற்றோர்களின் புகைப்படத்தை நம் வீட்டில் வைத்து விளக்கேற்றி, பூத்தூவி, மாலையிட்டு மரியாதை செய்கின்றோமே. நாம் என்ன உருவ வழிபாடா செய்கின்றோம்? இரவைப் பகலாக்கி, தோலைத் தொட்டிலாக்கி, இரத்தத்தைப் பாலாக்கி, உயிர்கொடுத்து, உடல் கொடுத்து, நித்தம் உழைத்து நம்மை உருவாக்கிய தியாகங்களை நாம் இருக்கும்வரை மறப்பதில்லை என்பதன் வெளிப்பாடே இச்செயல்.

கடவுள் என்பதற்கு அனைத்தையும் கடந்தவர் என்றும் அனைத்திலும் இருப்பவர் என்றும் பொருளுண்டு. கல்லிலும், காற்றிலும், கடலிலும், சிற்பியிலும், சுட்டெரிக்கும் சூரியனிலும் கடவுளின் மகத்துவத் தன்மைகளைக் காண்கின்றோம். கல்லில் கடவுள் உள்ளாரா? ஆம். கல்லா கடவுள்? இல்லை. அப்படியென்றால் அனைத்திலும் இறைவனைக் காண்பதுதான் பக்தி. அப்படிப்பட்ட பக்தியுள்ளவன்தான் பக்தன். காரணம் அண்ட சராசர கோளங்கள் அனைத்தையும் கடந்துள்ள கடவுள் என்ற சக்தி மனிதனோடு தொடர்புகொள்ள உருவம், வடிவம் தேவைப்பட்டது. உருவம் அல்லது வடிவம் என்பது குறைபாடும், நிறைவற்றதும்தான். ஆனால் குறைபாடுள்ள (மனிதன்) வடிவத்தில் தானே யேசு என்ற முழுமை நின்றது. (பிலி 2:6-7).

பழைய ஏற்பாட்டில் இறைவன் மனிதனோடு தொடர்புகொண்ட வடிவங்களில் மிக முக்கியமானது உடன்படிக்கைப் பேழை. (யோசு 7:6, 2 சாமு. 6:13, எண். 20:6) இங்கு உடன்படிக்கைப் பேழையைத் தொடக்கூடாது. தூர நின்றுதான் வணங்க வேண்டும். உடன்படிக்கைப் பேழையா கடவுள்? இல்லை. கடவுளின், யாவே தேவனின் இணையற்ற முழுமையான பிரசன்னத்தின் அடையாளம். இதேபோல் யாத். 3:2:13, 21இல் கடவுளின் பிரசன்னம் மேகத்தூணாகவும், நெருப்புத் தூணாகவும் வெளிப்பட்டது. அவை கடவுளல்ல. கடவுளின் பிரசன்னத்தின் அடையாளமே. கடைசியில் கடவுள் மனித வடிவில் இறைமகன் யேசு ஆண்டவரில் தன்னை வெளிப்படுத்தினார்.

மேலே கூறிய எனது விளக்க ஆதாரங்களைக் கொண்டு பார்க்கையில் ஒருவன் பிடிவாதமாக, உண்மை தெரிந்தும் தூங்குபவன்போல் நடித்து, போலியாக உருவ வழிபாடு அல்லது சுரூப வழிபாடு குறைபாடுள்ளது, தவறு என்று கூறுவானாகில் அவனது போலியான புரிதலின் அடிப்படையில் இறைவன் இயலாமைகள் நிறைந்த மனுவுரு எடுத்ததும் குறைபாடுள்ளதுதான். இதை ஏற்க முடியுமா? ஆக, சுரூபங்கள் வெறும் மரமோ, களி மண்ணோ, கலைப்பொருட்களோ அல்ல. மாறாக தெய்வீகப் பிரசன்னத்தை, இறைபிரசன்னத்தைத் தாங்கி நிற்கும் அடையாளங்கள். சுரூபங்களுக்குச் செலுத்தப்படும் வணக்கம் மண் நிலைகளுக்கல்ல. மாறாக அது குறித்துக் காட்டும் இறைபிரசன்னத்திற்கும், இறையன்பிற்குமே.

கடவுளோடு நேரடியாக மனிதன் தொடர்புகொள்ளவே முடியாதா என்றால் முடியும். காலம் காலமாக கடவுளை நினைத்து தியானித்து வரும் சித்தர்களும், யோகிகளும் உள்ளத்தின் உள் ஒளியில் இறைவனை உணர்ந்தனர். பெந்தகோஸ்தே சபையினர் என்ன சித்தர்களா? யோகிகளா? கத்தோலிக்கர்கள் சாதாரணமான மனிதர்களே. ஆகவே அவர்களுக்கு அடையாளங்கள் அவசியமே. இறைவனோடு தொடர்புகொள்ள ஊடகமாக அன்னை மரியா, புனிதர்களின் சுரூபங்களான அடையாளங்கள் தேவையில்லை என்றால் இறை வெளிப்பாடாக நாம் கொண்டாடும் விவிலியமும், இறைவாக்கும் ஒரு வடிவம்தானே. அதனை ஆராதித்து வணங்குவது உருவ வழிபாடல்லவா? விவிலியத்தில் சிலை வழிபாடு கண்டிக்கப்படுகிறதே என்று போலிகள் உண்மையை மறைக்கக் கூறலாம். ஆனால் சிலை வழிபாடு என்பது எந்தக் கொண்டாட்டத்தில் கண்டிக்கப்படுகிறது என ஆழ்ந்து சிந்திக்க வேண்டும்.

விலங்குகளைத் தெய்வங்களாகத் தொழுவது சிலைவழிபாடு (நெகே. 9:18, எரே44:17, யாத். 32:6) பழைய ஏற்பாட்டில் சிலை வழிபாடு குடிவெறி மற்றும் விபச்சாரத்துடனேயே தொடர்புடையதாகக் காட்டப்பட்டுள்ளது. (எசே16:17,எரே32:2, 2அர16:10,23:13).

ஆக, பழைய ஏற்பாட்டில் சிலைவழிபாடு கண்டிக்கப்படுவது படைத்தவனை மறக்கச் செய்யும், படைப்புகளை வணங்கத் தூண்டும் தவறான தத்துவத்திற்காகத்தான். அதுபோலவே கத்தோலிக்கர்களும் சுரூபங்கள் உணர்த்தும் இறைபிரசன்னம், இறையரசின் மதிப்பீடுகள், இயேசுவுடைய போதனைகளின் வாழ்க்கை வரைமுறைகள் ஆகியவற்றை உதாசீனப்படுத்தி சுரூப அடையாளங்களை அவை தம்மிலே சக்தியுடையவை என்று கட்டியெழுப்புவோமானால் நாமும் தவறு செய்கின்றோம். சந்திரன் (புனிதர்கள் சுரூபங்கள்) சூரியனிலிருந்து ஒளி பெற்று ஒளிர்கின்றது, வெளிச்சம் தருகின்றது. ஆனால், சந்திரன் சூரியனாக முடியாது. அதுபோலவே சுரியனுடைய ஒளியைப் பெற்று சந்திரன் ஒளிர்வதையும், ஒளி கொடுப்பதையும் மறுக்க முடியாது. இந்தச் சூருபங்களான புனித அடையாளங்களுக்குப்பின் மறைந்து காணப்படும் உயர்ந்த இயேசுவின் மதிப்பீடுகளை வணங்கி வாழ்வதே ஆவியிலும் உண்மையிலும் வழிபடுதலாகும். உண்மையை உணர்ந்த டாக்டர் ஜான்சி தவறை உணர்ந்துவிட்டார். உண்மையை உணராமல் பொய்யை நம்பி போலிகள் பின்போகிறவர்களே ஜாக்கிரதை. (கேள்விகள் தொடரும்)

## கொழும்பு புதுச்செட்டித்தெரு
# வியாகுல அன்னையின் புதிய ஆலயத் திறப்பு விழா

மோ. தார்சீசியஸ்



கடந்த மே மாதம் 16ம் நாள் சனிக்கிழமை, புதுச்செட்டித்தெரு வாழ் செட்டி சமூகத்தினருக்கும் வியாகுல அன்னையின் பக்தர்களுக்கும் மறக்கமுடியாத மகிழ்ச்சிகரமான நாளாக அமைந்திருந்தது. காரணம் அன்றைய தினம் வியத்தகு முறையில் நவமாகக் கட்டியெழுப்பப்பட்டுள்ள வியாகுல அன்னையின் ஆலயமானது கொழும்பு மறைமாவட்டப் பேராயர் பேரருட்திரு ஒஸ்வோல்ட் கோமிஸ் ஆண்டகை அவர்களினால் சுத்திகரிப்புத் திருச்சடங்கு நடத்தப்பட்டு நேர்ந்தளிக்கப்பட்டது.

இவ்வாலயமானது மகத்தான பாரம்பரிய வரலாற்றினைக் கொண்டதாகும். கொழும்பு மாநகரின் எல்லைப்புறமாக அன்று கணிக்கப்பட்ட பேலியகொடைப் பகுதியிலே 1800களில் இந்திய வம்சாவழியினராகிய செட்டிச் சமூகத்தினர் சிறு தொகையினராக வாழ்ந்து வந்தனர். அன்று கடவுள் ஆபிரகாமை நோக்கி "உன் வழித்தோன்றல்களைப் பல்கிப்பெருகச் செய்வேன்" என்பதற்கொப்ப இச்செட்டி சமுகத்தினரும் பல்கிப்பெருகினர். தங்களது வளர்ச்சிக்கும், ஆன்மீக நலன்களுக்கும் அப்போதைய வாழ்விடம் உகந்ததாயிராது என்று கண்டு கொட்டாஞ்சேனை வட்டாரத்திலே குடியேறினார்கள்.

கோவா மாநிலத்தின் "ஒரட்டோரியன்" சபையினர் இம்மக்களின் ஆன்மீகத்தாகம் கண்டு பரிபாலித்ததன் விளைவாக 1820ல் இலத்தீன் மொழியிலே "மாட்டர் டொலறோசா" எனப்பெயரிடப்பட்டு தமிழ் மொழியிலே "வியாகுல அன்னை" என்ற பெயரிலான ஆலயம் அமைக்கப்பட்டது.

இவ்வாலயத்தின் 150வது வருட யூபிலி விழா ஞாபகார்த்தமாக அன்னையின் திருச்சுரூபம் வீதிகள் வழியாக ஊர்வலமாக எடுத்துச் செல்லப்பட்டது. படிமுறைப் பெருவளர்ச்சியினையும், பங்கு மக்களின் அயராத உழைப்பினையும் ஊன்றி அவதானித்த முன்னாள் ஓய்வுபெற்ற பேராயர் பேரருட்திரு நிக்கலஸ் மாக்கஸ் பெர்ணான்டோ ஆண்டகை 1990-ம் ஆண்டு ஆடித்திங்கள் 15-ம் நாள் வியாகுல அன்னையின் ஆலயத்தினைக் கொழும்பு மறைமாவட்டத்தின் 105வது பங்கு ஆலயமாகப் பிரகடனப்படுத்தினார்.

இதன் முதலாவது பங்குத்தந்தையாக அருட்திரு றெஜினோல்ட் லூசன் அ.ம.தி. அடிகளார் நியமனம் பெற்றார். இவரைத் தொடர்ந்து 1994 மே முதல் நான்கு மாதங்களுக்கு அருட்திரு லொயிட் சாந்தகுமார் அடிகள் கடமையாற்றினார். இவரைத் தொடர்ந்து 1994 செப்ரெம்பர் முதல் 2001வரை அருட்திரு ஆனந்தன் பெர்ணாண்டோ பிள்ளை அடிகளார் பங்குத்தந்தையானார். பின்னர் 2001 செப்ரெம்பர் முதல் இன்றுவரை மூன்றாவது பங்குத்தந்தையாக அருட்தந்தை நியூமன் முத்துத்தம்பி (அ.ம.தி.) அடிகளார் பொறுப்பேற்றார்.

பங்கு உருவாக்கத்தின் 10வது ஆண்டு நிறைவையொட்டிய கிறிஸ்து பிறப்பின் 2000வது ஆண்டு யூபிலியின் ஞாபகார்த்தமாக நற்கருணை நாதருக்கு சிற்றாலயம் அமைக்கப்பட்டு 15-08-2000-ஆம் நாள் யூபிலி விழாவன்று பேராயர் பேரருட்திரு நிக்கலஸ் மார்க்கஸ் பெர்ணாண்டோ ஆண்டகையினால் திறந்து வைக்கப்பட்டது. இச்செயல்பாடு அருட்திரு ஆனந்தன் பெர்ணாண்டோ பிள்ளை அடிகளாரின் சேவைக்காலத்திலாகும்.

தற்போதைய பங்குத்தந்தை அருட்திரு நியூமன் முத்துத்தம்பி அடிகளாரின் காலம் பொற்காலமாகும். இவர் அமைதியும், அடக்கமும், ஆழ்ந்த எதிர்காலச் சிந்தனையும் கொண்டவர். பங்கின் வளர்ச்சியினை நோக்கினார். பங்கு மக்களின் செயற்பாட்டுக்கு ஆலய நெருக்கடியை ஊன்றி நோக்கினார். வியாகுல அன்னையிடம் வேண்டினார். பங்கின் பாரிய வளர்ச்சிக்கு வித்திட முனைந்தார். அன்னைக்குப் புதிய ஆலயம் எழுப்பவேண்டுமாயின் தற்போதைய நிலப்பரப்பில் இடவசதியின்மையை நோக்கினார்.

அன்னையின் அருளால் ஆலய அயல் காணி இரண்டே கால் கோடி ரூபா பெறுமதியில் எட்டு மாதகாலத்தினுள் கொள்வனவு செய்யப்பட்டது. அடுத்த கட்டச் செயற்பாடு அன்னைக்கு அழகிய ஆலயம் அமைப்பது. இவரது சிந்தனையில் உதித்த ஆலயம் கட்டி முடிப்பதாயின் ஏறத்தாழ ஏழு கோடி ரூபா தேவைப்பட்டது.

துணிந்தார், செபித்தார் அன்னையின் ஆசி வேண்டினார். பங்கு மக்களினதும், அன்னையின் நலன் விரும்பிகளினது ஆதரவுடனும், ஒத்துழைப்புடனும் செயலில் இறங்கினார். இதன்படி அருட்தந்தை நியூமன் அடிகளார் இப்புதிய ஆலயத்தின் கட்டுமானப்பணியினை இறையருளுடன் 2006ல் ஆரம்பித்தார். "இவ்வாலயத்தை இடியுங்கள் மூன்று நாட்களில் கட்டி முடிப்பேன்" என அன்று இயேசு கூறினார். அருட்தந்தை நியூமன் அடிகளார் அன்னையின் அழகுறு ஆலயத்தினை மூன்றே மூன்று ஆண்டுகளில் கட்டிமுடித்துச் சாதனை வீரனாக விளங்கினார்.

இப்புதிய ஆலயமானது புதுச்செட்டித்தெருவிலே, கொழும்பு மாநகரிலே, கொழும்பு மறைமாவட்டத்திலே மிகவும் எடுப்பாய், கம்பீரம்மாய், மிகக்கூடுதலான இடவசதியினைக் கொண்ட ஆலயமாக விளங்குகிறது. இம்மூன்று ஆண்டுகளிலே இறைவனதும் வியாகுல அன்னையினதும் அருள் ஆசிகளின் எடுத்துக் காட்டாக இவ்வாலயம் விளங்குவதுடன் பங்குத்தந்தைக்கும் பங்குமக்களுக்கும் அருளிய கொடையாகவும் இது வானுயர்ந்து காட்சியளிக்கின்றது.

நற்செய்தி அறிவிப்பு ஆண்டுச் சிறப்புக் கட்டுரை

# யேசுவின் பார்வையில் மறைபரப்பு பணி

அருட்பணி. வி. இரபேல்

## முன்னுரை

பிற இனத்தாரிடையே நற்செய்தி அறிவித்தல் குறித்த இயேசுவின் பார்வை அவர் காலத்து யூதர்களின் பார்வையினின்று வேறுபட்டதன்று என்பது ஏ. ஹார்னாக் (A. Harnack) எனும் விவிலிய வல்லுனரின் கருத்தாகும். பிற இனத்தாரிடையே மறைபரப்புப் பணி என்பதை இயேசு எண்ணிப்பார்த்தது இல்லை என்று இவர் போன்றோர் கூறுவர். மேற்படிக் கருத்துக்கு ஆதாரமாகக் கீழ்க்கண்ட இயேசுவின் கூற்றுக்களை மேற்கோள் காட்டுவார்.

"இஸ்ராயேல் குலத்தாருள் காணாமற்போன ஆடுகளாய் இருப்போரிடமே நான் அனுப்பப்பட்டேன்" (மத். 15:24) "பிள்ளை - களுக்குரிய உணவை எடுத்து நாய்க் குட்டிகளுக்குப் போடுவது முறையல்ல." (மத். 15:26: மாற். 7: 27.) "பிற இனத்தாரின் எப்பகுதிக்கும் செல்ல வேண்டாம். சமாரியாவின் நகர் எதிலும் நுழைய வேண்டாம்". (மத் 10:5) மேற்கண்ட கூற்றுக்களின் அடிப்படையில் யேசுவுக்கு உலகளாவிய திட்டம் இருந்ததில்லை என ஹார்னாக் போன்றோர் வாதிடுவர்.

ஆயினும் யேசுவின் நற்செய்திக்கு உலகளாவிய தாக்கம் உளது. வரவிருக்கும் இறையாட்சி, மக்களினத்தார் அனைவருக்கும் தீர்ப்பு, கடவுளின் தந்தைத்தன்மை, மனமாற்றம், தாழ்ச்சி, தூய்மை, அன்பு ஆகிய இயேசுவின் போதனைகள் யூத விழுமியங்கள் சார்ந்தவை அல்ல. இத்தகு பண்புகள் அனைத்து மக்களையும் உள்ளடக்கிய ஒரு மதத்தின் அடிப்படைக் கூறுகளாக உள்ளன.

மத். 28:18-20ல் "நீங்கள் போய் எல்லா மக்களினத்தாரையும் சீடராக்குங்கள்" எனத் தம் சீடருக்குக் கட்டளை தருகிறார் இயேசு. இக்கட்டளை யேசுவின் வாயினின்று நேரடியாக வந்ததன்று. அது திருச்சபையின் பின்னய உருவாக்கம் எனப் பலர் கூறிடினும் உலகளாவிய கிறிஸ்தவம் குறித்த பார்வை அதில் பொதிந்துள்ளது.

கொடிய குத்தகைக்காரர்களை ஒழித்துவிட்டு திராட்சைத் தோட்டத்தை வேறு ஆட்களிடம் ஒப்படைத்தல் குறித்த உவமை (மாற் 12:1-9: மத் 24:33-40), திருமண விருந்துக்கு அழைக்கப் பெற்றவர்கள் தகுதியற்றுப் போனதால் நல்லோர் தீயோர் யாவரையும் கூட்டி வருதல் குறித்த உவமை (மத் 22:1-14, லூக்14:16-24), எல்லா மக்களினத்தாரும் மானிட மகன் முன்னிலையில் ஒன்றுகூட்டப்படுவர் எனும் முன்னறிவிப்பு (மத் 25:32), "கிழக்கிலும் மேற்கிலுமிருந்து பலர் வந்து ஆபிரகாம், ஈசாக்கு, யாக்கோபு ஆகியோருடன் விண்ணரசின் பந்தியில் அமர்வர்" (லூக். 13:29) எனும் கூற்று ஆகியவை இத்தகு பார்வையைப் பறைசாற்றுகின்றன.

## மறைபரப்புப் பணியின் பல்வேறு குணநலன்கள்

மைனர்ஸ் (A. Meinerz) என்பவரின் பார்வையில் இயேசுவின் முக்கிய போதனைகளில் எல்லாம் மறைபரப்புப் பணியின் உலகளாவிய தன்மை புலப்படுகின்றது.

இயேசுவின் சிந்தனைப்படி இறையாட்சி என்பது இஸ்ராயேலருக்கு மட்டும் உரியதன்று. இறையாட்சி எல்லாருக்கும் திறந்து வைக்கப்பட்டுள்ளது. ஏனெனில் எல்லாருமே தந்தையின் மக்கள். இஸ்ராயேலர் மட்டுமல்லாது ஏராளமானோர் "தந்தையிடமிருந்து ஆசி பெற்றவர்கள்". உலகம் தோன்றியது முதல் அவர்களுக்காக ஏற்பாடு செய்யப்பட்டிருக்கும் ஆட்சியை உரிமைப்பேறாகப் பெற்றுக் - கொள்வர்" (மத் 25:35).

இயேசு தம்மை மானிட மகன் என அழைப்பதில் விருப்புக்கொண்டிருந்தார். இது தானியேல் கண்ட காட்சியில் வரும் 'மானிட மகனை' நினைவூட்டுவதாகும். (இரவில் நான் கண்ட காட்சியாவது: வானத்தின் மேகங்களின் மீது மானிட மகனைப் போன்ற ஒருவர் தோன்றினார். (தானி. 7:13) ஆட்சியுரிமையும் மாட்சியும் கொடுக்கப்பட்ட அவரை எல்லா இனத்தாரும் நாட்டினரும் மொழியினரும் வழிபட வேண்டும் (தானி 7:14) எனக் கூறப்பட்டுள்ளது. இயேசு தம்மை 'ஆண்டவரின் ஊழியன்' என அழைத்துக்கொண்டார். அது எசாயா நூலில் சொல்லப்பட்டுள்ள ஊழியனை நினை - வூட்டுவதாகும். "நீ என் ஊழியனாக இருப்பது எளிதன்றோ? உலகம் முழுவதும் என் மீட்பை அடைவதற்கு நான் உன்னைப் பிற இனத்தாருக்கு ஒளியாகவும் ஏற்படுத்தினேன்" (எசாயா 49:6) இவ்வாறு உலகளாவிய மறைபரப்புக் குறித்த பார்வை பழைய ஏற்பாட்டிலேயே பரவியிருந்தது. இயேசு அத்தகு பார்வையை உள்வாங்கி அதனை நிறைவு செய்தார்.

"ஒருவரையாவது உங்கள் சமயத்தில் சேர்ப்பதற்கு நாடு என்றும் கடல் என்றும் பாராது சுற்றி அலைகின்றீர்கள் (மத் 23:15) என்று இயேசு கூறுவதிலிருந்து பரிசேய யூதமத பிற இனத்தாரை மனந்திருப்புதல் குறித்த பார்வை கொண்டிருக் - கிறது என்பது புலனாகிறது. ஆயினும் பொதுவாக, பிற இனத்தார் மட்டில் வெறுப்பே யூதரிடம் நிலவியிருந்தது. இயேசுவிடம் அத்தகு வெறுப்போ குறுகிய மனப்பான்மையோ இருந்ததில்லை. உலகளாவிய தன்மை இயேசுவின் சிந்தனையின் அடிப்படைத் தன்மையாகும். அந்த வகையில் இயேசுவின் பார்வையில் மறைபரப்புப் பணி உலகளாவிய தன்மை கொண்டது என்பது மைனர்ஸ் போன்றோரின் கருத்தாகும்.

பெங்ட் சுண்ட்களர் (Bengt Sundkler) எனும் விவிலிய வல்லுனர் மேற்கண்ட இரு கருத்துக்களுக்கும் இடைப்பட்டதொரு நிலைப்பாட்டைக் கொண்டுள்ளார். மறைபரப்பு என்பதைப் பொருத்தவரை இயேசுவின் நிலைப்பாட்டை யூதருக்கு மட்டும் உரியது என்றோ எல்லா இனத்தாருக்குமானது என்றோ பிரித்துப் பார்ப்பது சரியானது அன்று என்பது அவரது வாதம். திப 1:4இல் "நீங்கள் எருசலேமைவிட்டு நீங்க வேண்டாம்" என்று தம் சீடருக்குக் கட்டளையிடுகின்றார் இயேசு. அது பெந்தக்கோஸ்து விழாவுக்கு முந்தைய பத்து நாள்களுக்கு மட்டுமே பொருந்தும் எனக் கூற இயலாது. மறைபரப்புப் பணி எருசலேமில் தொடங்க வேண்டும்: எருசலேமிலிருந்தே அது பரவ வேண்டும். இறுதி நாள்வரை அது எருசலேமை மையமாக வைத்தே செயல்பட வேண்டும். மறைபரப்புப்பணியை பொருத்தவரை உலகளாவிய பார்வை கொண்டிருந்த எருசலேமை மையமாக வைத்தே மறைபரப்பினர் (காண்.- உரோ 15:19) எருசலேமை மையமாக வைத்து உலகெங்கும் மறை பரப்பப்பட வேண்டும் எனும் திட்டம் திப 1:8-ல் தெளிவாகச் சொல்லப் பட்டுள்ளது. "தூய ஆவி உங்களிடம் வரும்போது நீங்கள் கடவுளது வல்லமையைப் பெற்று எருசலேமிலும் யூதேயா, சமாரியா, முழுவதிலும் உலகின் கடையெல்லை வரைக்கும் எனக்குச் சாட்சிகளாய் இருப்பீர்கள்". இயேசுவின் பணி உலகம் முழுவதையும் மாற்றியமைப்பதாகும். ஆனால் இறைவனின் திட்டத்தில் எருசலேமே உலகின் மையமாகும். எனவே இயேசுவின் பார்வையில் மறைபரப்புப்பணி எருசலேமை மையமாக வைத்தே செயல்பட வேண்டும்.

இயேசு ஓர் யூதர்: எனவே அவர் யூத வரையறைகளைக் கொண்டிருந்தார். .மீட்புத் திட்டத்தின் இதயமாகவும் அதன் நோக்கமாகவும் இஸ்ராயேலின் விடுதலை இருந்தது. ஆனால் இது பிற இனத்தாருக்கான மறைபரப்பைத் தவிர்த்தது அன்று. ஆயினும் பிற இனத்தாருக்கான மறைபரப்புப்பணி இஸ்ராயேலிடமிருந்து தொடங்கினாலே அது சாத்தியமாகும் என லூசியன் லெக்ராண்ட் (Lucien Legrand) எனும் விவிலிய வல்லுனர் கூறுகின்றார். "யூதரிடமிருந்தே மீட்பு வருகிறது" என யோவான் நற்செய்தியும் (4:22) கூறுகிறது.

ஜோவாக்கின் ஜெரோமியாஸ் (Joachim Jaramias) எனும் விவிலிய வல்லுனர் இறுதிக்கால இயலுடன் இணைந்து இயேசுவின் மறைபரப்புப் பணியைப் பார்க்கிறார். இறுதிநாளில் பிற இனத்தார் பழிவாங்கப்படுவர் எனும் யூதரின் எதிர்பார்ப்பை இயேசு சிதறடித்தார்.

பிற இனத்தாரும் மீட்பில் பங்குபெறுவர் என இயேசு வாக்களித்தார் (மத். 11:20-24, மத். 10:5, மத் 12:41:42, லூக். 11:31-32). இயேசு வெற்றி ஆர்ப்பரிப்போடு எருசலேமில் நுழைந்தார் (மாற் 11:1-10, மத். 21:1-11, லூக் 19:28-40, யோவா. 12:12-19). இது வேற்றினத்தாருக்கு அமைதியை அறிவிக்க கழுதையின்மேல் ஏறிவரும் அரசர் குறித்து செக். 9:9-10இல் முன்னறிவிக்கப்பட்ட பகுதியின் நிறைவேற்றமாகும்.



மறைபரப்பின் இறுதிக்காலத் தன்மை மத்தேயு நற்செய்தியில் இயேசு கொடுக்கும் கட்டளையில் விளங்குகிறது. (மத். 28:18-20) இக்கட்டளை ஆண்டவர் இயேசுவின் இறுதிக்கால அரியணையேற்றம் எனும் நிகழ்வில் வருகிறது. ஈ. லோமெயர் (E. Lohmeyer) எனும் விவிலிய வல்லுனர் இப்படிக் கூறுகிறார்: ஓர் அரசர் தம் பணியாளர்களை வாழ்த்தாமல் நேரடியாகத் தம் கட்டளைகளைக் கொடுப்பதுபோல் இயேசு தம் சீடரிடம் பேசுகிறார். "விண்ணுலகிலும், மண்ணுலகிலும் அனைத்து அதிகாரமும் எனக்கு அருளப்பட்டிருக்கிறது" (மத் 28:18) என இயேசு கூறுவது தானி. 7:14இல் "ஆட்சியுரிமையும் மாட்சியும் அரசும் அவருக்குக் கொடுக்கப்பட்டன" என்பதன் நிறைவேற்றமாகும். "எல்லா இனத்தாரும் நாட்டினரும் மொழியினரும் அவரை வழிபட வேண்டும்." (தானி. 7:14) என்பதன் நிறைவேற்றமாக இயேசு, "எனவே நீங்கள் போய் எல்லா மக்களினத்தாரையும் சீடராக்குங்கள்." (மத். 28:19) என்கிறார். இங்கு 'எனவே' எனத் தொடங்குவது திருச்சபையின் மறைபரப்புப்பணி ஆண்டவரின் இறுதிக்கால அரியணையேற்றத்தின் பயன்பாடு என்பதைச் சுட்டிக்காட்டுகிறது.

குள்மேன் (O. Cullman) என்பவரது கருத்துப்படி நற்செய்தியை அறிவிப்பது என்பது உலகின் முடிவை அறிவிப்பதன் அடையாளமாகும்.

திருச்சபையின் மறைபரப்புப்பணி இயேசுவின் உயிர்ப்பில் இருந்து அவரின் இரண்டாம் வருகைக்குக் கடந்து செல்லும் நிகழ்வாகும் என அவர் கூறுகிறார். திப.1:6-8 படி சீடர்கள் இரண்டாம் வருகைக்கு தயார்செய்து சான்றுபகர வேண்டும். அந்த வகையில் நற்செய்திப் பணி என்பது இயேசுவின் இரண்டாம் வருகைக்குச் சான்று பகர்தலும் அந்த இரண்டாம் வருகைக்கு மக்களைத் தயார் செய்தலுமாகும்.

மறைபரப்பாளர் என்பவர் இயேசுவின் இறப்பு உயிர்ப்பினால் கொண்டுவரப்பட்ட உலகளாவிய மாற்றத்திற்குச் சான்று பகர்வர். அவரின் செய்தியும் செயல்பாடுகளும் உலக முடிவின் அடையாளங் -கள். மறைபரப்புப்பணி புதிய படைப்பை முழுமைக்குக் கொண்டுவருகின்றது.

மறைபரப்புப்பணியின் இறுதிக்காலத் தன்மை இயேசுவின் பணியின் வரையறுக்கப்பட்ட நிலைக்கு விளக்கம் சொல்கிறது. ஆண்டவரின் இறப்பு உயிர்ப்பு மூலம் புதிய படைப்புத் தொடங்கப்படாத நிலையில் இயேசு பிற இனத்தாரை அணுகும் வாய்ப்பு உருவாகவில்லை (காண் யோவா 12:2-23). எல்லா நாடுகளையும் கூட்டிச் சேர்த்தல் இறுதிக்காலம் சார்ந்தது. அவர் மாட்சியடைந்த பின்னரே பிற இனத்தாருக்கு வெளிப்பாடாக விளங்கும் ஒளி கிறிஸ்துவின் திருமுகத்தில் வீசும். இறுதி நாள்களில் பிற இனத்தார் அழைக்கப்படுவர் என இயேசு முன்னறிவித் - திருந்தார். பெந்தக்கோஸ்து விழாவுக்குப்பின் தொடக்கத் திருச்சபை அந்த இறுதிநாள்கள் வந்துவிட்டதாக எண்ணியது. எனவே அது உடனடியாகப் பிற இனத்தாருக்குப் போதிக்கத் தொடங்கியது.

## அரும் அடையாளங்கள், உவமைகளில் உலகளாவிய பார்வை

ஆயினும் இயேசு தன் வாழ்நாளில் பிற இனத்தாரைப் பொறுத்தவரை வெறுமனே செயலற்ற நிலையைக் கொண்டிருந்தார் என்று கூறுதல் முறையன்று. மத் 8:11-12 பகுதி இதற்கொரு விளக்கம் தருகிறது "கிழக்கிலும் மேற்கிலுமிருந்து பலர் வந்து, ஆபிரகாம், ஈசாக்கு, யாக்கோபு ஆகியோருடன் விண்ணரசின் பந்தியில் அமர்வர். அரசுக்கு உரியவர்களோ புறம்பாக உள்ள இருளில் தள்ளப்படுவார்கள்". இப்பகுதி நூற்றுவர் தலைவரின் பையன் குணமடைதல் எனும் அரும் அடையாள நிகழ்வில் (மத் 8:5-13) வருகிறது. மத்தேயு நற்செய்தியில் அரும் அடையாளமும் அதில் வருகிற கூற்றும் ஒரே சிந்தனையைக் கொண்டவை. அவை இயேசுவின் மனப்பான்மையைத் தாங்கி நிற்பவை.

இயேசுவைப் பொறுத்தவரை பிற இனத்தாருக்கு அவர் செய்த புதுமைகள் அவர்களின் இறுதி மீட்பை முன்கூட்டியே கொண்டுவருபவை. இயேசுவின் புதுமைகள் வெறுமனே அவரின் இரக்கம் சார்ந்தவையல்ல. அவை இயேசுவின் தெய்வீக வல்லமையைப் பறைசாற்றுபவை மட்டுமல்ல. அவை கடவுளின் மீட்புத்திட்டத்தின் அங்கமாக உள்ளன. அவை மீட்புச் செயலின் அடையாளங்கள். அவை இயேசுவின் மெசியாவுக்குரிய பணி சார்ந்தவையாகவும் உலகில் இறையாட்சியை நிறுவ அவர் மேற்கொண்ட முயற்சிகளின் வெற்றி சார்ந்தவையாகவும் உள்ளன. பிற இனத்தார் நடுவே இயேசு செய்த புதுமைகளை இக்கண்ணோட்டத்தில் பார்த்தால்தான் அவற்றின் முழுப்பொருள் விளங்கும். பிற இனத்தார் நடுவே செய்யப்பட்ட ஒரு புதுமை பிற இனத்தாருக்கான ஒரு மறையுரையின் சாரத்தைக் கொண்டுள்ளது.

இத்தகு அரும் அடையாளங்கள் இரண்டு மட்டுமே நற்செய்தி நூல்களில் காணப்படுகின்றன. முக்கியமாகக் கனானியப் பெண்ணின் விண்ணப்பத்தைக் கேட்ட நிகழ்வில் (மத். 15:21-28, மாற். 7:24-30) இயேசு தயக்கத்துடன் செயல்பட்டது சொல்லப் பட்டுள்ளது. (மத். 15:24-26, மாற். 7:26) பிற இனத்தாரின் நேரம் தனது பணிவாழ்வின் காலத்தில் வரவில்லை என இயேசு எண்ணியிருக்க வேண்டும். ஆயினும் இறுதியில் அவர் புதுமை செய்தது பிற இனத்தாருக்கான பணியைத் தொடங்கிவிட்டதற்கான அடையாளம். அவர் செய்த மற்றப் புதுமைகளில் அடங்கியிருந்த அதே இறையியல் அமைப்பு பிற இனத்தாருக்கு அவர் புதுமைகளிலும் இருந்தது. புதிய உலகின் வரவையும் அதை ஏற்றுக்கொள்ள நம்பிக்கை அவசியம் என்பதையும் பிற இனத்தாருக்கான புதுமைகள் பறைசாற்றுகின்றன. பிற இனத்து உலகம் குறித்து இயேசு கொண்டிருந்த பார்வை இஸ்ராயேல் குறித்து அவர் கொண்டிருந்த பார்வையினின்று வேறுபட்டதன்று. தன்னுடைய நற்செய்தி எல்லா நாடுகளுக்கும் சென்றடைய வேண்டும் என்பதை இயேசு உணர்ந்திருந்தார். பிற இனத்தாருக்கு மீட்பு புலர்ந்துவிட்டது. என்பதைச் சொல் மூலமாக அல்லாமல் செயல் மூலமாக இயேசு அறிவித்தார். கனானியப் பெண்ணும் உரோமை நூற்றுவத் தலைவனும் மீட்பைப் பொறுத்தவரை பிற இனத்து முதற்கனிகள். அவர்கள் வெளிப்படுத்திய நம்பிக்கை (மத். 8:10-2 15:28) இறையியல் ஆழம் மிகுந்தது. யூதருக்கும் சரி பிற இனத்தாருக்கும் சரி இறையாட்சி வந்துவிட்டது. ஆனால் அது வாக்குறுதியின் அடிப்படையில் அமைந்துள்ளது. இரு சாராரிடமும் இறுதிக்கால மாற்றம் ஏற்கெனவே தொடங்கி விட்டது. ஆயினும் அது நிறைவேற்றப்படவுள்ளது.

"அறுவடை மிகுதி: வேலையாள்களோ குறைவு. ஆகையால் அறுவடைக்குத் தேவையான வேலையாள்களைத் தமது அறுவடைக்கு அனுப்பும்படி அறுவடையின் உரிமையாளரிடம் மன்றாடுங்கள்" என்று இயேசு கூறுகிறார். (மத். 9:37) "வயல் இவ்வுலகம்..... அறுவடை உலகின் முடிவு" எனக் களைகள் பற்றிய உவமையில் இயேசு பேசுகிறார் (மத் 13:38-39). அறுவடை உலக முடிவுக்கு அடையாளம் என்பது இறைவாக்கினர் நூல்களில் காணப்படும் கருத்தாகும். எரே. 51:2,33 மற்றும் எசா. 18:5, 27:12 பகுதிகள் இக்கருத்தைக் கூறுகின்றன. முக்கியமாக யோவேல் நூல் இறுதிக்கால அறுவடை குறித்துப் பேசுகிறது. "வேற்றினத்தார் அனைவரும் கிளர்ந்தெழுந்து யோசபாத்து பள்ளத்தாக்கிற்கு வந்து சேரட்டும். ஏனெனில் சுற்றுப்புறத்து வேற்றினத்தார் அனைவருக்கும் தீர்ப்பு வழங்க நான் அங்கே அமர்ந்திருப்பேன். அரிவாளை எடுத்து அறுங்கள், பயிர் முற்றி விட்டது". (யோவே 4:12-13) மேற்கண்ட பகுதிகளில் அறுவடை என்பது வேற்றினத்தாரின் அழிவைச் சுட்டுகிறது.

அறுவடை பற்றிய இக்கருத்துக்கள் புதிய ஏற்பாட்டிலும் தொடர்கிறது. திவெ 14:15-16 இல் அறுவடை நீதித்தீர்ப்பைச் சுட்டுகிறது. அங்கே அறுவடை பிற இனத்தாரின் அழிவைச் சுட்டுகிறது. திருமுழுக்கு யோவானும் தீர்ப்பைச் சுட்டும் அறுவடை குறித்துப் பேசுகிறார் (மத். 3:12 லூக். 3:17). ஆனால் மத். 9:37இல் அறுவடை என்பது நல்லவர்களைக் குறித்தே பேசப்படுகிறது. இங்கு இறுதிக்கால பழிவாங்கல் இல்லை. ஆனால் இது இறுதிக்கால மற்றும் உலகளாவிய மறைபரப்பு எனும் கருத்தைக் கொண்டுள்ளது.

(தொடர்ச்சி 18ம் பக்கம்)

# இறைவாக்கைப் படிப்போம் நிறைவாழ்வைப் பகிர்வோம்

அருட்பணி. ஏ. ஜோமிக்ஸ்



# அருள்வாக்கு வாசிப்பு படி நிலைகள்



## முன்னுரை

யூத ரபிகளும், திருச்சபைத் தந்தையர்களும், துறவுசபை நிறுவுனர்களும், புனிதர்கள் பலரும் பயன்படுத்திவந்த இந்தப் பழமையான, வளமான *அருள் வாக்கு வாசிப்பு முறை* கி. பி. 16ஆம் நூற்றாண்டில் வழக்கொழிந்து போனது. திருச்சபையின் களஞ்சியத்தில் புதையலாய் மறைந்துபோன இந்த அருள்வாக்கு வாசிப்பு முறையை இரண்டாம் வத்திக்கான் சங்கம் மீண்டும் கண்டுபிடித்து நாம் பயன்படுத்திப் பலன்பெறுமாறு பரிந்துரைத்துள்ளது. திருத்தந்தை 16ஆம் பெனடிக்ட்டும் இம்முறையை நாம் ஒவ்வொருவரும் கற்றுக்கொள்ள வேண்டும் என்றும் திருவிவிலியத்தை இம்முறையை பயன்படுத்தி வாசித்து செபித்து அருள்வாழ்வில் வளம்பெற வேண்டும் என்றும் கேட்டுக்கொண்டுள்ளார். இக்கட்டுரையில் அருள்வாக்கு வாசிப்பு முறையில் உள்ள படிநிலைகள் பற்றிப் பார்ப்போம்.

## அருள்வாக்கு வாசிப்பு முறை படிநிலைகள்

திருச்சபைத் தந்தையர்களின் எழுத்துக்களிலும் துறவுசபை நிறுவுனர்களின் குறிப்புகளிலும் அதாவது பாரம்பரியமாக இந்த அருள்வாக்கு வாசிப்பு முறையில் நான்கு படிநிலைகள் இருப்பதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

உரோமையில் நடைபெற்ற விவிலிய மாநாட்டில் நிறைவுரை வழங்கிய திருத்தந்தை 16ஆம் பெனடிக்ட் இந்தப் படிநிலைகளில் காலத்திற்கு ஏற்ற மாற்றங்கள் செய்து எளிமைப்படுத்தி பயன்படுத்த வேண்டும் என்னும் அழைப்பை விடுத்தார்.

இம்முறையில் சொற்பொழிவுகள் நிகழ்த்தியும் நூல்கள் எழுதியும் இதைப் பிரபல்யப்படுத்திக்கொண்டிருக்கும் கர்தினால் மரிய மார்த்தீனி அவர்கள் புனித இஞ்ஞாசியாரின் ஆன்மீகப் பயிற்சிகள் நூலின் அடிப்படையில் மேலும் நான்கு படிநிலைகளை இணைத்து இம்முறையை வளப்படுத்தி உள்ளார்.

இக்கட்டுரையில் இடம்பெறும் முதல் நான்கு படிநிலைகள் பாரம்பரியமாய் பயன்படுத்தப்படுபவை. சாமானியருக்கு இவை போதுமானவை என்றுகூடச் சொல்லலாம். ஆயினும் இறைவார்த்தையில் ஆழம் காண விரும்புகிறவர்கள் கர்தினால் மரிய மார்த்தீனி பரிந்துரைக்கும் அடுத்த நான்கு படிநிலைகளிலும் இறங்கித் தியானித்தால் மிகுந்த பயனடைவர்.

## 1. வாசித்தல் (Lectio)

வாசித்தல் என்பது திருவிவிலியத்தின் ஒரு குறிப்பிட்ட இறைவார்த்தைப் பகுதியை வாசிப்பவர் அதனுடன் இரண்டறக் கலக்கும் நிலை ஆகும். வாசிக்கும்பொழுது வார்த்தைகளைத் தெளிவாக உச்சரித்து ஒவ்வொரு வார்த்தையிலும் கவனம் செலுத்தி வாசிக்க வேண்டும். மேலெழுந்தவாரியாக வாசிப்பதால் பயன் இராது. நாம் வாசிக்கும்போது திருவிவிலியத்தோடு தொடர்புகொள்கிறோம். அது வாழும் வார்த்தையோடு நாம் உறவுகொள்ள நம்மை இட்டுச்செல்கிறது. இறைவார்த்தையில் கடவுள் நம்முடன் பேசுவதால் நாம் கவனம், வணக்கம் செலுத்தும் மனநிலை, அர்ப்பணம், மௌனம், கேட்கும் ஆர்வம் ஆகியவற்றைக் கொண்டு வாசித்தல் வேண்டும்.

வாசிப்பது என்பது விவிலியத்தின் ஒரு குறிப்பிட்ட பகுதியை அப்பகுதியில் உள்ள முக்கியக் கருத்தை மையப்படுத்தி மீண்டும் மீண்டும் வாசிப்பதாகும். கர்தினால் மரிய மார்த்தீனி நாம் இவ்வாறு வாசிக்கும்போது கையில் ஒரு பேனாவை வைத்து நம் கவனத்தை ஈர்க்கும் விவிலிய வார்த்தைகளை அடிக்கோடிட்டோ, அடையாளப்படுத்தியோ வாசிக்கப் பரிந்துரைக்கின்றார்.

நாம் வாசிக்கும் நிகழ்ச்சிப் பகுதியிலுள்ள முக்கிய வார்த்தைகள், முக்கிய வசனங்கள், அந்நிகழ்வில் வெளிப்படும் உணர்ச்சிப் பெருக்குகள், முக்கிய கதாப்பாத்திரங்கள், அவற்றின் முக்கிய செயற்பாடுகள் இவற்றைக் கோடிட்டும் குறியீடுகளால் அடையாளப்படுத்தியும் வண்ண மைகளால் வகைப்படுத்தியும் கவனத்தை ஈர்க்கின்ற விதத்தில் செய்தல் வேண்டும். மிகவும் குறிப்பாக வினைச்சொற்கள், இடங்கள் ஆகியவற்றில் தனிக்கவனம் செலுத்துதல் வேண்டும். புரியாத வார்த்தைகள் இருந்தால் அவற்றிலும் கவனம் செலுத்துதல் வேண்டும்.

நமக்கு ஏற்கனவே அறிமுகமான விவிலியப்பகுதிகளை இந்த வாசிப்பு முறையில் நாம் பார்க்கும்போது அது நம் கவனத்தை மிக அதிகமாகவே தூண்டுகிறது. அது நம் நுண்ணறிவு, கற்பனைத்திறன், உணர்ச்சிகள் ஆகிய அனைத்தையும் ஈடுபடச் செய்கிறது. ஆகவே நமக்கு நன்கு தெரிந்த விவிலியப்பகுதிகள் இப்போது புதிதாக மனக்கண்முன் தோன்றுகின்றன. இந்த முறையில் வாசிக்கும்போது பல ஆண்டுகளாக நமக்குத் தெரிந்த நற்செய்திக் கதைப் பகுதிகள் புதிய முகங்களோடும் புதிய தரிசனங்களோடும் புதிய காட்சிகளோடும் புதிய சிந்தனைகளோடும் புதிய ஆற்றலோடும் வெளிப்படுவதை நாம் காணமுடியும்.

நாம் தூய ஆவிக்குத் திறந்த மனத்தோடு இருப்போம் என்றால் இந்த முதலாவதான படிநிலை சிறிது நேரம் மட்டுமே எடுத்துக்கொள்ளும். மேலும் அந்தப் பகுதியை அதற்கு முன் உள்ள பந்திகளோடும் இணைத்து வாசித்தலும் வேண்டும். மேலும் அந்தப் பகுதியிலுள்ள முக்கிய வார்த்தைகள்/ வசனங்களை அந்த நூலிலும் முழு விவிலியத்திலும் ஆழ்ந்து அறிந்துகொள்ளுதலும் வேண்டும்.

இந்த முறையில் நாம் விவிலியத்தில் ஒரு நிகழ்ச்சிப் பகுதியை வாசிக்கும்பொழுது அது நமது நினைவுகூரும் பண்பையும் நுண்ணறிவுத் தன்மையையும் திருச்சித்தத்தையும் ஊடுருவி நம் மூளையின் சிந்திக்கும் பயிற்சிக்கு விருந்தாக அமைகிறது. இம்மூன்று நிலைகளைத் தாண்டியும் புதிய எண்ணங்கள் தோன்றுகின்றன. இம்முறையில் விவிலியத்தை வாசித்தால் ஒவ்வொரு பொழுதிலும் புதுப்பொலிவு பிறக்கிறது. மீண்டும் மீண்டும் வாசிக்கும் இம்முறையில் இதுவரையில் நாம் கண்டுபிடித்திராத புதிய கருத்துக்களைக் கண்டுபிடிக்க முடிகிறது. மேலும் விவிலியம் ஒருநாளும், ஒருபொழுதும் பழைய புத்தகமாய் ஆகிவிடாது. மாறாக அது புத்தம் புதிதாய் இருப்பதைக் காணமுடிகிறது. இந்த வாசிப்பு முறைக்கு இடைவிடாது முயற்சியும் கட்டுப்பாடும் ஆர்வமும் தேவை. வாசிக்கும் பொதுவிவிலிய வசனங்களை நம் கற்பனைக்கு ஏற்பக் கையாளக்கூடாது. நம் தேவைகளுக்கேற்ப வார்த்தைகளையும் அர்த்தங்களையும் மாற்றக்கூடாது. இங்கு விவிலியப் பொருள்கோள்முறை பயன்படுத்தப்பட வேண்டும். இந்த விவிலியப் பொருள்கோள் முறை அருள்வாக்கு வாசிப்பு முறையை சரிவரச் செய்ய நமக்கு மிகவே உதவும். வாசிக்கும்போது கீழ்வரும் மூன்று நிலைகளைக் கவனத்தில் கொள்ளுதல் நல்லது.

**1. இலக்கியநிலை** - இது வாசகப்பகுதிகளை மிக நுணுக்கமாகக் காண உதவும் நிலை ஆகும். எ.கா: நம் பொதுமொழி பெயர்ப்பில் விவிலியப் பகுதிகள் சிறு சிறு பந்திகளாகப் பிரிக்கப்பட்டுள்ளன. மேலும் சிறு தலைப்புக்கள் கொடுக்கப்பட்டுள்ளன. இவற்றைப் பயன்படுத்திக்கொண்டு அதன் அமைப்பைச் சிறு சிறு கேள்விகள் மூலம் ஆழமாய் அறிய முயலவேண்டும். எ.கா: யார், என்ன, ஏன், எங்கு, எப்படி, எப்பொழுது, எதன் மூலம் என்னும் கேள்விகளைக் கேட்க வேண்டும். அப்பகுதியில் வரும் கதாப்பாத்திரங்களுக்கு இடையே நிலவும் உறவு, நேர்மை, காலம், மாற்றங்கள் இவையும் கவனத்தில் கொள்ளப்படல் வேண்டும். இக்கேள்விகளுக்குப் பதில்கள் நன்கு தெரிய விளக்க உரைகளையும் பயன்படுத்தலாம்.

**2. வரலாற்று நிலை** – எத்தகைய வரலாற்றுச் சூழ்நிலைப் பின்னணியில் இந்த விவிலியப்பகுதி உருவானது என்பதை அறிவதே இதன் நோக்கமாகும். ஆகவே இப்பகுதி எழுதப்பட்ட காலத்தில் உள்ள சமூக, அரசியல், பொருளாதார, பண்பாட்டுச் சூழ்நிலைகளை அறிந்துகொள்ள முயற்சித்தல் வேண்டும். இப்பகுதி எழுதப்பட்டதன் நோக்கம், அதில் காணப்படும் முரண்பாடுகள் போன்றவற்றையும் துணை நூல்களின் உதவியோடு அறிதல் வேண்டும்.

**3. இறையியல் நிலை** - இந்தப் பகுதி எழுதப்பட்ட சூழ்நிலையில் அது மக்களுக்குச் சொல்ல விரும்பிய செய்தி என்ன? என்பதை அறிவது இந்நிலை ஆகும். விவிலியத்தில் இது போன்ற சூழலில் எழுதப்பட்ட வேறு பகுதிகள் உள்ளனவா? என்று ஒப்பிட்டுப் படித்தல் பயன்தரும்.

மேலும் இறைவெளிப்பாடு எண் 12 கூறுவதுபோல வாசிக்கப்படும் பகுதியை திருச்சபையின் மரபிலும் திருவிவிலியத்தில் வெளிப்படுத்தப்பட்டுள்ள மீட்பின் திட்டத்திலும் இணைத்துப் பொருள் காண வேண்டும். இது மிகவும் முக்கியமான ஒரு பண்பாகும். இந்நிலையைக் கடந்து வெளியே வந்து வாசிக்கும்பொழுது அது மீட்பின் வரலாற்றிலிருந்து தடம் பெயர்ந்த நிகழ்வாக அமைந்துவிடுகிறது. திருச்சபையின் வாழ்வில் விவிலியத்தை மையப்படுத்தாது தனியாக வாசிக்கும் இந்தத் தான்தோன்றித் தனமான வாசிப்புத்தான் பிரிவினைச் சபைகளையும், பிளவுகளையும், கோட்பாட்டுக் குழப்பங்களையும் ஏற்படுத்திவிடுகிறது. இந்த விபத்திற்கு நாம் ஆளாகக்கூடாது. திருவிவிலியத்தைச் சரிவர வாசிப்பது அடிப்படைவாதத்திலிருந்து விலகிச்செல்ல உதவுகிறது.

## 2. சிந்தித்தல் (Meditatio)

சிந்தித்தல் என்பது விவிலியத்தில் நாம் வாசிக்கின்ற நிகழ்ச்சியில் காலத்திற்கும் நிலைத்து நிற்கின்ற விழுமியங்களை நாம் சிந்திப்பது ஆகும். இப்பகுதியில் விவிலிய வசனத்திற்குள் நாம் நுழைய வேண்டும். திருவிவிலியப் பகுதி எனக்கு அல்ல எமக்குக் கூறுவது என்ன? போன்ற கேள்விகளைக் கேட்க வேண்டும். தனிப்பட்ட அல்லது சமுதாய அளவில் திருவசனங்கள் செயல்படுகின்றன. இச்சிந்தனையில் நம் அறிவும் உணர்வும் இணைந்து இறைவார்த்தையில் மறைந்து கிடக்கும் இறைவெளிப்பாட்டை, மறை உண்மைகளைக் கண்டு அறிகிறது. திருவிவிலிய வாசகங்கள் எழுதப்பட்ட நிலைக்கும் இன்றைய நம் வாழ்வின் எதார்த்தம், அலுவல்கள், கடமைகள், பொறுப்புக்கள் இவற்றிற்குமிடையே உள்ள ஒற்றுமை என்ன? இன்றைய சூழ்நிலைக்கு இந்த வாசகப்பகுதி அறிவிக்கும் செய்தி என்ன? மனம் திரும்புதலுக்கு அழைப்பு விடுக்கின்றதா? நாம் எவற்றைத் திருத்திக் கொள்ளவேண்டும்? என் செயல்களை இவ்வாசகப்பகுதி நியாயப்படுத்துகின்றதா? கண்டனம் செய்கின்றதா? என்னிடம் வளர வேண்டியப் பண்புகள், குணநலன்கள் என்னென்ன? இவைபோன்ற கேள்விகளை இங்கே கேட்க வேண்டும்.

இந்த வாசகங்கள் வழியாகக் கடவுள் எனக்கு என்ன செய்தி தருகிறார்? என் குடும்பத்திற்கு, குழுமத்திற்கு என்ன செய்தி தருகிறார்? என் சமுதாயத்திற்கு என்ன செய்தி தருகிறார்? என்பதைக் கண்டுபிடித்தல் வேண்டும். இச்சிந்தனைப் பகுதியில் வசனங்களின் உண்மைப் பொருளைக் கண்டுணரும் வண்ணம் அவ்வார்த்தைகளைத் திரும்பத் திரும்பக் கூறுதல் மிகுந்த நலன் பயக்கும். நமது வாழ்வை மரபுகள், கொள்கைப்பிடிப்புகள், முகமூடிகள்.... போன்றவை கொண்டு அடிமைப்படுத்தியுள்ளோம். இவற்றைக் கிழித்து எறிந்து விடுதலைபெற இந்த இறைவார்த்தைச் சிந்தனைகள் துணைபுரியும். ஏனெனில் நம் உள்ளத்தின் அடித்தளத்தில் உணர்வுகளைத் தொடும் வார்த்தைகளை நாம் கண்டு பிடிக்கிறோம். இச்சிந்தனைப் பகுதியில் தூய ஆவியாரின் துணையை நாம் அதிகமாகவே அனுபவிக்க முடியும். ஏனெனில் திருவிவிலியத்தின் ஆன்மீகப் பொருளை நமக்கு விளக்கிக் கூறுபவர் தூய ஆவியார் ஆவார்.

## 3. மன்றாட்டு (Oratio)

ஆழ்ந்த சிந்தனை நம் உள்ளத்தில் பல கேள்விகளை எழுப்புகின்றன. வலிமையான வார்த்தையின் ஒளியில் நாம் நம் வலுவின்மையை உணர்கின்றோம். ஆகவே நம் உள்ளம் சிந்தனையிலிருந்து உயிர்த்தெழுந்து இறைவனை நோக்கி இயல்பாகவே "ஆண்டவரே எழுந்து வாரும், துணைபுரியும், உம் பேரன்பை முன்னிட்டு என்னை மீட்டருளும்" என்று இதழ்கள் முணுமுணுக்க ஆரம்பிக்கின்றன. இந்த மன்றாட்டு தன்னார்வமாய் உள்ளத்திலிருந்து கிளர்ந்து எழும் மன்றாட்டு ஆகும். புத்தகத்தைப் பார்த்து வாசிக்கும் மன்றாட்டு அல்ல. மாறாக, இயல்பாகவே இதயத்தின் ஆழத்திலிருந்து எழும்பிவரும் மன்றாட்டு. எளிய வார்த்தைகளில் சொந்தமாக ஆண்டவரை நோக்கி நம் உள்ளம் மன்றாட்டை எழுப்புகிறது.

நாம் என்ன செய்ய வேண்டும் என்பதைச் சிந்தனைப் பகுதி சுட்டிக் காட்டியது. ஆகவே இப்பொழுது இம்மன்றாட்டுப் பகுதியில் நாம் இறைவனுக்குப் பதில் அளிக்கின்றோம். இறைவனுக்கு புகழ் செலுத்தியும், நன்றி சொல்லியும் சிந்தனையில் விளைந்த எண்ணங்களுக்காக மன்றாடியும் மன்னிப்பு வேண்டியும் இதயத்தின் குரலை எழுப்புகிறோம். "உம் சொற்படியே எனக்கு நிகழட்டும்" என்று உரைத்த மரியாவோடு நம் வாழ்வை இறைவனிடத்தில் அர்ப்பணம் செய்கிறோம்.

இம்மன்றாட்டுப் பகுதியில் ஒவ்வொருவரும் இறைவனை அடையும் வழியையும் கடவுளிடம் கொண்டுள்ள ஒன்றிப்பையும் உணர்கின்றோம். கடவுளை முன்னிட்டுத் தன் சகோதரர் சகோதரிகள், குடும்பம், தன்னைச் சுற்றியுள்ள ஏழைகள், சமுதாயம் ஆகியவற்றிற்காக தன்னையே வெறுமையாக்கிக் கொள்ளவும் முயல்கின்றோம், மன்றாடுகின்றோம்.

## 4. ஆழ்நிலைக்/ காட்சித்தியானம் (Contemplatio)

ஆழ்நிலைத்தியானம் என்பது விளக்குவதற்கு கடினமான ஒன்றாகும். இது அன்பினால் இறைவார்த்தையை மேவுதல், தடவுதல், ஆரத்தழுவுதல் என்பதாகும். இது வசனத்திலுள்ள எழுத்தைக் கடந்து வசனத்தின் ஆதாரமாய் இருக்கிற இயேசுவை ஆரத்தழுவுவது ஆகும். தந்தையின் மகனாகவும் தூய ஆவியை நமக்கு அனுப்புகிறவராகவும் இயேசு இருக்கிறார். இந்த இயேசுதான் விவிலியத்தின் எல்லாப் பக்கங்களிலும் வசனங்களிலும் மறைவாக இருந்துகொண்டு நம்மோடு பேசுகின்றவர். அமைதியின் ஆழத்தில் நம்முடைய இலக்காகவும் உச்சமாகவும் இருக்கிற ஆண்டவர் இயேசுவை யார் என்று நாம் கண்டுபிடிப்பதே ஆள்நிலைத்தியானம் ஆகும்.

இயேசுவின் பிரசன்னத்தை இங்கே முழுமையாக உணர்கின்றோம். இயேசுவே ஆண்டவர் என்றும், சாவை வென்றவர் என்றும், தந்தையை நமக்கு வெளிப்படுத்தியவர் என்றும், மீட்பை முழுமையாகக் கொண்டுவருகிற இடைநிலை - யாளர் என்றும், நற்செய்தியின் மகிழ்வைக் கொடுக்கின்ற கொடையாளர் என்றும் கண்டு அனுபவிக்கிறோம். இந்த அனுபவத்தில் நம் உள்ளத்திலிருந்து ஆராதனையும், புகழ்ச்சியும், மகிழ்ச்சியும், பரவசமும் வெளிப்படுகிறது. கிறிஸ்துவோடு இணைந்து நாமும் தெய்வீகத்தில் ஒன்றாகக் கலந்து மகிழ்கிறோம்.

மேலே சொல்லப்பட்டுள்ள சிந்தித்தல், மன்றாடுதல், ஆழ்நிலைத் தியானம் ஆகிய மூன்று படிநிலைகளும் நாம் புரிந்து கொள்வதற்காகத் தனித்தனியாக விளக்கப்பட்டுள்ளன. ஆனால் தன்னிலேயே இந்த மூன்று படிநிலைகளும் தனித்தனியானவை அல்ல. ஒன்றைத் தொடங்கும்பொழுதே அடுத்த படிநிலை தொடரும். அதற்கு அடுத்த படிநிலையும் உள்ளத்தின் ஆழத்திலிருந்து எட்டிப்பார்க்கும். ஆயினும் இந்த மூன்று படிநிலைகளையும் தனித்தனியாகப் பயிற்சி செய்வது பயன் தருவனவாகும். இனி இந்தப்பயிற்சியின் மூலமாக இறைவார்த்தையில் ஆழப்பட விரும்புகிறவர்களுக்காக புனித இஞ்ஞாசியாரின் ஆன்மீகப் பயிற்சிகள் நூலின் அடிப்படையில் மேலும் நான்கு படிநிலைகளை கற்றுக்கொள்வோம். இப்படிநிலைகளை கர்தினால் மரிய மார்த்தீனி தம்முடைய நூல்களில் பயன்படுத்துகிறார் என்பது ஈண்டு குறிப்பிடத்தக்கது.

## 5. ஆறுதல் (Consolatio)

இந்த அருள்வாக்கு வாசிப்புப் பயணத்தில் ஆறுதல் என்னும் இந்தப் பகுதி மிகவும் முக்கியமான ஒன்றாகும். புனித இஞ்ஞாசியார் தமது ஆன்மீகப் பயிற்சி நூலில் இப் படிநிலையைக் குறித்துப் பல தடவைகள் பேசுகின்றார். இந்தப் பண்பு இல்லாமல் நம் பயணம் உப்பு இல்லாத, சுவை இல்லாத ஒன்றாக மாறிவிடும். ஆறுதல் என்பது இப்பயணத்தில் மகிழ்வு தரும் பண்பாகும். இது கிறிஸ்துவில் கடவுள் நமக்கு அருளும் கொடையாகும். தூய ஆவியார் இக்கொடையை யாருக்கு வழங்க விரும்புகிறாறோ அவருக்கு இலவசமாக வழங்குகிறார். இந்தப் படிநிலையில் இருந்துகொண்டுதான் உள்ளத்தின் ஆழத்திலே மிக வலுவான தேர்வுகளைக் குறிப்பாக ஏழ்மை, கற்பு, கீழ்ப்படிதல், மன்னித்தல், உண்மையாய் இருத்தல் என்னும் அழைப்பு வாழ்வின் தேர்வுகளைத் தனி மனிதர்கள் மேற்கொள்கிறார்கள். உள்ளார்ந்த மனிதனின் ஆழத்தில் இந்தப் பயணச் சூழலில் இத்தகைய செம்மையான முடிவுகள் எடுக்கப்படுகின்றன. தூய ஆவியாரிடமிருந்து வராத் கொடைகள் சில குறுகிய காலத்திற்கு நமது அறநெறி சார்ந்த பிடிவாதங்களால் துளிர்க்கலாம். ஆனால் அவை காலத்திற்கும் நிலைத்து நிற்பது இல்லை.

(தொடர்ச்சி 19ம் பக்கம்)

திருத்தூதர் பவுல் ஆண்டுச் சிறப்புக் கட்டுரை

# திருத்தூதர் பவுலின் பார்வையில் சான்று வாழ்வு!

அருள்பணி. வ. மரியதாசன், குருகுல முதல்வர், கோட்டாறு

தூய ஆவி உங்களிடம் வரும்போது நீங்கள் கடவுளது வல்லமையைப் பெற்று எருசலேமிலும் யூதேயா சமாரியா முழுவதிலும், உலகின் கடையெல்லை வரைக்கும் எனக்குச் சாட்சிகளாக இருப்பீர்கள் (திப 1:8) என்ற இறைவாக்கு பவுல் அடியாரின் வாழ்வில் நூற்றுக்கு நூறு செயல்பட்டது.

உலகின் கடையெல்லை வரை நற்செய்தி அறிவித்துச் சாட்சியம் பகரும் பணியை மேற்கொண்ட பவுல், குறிப்பாகப் பிற இனத்தாருக்குப் பணியாற்ற பணிப்பகிர்வு ஒப்பந்தம் (கலா 2:9-10) பெற்று பல்வேறு தேவைகளை உணர்ந்தார், பல்வேறு வழி முறைகளை வகுத்துக்கொண்டார். எடுத்துக்காட்டாக:

*1. சான்று வாழ்வுக்குத் தூய ஆவியின் வல்லமையே முக்கியமானது.*
*2. பணியின் எல்லை "உலகம்" (உரோம் வரை) என்னும் தெளிவு.*
*3. இடம் விட்டு இடம் விரட்டப்படுதல் இழப்பதல்ல, மாறாக நற்செய்திப் பணி விரிவாக்கத்திற்கு கடவுள் வைத்த ஆதாயமான வழிமுறை என்ற புதுச் சிந்தனை. உயிர் ஆபத்து நிறைந்த இந்தச் சாட்சியப் பணிக்குத் தயார் நிலை.*
*4. புதுக் குழுக்களை உருவாக்குவது.*
*5. மத உரிமைகளை, குடி உரிமைகளை நற்செய்திப் பணிக்குச் சாதகமாக்குதல்.*
*6. கோவில் தொழுகைக்கூடம், ஆற்றங்கரை, சிறைக்கூடம் எதையுமே நற்செய்திப்பணித் தளமாக்கும் பார்வை.*
*7. அரும் அடையாளம் வழியாகவும் சாட்சியம் பகர்தல்.*
*8. பண்பாட்டுமயம் செயல்பட வாய்ப்பளித்தல்.*
*9. துணிச்சலான சாட்சியமாகிய பெண் விடுதலை... சமத்துவ சமுதாயம், சமநிலை உருவாக்கம், அடிமை நிலைக்கு புதுமுகம் படைத்தல்.*
*10. தாம் பொருள் ஈட்டி, பிறர் கையை எதிர்பார்க்காமல் வாழ்ந்து சாட்சியப் பணி செய்வதில் பெருமை கொள்ளல்.*

## 1. சான்று வாழ்வுக்குத் தூய ஆவியைப் பெறல்

சாட்சியப் பணியைச் செய்வதற்காகப் பவுலடியாரும் முதன் முதல் தூய ஆவியாரின் பொழிதலைப் பெற்றுக்கொண்டார். தமஸ்கு அனுபவத்திலே "ஆண்டவரே நீர் யார்"? எனக்கேட்டு தான் துன்புறுத்தும் இயேசுவே அவர் எனத் தெரிந்துகொண்ட பவுல், "நேரடியாக அழைப்புப்" பெற்றதால் மமதையடையவில்லை. மாறாக தமஸ்குவில் அனனியா என்ற சீடர் முன் பணிந்தார். அவர் வழியாகப் பார்வை பெற்றார், திருமுழுக்குப் பெற்றார், ஆவியாரின் பொழிதலை அனுபவித்தார் (திப.9-17). "நான் திருத்தூதரிடையே மிகக் கடையவன். திருத்தூதர் என அழைக்கப்படத் தகுதியற்றவன். ஏனெனில் திருச்சபையைத் துன்புறுத்தினேன்" (1கொரி 15:9-10). இதற்குப் பரிகாரம் செய்யுமாறு மிகத் தீவிரமாக, வீரியமாகப் பணிபுரியும் உந்துதல் ஆவியார் வழி கிடைத்தது.

## 2. பணியின் எல்லை பற்றித் தெளிவு பெறல்

அ. பவுல் அடியார் பிற இனத்தாருக்கும் அரசருக்கும் இஸ்ரயேல் மக்களுக்கும் முன்பாக இயேசுவின் பெயரை எடுத்துச் சொல்லத் தேர்ந்து எடுக்கப்பட்ட கருவி" (திப. 9:15). "உலகம் முழுவதும் என் மீட்பை அடைவதற்கு நான் உன்னை வேற்றினத்தாருக்கு ஒளியாக ஏற்படுத்துவேன்." (திப. 14-47) என்ற குரல் அவரது காதுகளில் ஒலித்துக்கொண்டே இருந்தது. அவ்வாறு வெவ்வேறு இடங்களுக்குச் செல்லும்போது ஆவியார் கிழித்த கோட்டைத் தாண்டாது இணைந்து பணி செய்பவர் பவுல் அடியார் (திப 16:7).

ஆ. பிறர் நற்செய்தி அறிவிக்கும் தளங்களில் எல்லைமீறி நுழையாதவர் (2கொரி 10:12-16).

இ. "இறையாட்சி அறிவிக்கும் காலடிகள் எத்தனை அழகானவை" (உரோ.10:15), உயிர்த்த இயேசுவே அந்த நற்செய்தியின் மையம் (உரோ 10:9). இறையாட்சி என்பது உண்பதையும், குடிப்பதையும் அடிப்படையாகக் கொண்டது அல்ல. தூய ஆவி தரும் நீதி, அமைதி, மகிழ்ச்சி ஆகியவற்றையே அடிப்படையாகக் கொண்டது" என்பதில் முழுத்தெளிவு அவருக்கு உண்டு (உரோ 14:17).

ஈ. மேலும் திருமுழுக்குக் கொடுப்பதை பிறரிடம் ஒப்படைத்து விட்டு நற்செய்தி அறிவிப்பதைத் தம் தலைமேல் சுமத்தப்பட்ட கடமை எனக் கொண்டார் (!கொரி1:14). நற்செய்தி அறிவிப்பதோ கடினமான பணி அல்லவா?

## 3. உயிர் ஆபத்து நிறைந்த சாட்சியப் பணி

சாட்சியப் பணி நீண்ட காலம் செய்ய, அவ்வப்போது வரும் ஆபத்திலிருந்து தப்பித்துக்கொள்ளத் தெரிய வேண்டும் (திப 9:16). "என் பெயரின் பொருட்டு அவர் எத்துணை துன்புற வேண்டும் என்பதை நான் அவருக்கு எடுத்துக் காட்டுவேன்." இந்த ராஜதந்திரத்திற்குப் பல எடுத்துக் காட்டுக்கள் உள்ளன. "பல வேதனைகள் வழியாகவே இறையாட்சிக்கு உட்பட வேண்டும்" (திப 14-22) என்பதற்கு ஒருசில சான்றுகள்:

- **தமஸ்குவில்** தொடக்கத்திலேயே சூழ்ச்சிகள் - எனவே பவுல் அடியார் கூடையில் வைத்து நகர மதில் வழியாக இறக்கி விடப்பட்டார் (வீர சிவாஜி மாதிரி, திப 9:23-25).
- **அந்தியோக்கியாவில்** பொறாமை கொண்ட யூதர் திருத்தூதரை, நற்செய்திப் பணியாளரை எதிர்த்தனர், பழித்துரைத்தனர். பொதுமக்கள் உயர்குடி மக்கள் அனைவரையும் தூண்டி தங்கள் நாட்டிலிருந்து துரத்தி விட்டனர் (திப 13:50).
- **இக்கோனியாவில்** பொறாமை கொண்ட யூதர் திருத்தூதரை இழிவுபடுத்தி கல்லால் எறியத் திட்டமிட்டபோது இடம் விட்டு ஓட வேண்டியதாயிற்று (திப 14:7).
- **லிஸ்திராவில்** இக்கோனியா யூதர்கள் வந்து புகுந்து யூதரைத் தூண்டிவிட்டு பவுல்மேல் கல் எறிந்தனர். அவர் இறந்துவிட்டார் என எண்ணி நகருக்கு வெளியே உடலை இழுத்துப் போட்டனர் (திப 14:20).
- **கிரேக்க நாட்டில் பிலிப்பி நகரில்** தொழில் வருவாய்க்கு வாய்ப்பு இழந்த சூழலில் மக்கள் அவரை இழுத்துச் சென்று அடித்துச் சிறையில் தள்ளினர் (தி.ப 17:16-40).
- **தெசலோனிக்காவில்** யூதர்கள் பொறாமையால் பவுலுக்கு எதிராக அமளி உண்டாக்கினர்... யாசோனின் வீட்டைத் தாக்கினர். இரவோடு இரவாக பவுல் பெரோயாவிற்குச் சீடர்களால் பாதுகாப்போடு கடத்திச் செல்லப்பட்டார் (திப 17:10).
- **பெரோயாவிலும்** பவுலுக்கு எதிராகக் கலகம் செய்தபோது அவர் கடற்கரைக்குத் தப்பிச் சென்றார் (திப 17:14).

எனவே நற்செய்திப் பணிக்கு எதிர்ப்பு என்பது இன்றைய சூழலில் மட்டுமல்ல... என்றுமே வரலாறு கண்ட காலத்தின் கோலம்! சாட்சியப் பணியால் ஏற்பட்ட துன்பங்களைப் பவுல் அடியார் 2 கொரி 11:23-33இல் பட்டியல் இட்டுக் காட்டுகின்றார். இதிலிருந்து பவுல் கற்றுக்கொண்ட பாடம் நகர் விட்டு நகர் ஓடுவது ஓர் இழப்பல்ல, மாறாக நற்செய்தி விரைவில் பரவ ஆண்டவர் வகுத்துத் தந்த நவீன, ஆதாயமான பணியிட மாற்றம் என்பதே!

பவுல் அடியார் பிலி. 4:12இல் கூறுவதுபோல அவருக்கு வறுமையிலும் வாழத் தெரியும், வழமையிலும் வாழத்தெரியும், வயிராற உண்ணவோ, பட்டினி கிடக்கவோ, குறைவுற்றுத் தாழவோ, நிறைவுற்று உயரவோ – எதிலும் எந்தச் சூழலிலும் வாழப் பயிற்சி கிடைத்து இருந்தது. பயிற்சி கொடுத்தது யார்? பயிற்சியாளர் பெயர் "வலுவூட்டுகிறவர்" – அவர்தான் இயேசு!

## 4.சாட்சியப் பணிக்கு ஆள்களைத் தேர்வு செய்தல்

திருச்சபை எருசலேமிலும் சமாரியவிலும் பரவியபின் உலகின் எத்திசையிலும் பரவவேண்டும். இந்தத் தனிப்பட்டப் பணிக்குத் தகுந்தவர் பவுல், பர்னபா என்பதை ஆவியானவர் அறிவித்தார். (திப 13:1-3) சைப்ரஸ், சின்ன ஆசியா, கிரேக்க நாடு, உரோமை செல்லவேண்டியவர் இவர்களே. இவ்வாறு உலகமெங்கும் நற்செய்தி அறிவிக்க ஒதுக்கிவைக்கப்பட்ட ஒரு குழுவினர் இவர்கள். இவர்களும் இரண்டு குழுவாக உடைந்து பிரிதல் ஆண்டவர் புதுப்புது நற்செய்தியாளர் குழுக்களை ஒருவாக்கும் முறை என்றே பவுல் உணர்ந்தார். சாட்சியப்பணிக்கான குழுக்களைப் பெருக்கிக் கொள்ளல் நம்மால் கிரகித்துக்கொள்ள இயலாத மோதல் முறையிலும் படிப்படியாக நடைபெற்றது (திப 15:39). நேரடியாகப் பயணிக்க இயலாத சூழலில சீடர்களை அனுப்பிவைப்பது, கடிதங்கள் எழுதுவது ஆகியவை சிறப்பிடம் பெற்றன. பரந்த பார்வையோடு பெண்களையும் நற்செய்திப் பணியில் ஈடுபடுத்திக்கொண்டார் (பிலி. 4:2-3). மூப்பர்களை ஒவ்வொரு சபையிலும் ஏற்படுத்தி அவர்கள் வழி இறையாட்சி மலரச் செய்வதற்கு அவரது கடிதம் ஒவ்வொன்றும் சான்று பகர்கிறது (மேலும் காண்.திப14: 23).

## 5.உரிமைகளை நன்கு பயன்படுத்திக் கொள்தல்

பணிபுரிவதில் வல்லவர் பவுல் அடியார். உரோமைக் குடி உரிமையைப் பயன்படுத்தி மரண அடியில் இருந்து பன்முறை தப்பித்துக்கொண்டார் (சான்றாக - திப 16:37-29, 22:25-29, 23:27). சிறைக்கைதியாக செலவின்றி பாதுகாப்பாக உரோமை செல்ல தந்திரமாகவும் வழிவகுத்துக் கொண்டார் (திப. 25:13-12). மேலும் யூதர் என்ற முறையில் அவர் பரிசேய வகுப்பினர். எனவேதான் பரிசேயன் என அறிக்கையிட்டு, தலைமைச் சங்கத்தையே இரண்டு படுத்தி தலைமைச்சங்கத் தீர்ப்பிலிருந்து விடுதலை பெற்று தொடர்ந்து பணியாற்றினார் (திரு 23:1-11). போட்டிக் குழுக்களால் துன்பங்கள் (2 கொரி 12:11), நோயால் துன்பங்கள் (கலா 4:13-15), குறைபாடுகளால் துன்பங்கள் (2கொரி 10:10,11:6), உடலில் தைத்து கொடுமைப்படுத்தும் முள் (2 கொரி 2:7), உள்மனப் போராட்டம் (உரோ 7:14-33), அத்தனையும் தாங்க வல்லவர் (10:10). ஆவியார் கிழித்தக் கோட்டைத் தாண்டாமல் சாட்சியப்பணி செய்பவர் (திப 16:7).

## 6. ஆற்றங்கரையில் சாட்சியப்பணி

கோவிலில், தொழுகைக் கூடத்தில் மட்டுமன்றி ஆற்றங்கரையிலும் சாட்சியப்பணி (திப16:13) நடைபெற்றது. மேலும் சிறையையே நற்செய்தி அறிவிப்பு தளமாக்குதல் மிகவும் போற்றத்தக்கது (திப 16:25-31).

யூத, பிற இனத்தாரைக் கவரும் சிந்தனை ஓட்டம். பழைய ஏற்பாட்டைப் பயன்படுத்தி யூதர்களுக்குச் சாட்சியம். பழைய ஏற்பாடு புதிய ஏற்பாட்டில் நிறைவேறும் என அறிவித்து, மக்களைச் சரியான திசைக்குத் திருப்புவர் இந்த நற்செய்திப் பணியாளர். பிற இனத்தாரைக் கவரும் முறையையும் அவர் கற்றுக்கொண்டார். ஏதென்ஸ் நகர் நிகழ்வு இதற்குச் சிறந்த சான்று (திப 17:16-34).

## 7. அரும் அடையாளம் வழி சாட்சியம் பகர்தல்

(திப 14:3, 14:9, 2கொரி 12:12) மந்திரவாதிகளுக்கு எதிரான சாட்சியம் பல்வேறு இடங்களில் உள்ளன. சான்றாக வஞ்சக உறைவிடமான அலகையின் மகனான மந்திரவாதியின் பிடியில் இருந்து மக்களை விடுவிப்பது இயேசுவின் மீட்புப்பணி என்பதை உணர்த்தியவர் திருத்தூதர் (திப 13:8-12, காண். கலா 4:10).

## உங்களுக்குத் தெரியுமா?

### மறையறிவுப் போட்டி இல.73

இம்மாதம் மறையறிவுப் போட்டியின் 7வது ஆண்டுக்குள் நுழைகின்றோம். இம்முறை கொரிந்து நகரத்தைப் பற்றிச் சில வார்த்தைகள். கொரிந்து நகரம் கிரேக்க நாட்டின் தலைநகரத்திலிருந்து மேற்குப் பக்கமாக சுமார் 100 கி.மீ. தூரத்திலுள்ள ஒரு நகரம். இது உரோமையின் குடியேற்ற நகரங்களில் ஒன்று என்பதோடு இது ஒரு வணிக நகரமாகவும் விளங்கியது.

புனித பவுல் வாழ்ந்த கி.பி. முதலாம் நூற்றாண்டில் இங்கு ஏழு இலட்சம் மக்கள் வாழ்ந்திருக்கின்றனர். கிறிஸ்தவ விசுவாசம் அறியப்பட்டிருந்தாலும் புனித பவுலின் 2ம் மறையுரைப் பயணத்தின்போதுதான் இங்கு விசுவாசம் ஆழப்படுத்தப்பட்டு கிறிஸ்தவ திருச்சபைகள் உருவாக்கப்பட்டன.

இனி நமது வினாக்களுக்கு வருவோம். **வினாக்கள் அதிகாரம் 8 முதல் 12 வரை உள்ள பகுதிகளிலிருந்து தொகுக்கப்படுகின்றன.**

1. புனித பவுலின் திருத்தூதுப் பணிக்கு அடையாளச் சின்னமாய் அமைவது எது?
2. புனித பவுல் ஏன் தன்னை எல்லோருக்கும் அடிமையாக்கிக் கொண்டேன் எனச் சொல்கின்றார்.
3. வாக்கியத்தைப் பூரணப்படுத்துக "வலுவற்றவர்களைக் கிறிஸ்துவிடம் கொண்டுவர.............................
4. மோசேயின் காலத்தில் எகிப்திலிருந்து வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட நாட்டிற்கு சென்ற மக்கள் எதனால் திருமுழுக்குப் பெற்றதாகப் புனித பவுல் கூறுகின்றார்?
5. ஒரே நாளில் இருபத்து மூவாயிரம் பேர் எதனால் இறந்தனர்?
6. கடவுளைப் போற்றி திருவிருந்துக் கிண்ணத்தில் பங்குபெறுதல் எதற்குச் சமன்?
7. நாம் உண்டாலும் குடித்தாலும் எதைச் செய்தாலும் எதற்காகச் செய்ய வேண்டும்?
8. எவராவது தகுதியற்ற நிலையில் அப்பத்தை உண்டால் அல்லது ஆண்டவரின் கிண்ணத்தில் பருகினால் அவர் எதற்கு எதிராகக் குற்றம் புரிகின்றார்?
9. இயேசு ஆண்டவர் எனச் சொல்பவர்கள் யார்?
10. தூய ஆவியானவரின் செயற்பாடுகள் ஒவ்வொருவரிலும் வெளிப்படுவது எதற்காக?

மாணவர் மறையறிவுப் பகுதி இல. 71இற்கான கேள்விகளுக்கு 46 பேர் விடையளித்திருந்தனர்.

**இவர்களுள் பரிசுக்குரியவராகத் தெரிவுசெய்யப்பட்ட அதிஸ்ரசாலி:**

**இ. ஸ்ரீபனா, களிமோட்டை, முருங்கன்.**

**பாராட்டுக்குரியவர்களாக தெரிவுசெய்யப்படும் 10 அதிஸ்ரசாலிகள்**

1. ச. றஜில்டன் தரம் 7, இல. 130/44, குட்செட் வீதி, வவுனியா.
2. ம. றொஜன் குரூஸ், முத்தரிப்புத்துறை, சிலாவத்துறை.
3. பி. ஜென்சி, தாழ்வுபாடு, மன்னார்.
4. யேசுதாசன் தனுசியா, 2008 A/L கலைப்பிரிவு
5. ஆர். டயானா கூஞ்ஞ, தரம் 08, J. R. S. வீ.திட்டம், தலைமன்னார்
6. ம. றொனால்ட் றீகன் குரூஸ், முத்தரிப்புத்துறை, சிலாவத்துறை
7. திருமதி. ஜெயசித்திரா தேவபாலன் பெனாண்டோ, அரிப்பு.
8. ம. மேரி டொறின் குரூஸ், முத்தரிப்புத்துறை, சிலாவத்துறை
9. ஆ. லக்ஸனா, தரம் A/L , மடு.
10. ஜெ. ஜென்சின் சார்ளஸ், குருமட மாணவர் இல்லம், மன்னார்.

## 8. பண்பாட்டுமயம் வழியாகச் சாட்சியம்

யூத குலமே சுமக்க இயலாத நுகத்தை – ஒரு பண்பாட்டை – குறிப்பாக விருத்தசேதனம் என்ற வழக்கத்தை – பிற இனத்தார் மேல் சுமத்தி சேர்திக்கக்கூடாது என்பதே பவுல் அடியார் தெளிவாக்கிய சாட்சியம். அவர் மதில்மேல் அமர்ந்த பூனையல்ல. நற்செய்தி அறிவிப்பை விரிவுபடுத்தக் கருதிய பவுல், ஆபிரகாம் காலத்திலிருந்து சுமார் 2000 வருட பழக்கமுடைய விருத்தசேதனம் போன்ற யூத வழக்கத்தையே பிற இனத்தாரைப் பொறுத்தமட்டில் விட்டுவிடத் தயாரானார். இயேசுவுக்காக இவற்றை எல்லாம் வீண், விட்டெறியக்கூடிய குப்பை எனக் கருதி நிலைப்பாடு எடுத்தார் (திப 15).. என்னே துணிச்சல்!

## 9. ஒருசில தளங்களில் துணிச்சலான சாட்சியம்

"இறையாட்சி என்பது உண்பதையும் குடிப்பதையும் அடிப்படையாகக் கொண்டதல்ல. தூய ஆவி தரும் நீதி, அமைதி, மகிழ்ச்சி ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டது" (உரோ 14:17) என்பதில் ஆழ்ந்த தெளிவுபெற்றிருந்த பவுல் பல்வேறு விடுதலை முயற்சிகளில் ஈடுபட்டார்.

*அ. மத ஆசார நிலையில்:* பிற இனத்தாருக்கு விருத்தசேதனம் விடுதலைப் பெற்றுக்கொடுத்தது. கிறிஸ்தவ சமய வரலாற்றில் இமாலய சாதனையாகும் (திப 15).

*ஆ. பெண் விடுதலை:* சகோதர சகோதரிகளே என்று இரு பாலாரையும் பவுல் அடியார் சமநிலையில் வைத்து பெருமைசேர்த்து இணைத்துப் பேசுவது (2 கொரி 6:18), ஆணுக்கொரு நீதி பெண்ணுக்கொரு நீதி என்பது கிறிஸ்தவத்துக்கு எதிர்மறை என அறிக்கையிடுவதும் (கலா 3:28) கருதத்தக்கது. மேலும் 1கொரி 11:2-10 இல் பெண்களைப் பற்றிய பழைமைவாத சிந்தனைகளை விரிவாக நினைவுகூர்ந்த பவுல் 11ஆம் வசனத்தில் "எது எப்படி இருந்தாலும் ..." என்று தொடங்கி பெண்களின் முக்காடு பற்றித் தம் சொந்தக் கருத்தை 11-14 வசனத்துக்குள் புதிய சிந்தனையுடன் பெண்களுக்குச் சாதகமாகவே அறிவித்துள்ளார். அதுபோலவே, 1 கொரி 14ஆம் அதிகாரத்தில் பெண்கள் சபையில் பேசுவது பற்றிய பகுதியில் 33:35 இல் பழமைவாத ஆடவரின் சொற்களை எதிரொலித்துவிட்டு, வசனம் 37இல் வன்மையான கேள்விகளை பழமைவாத ஆடவரை நோக்கித் தாமே எழுப்பி அவர்களைக் கண்டித்து பெண்களுக்குச் சாதகமாகக் குரல் கொடுக்கிறார். (தொடர்ச்சி 19ம் பக்கம்)

## இலக்கியத் தடாகம்

# விவிலியமும் தமிழ் இலக்கியமும்

ஒப்பீட்டுத் தொடர் 6.

- அருள் . செல்லத்துரை

### திருவிவிலியம்

#### முழுமுதற் கடவுள்

1. (அ) தொடக்கத்தில் வாக்கு இருந்தது;
அவ்வாக்கு கடவுளோடு இருந்தது; அவ்வாக்குக்
கடவுளாயும் இருந்தது. வாக்கு என்னும் அவரே
தொடக்கத்தில் கடவுளோடு இருந்தார்.
அனைத்தும் அவரால் உண்டாயின. – யோவா 1:1,2

(ஆ) 1. தொடக்க முதல் இருந்த வாழ்வு அளிக்கும் வாக்கை நாங்கள் கேட்டோம்; கண்ணால் கண்டோம்; உற்று நோக்கினோம்; கையால் தொட்டுணர்ந்தோம். - 1 யோவா 1:1

2. தந்தையரே, தொடக்கமுதல் இருக்கும் அவரை அறிந்துள்ளீர்கள்.– 1 யோவா 2:14

(இ) ஆமென் எனப்படுபவரும் நம்பிக்கைக்குரிய, உண்மையான சாட்சியும் கடவுளது படைப்பின் தொடக்கமும் ஆனவர் கூறுவது இதுவே – திவெ 3:14

2. (அ) அகரமும் நகரமும் நானே; தொடக்கமும் முடிவும் நானே. – திவெ 21:6 – காண் 22:13, எசா:48:12; 1:8

(ஆ) அஞ்சாதே! முதலும் முடிவும் நானே – திவெ1:17

(இ) முதலும் முடிவும் ஆனவர் - திவெ 2:8

*இடப்பக்கங்களில் விவிலிய மேற்கோள்கள் வரிசை எண்ணிட்டுக் கொடுக்கப்பட்டுள்ளன. வலப்பக்கங்களில் அவற்றிற்குப் பொருத்தமான தமிழ் இலக்கிய மேற்கோள்கள் அதே வரிசை எண்களில் நேருக்கு நேர் கொடுக்கப்பட்டுள்ளன. ஆயினும் ஒன்றுக்குப் பல பொருத்தங்கள் அமைவதையும் காணலாம்.*

### தமிழ் இலக்கியம்

#### முழுமுதற் கடவுள்

1. (அ) 1. அண்ட முதல் ஆயினான்-திருவாசகம் 8:9,காண் 8:19
2. எல்லா உலகமும் எல்லா உயிர்களும் வல்லாளன் ஆதி பரம சிவனது சொல்லாகுமே – சித்தர் பாடல்கள்: இடைக்காட்டுச் சித்தர்
3. ஆதிபகவன் முதற்றே உலகு – திருக்குறள் 1
4. ஆதி முதலாகி நின்ற அரி – சித்தர் பாடல்கள்: பத்திரகிரியார்
5. ஊழி முதல்வனாய் நின்ற ஒருவன் - திருவாசகம் 7:8
6. என் வாழ் முதலே - திருவாசகம் 6:40
7. என் வாழ் முதலாகிய பொருளே - திருவாசகம் 20:1
8. ஆதியாய் நின்ற சோதி – நாலாயிரத்திவ்விய பிரபந்தம்: நம்மாழ்வார் திருவாய்மொழி 751
9. ஆதிப் பெருமான் - நாலாயிரத்திவ்விய பிரபந்தம்: - திருமழிசைப்பிரான் 79
10. அண்ட பிண்டம் தந்த ஆதி தேவன் - சித்தர்பாடல்கள்: பாம்பாட்டிச் சித்தர்

(ஆ) 1. முன்னைப் பழம் பொருட்கும் முன்னைப் பழம்பொருள் - திருவாசகம் 7:9 – காண் 3:13
2. முன்னோன் காண்க முழுதோன் காண்க – திருவாசகம் 3:29- காண்: அப்பர் தேவாரம் 261, திருஅருட்பா 457

(இ) 1 ஆதியானை அமரர் தொழப்படு நீதியானை – தேவாரம்

2. (அ) ஆதி அந்தம் ஆயினாய் ஆலவாயின் அண்ணலே – சம்பந்தர் தேவாரம் 52

(ஆ) ஆதியாய் ஈறும் ஆனார் - அப்பர் தேவாரம்

(இ) 1. அந்தமும் ஆதியும் ஆகிநின்றீர்-அப்பர் தேவாரம் 924
2. ஆதியும் அந்தமும் ஆயினர் - திருவாசகம் 9:20
3. முந்திய முதல்நடு இறுதியும் ஆனாய் - திருவாசகம் 20:8
4. ஆதியே நடுவே அந்தமே – திருவாசகம் 22:9

## சமைப்போம் சுவைப்போம்

### தொகுத்துத் தருவது

அ. கிரேஸ் குயின்ரா, சாளம்பன்

### சொக்களற் சோஸ்

**தேவையான பொருட்கள்**

கொக்கோப்பவுடர் 2 மே. க. (நி) , சீனி 3 மே. க. (நி) பட்டர் (மாஜரின் 100 கிராம், தண்ணீர் ½ டம்ளர் வனிலா 3 மே.க.

**செய்முறை** : தாச்சியில் கொக்கோப் பவுடர் சீனி இரண்டையும் விட்டு நன்கு கரைத்து அடுப்பில்விட்டு காச்சவும். கலவை பொங்கி கொதிக்கத் தொடங்கும்போது மாஜரீனைக் கலந்து இடைவிடாது துளவி காச்சவும். கலவை ஓர் அளவு தடிக்கத் தொடங்கும்போது இறக்கி நன்றாக ஆறியபின்பு உலர்ந்த போத்தலில் அடைத்துவைத்துப் பரிமாறலாம்.

**குறிப்பு:**

சொக்களற் சோசை ஐஸ்கீறிம் - புடிங் என்பன பரிமாறும்போது அவற்றின்மேல் 1மே. க. அளவை ஊற்றி மேலே சிறிது வெட்டிய வறுத்த கஜூவை தூவி பறிமாறலாம்.

## சமைப்போம் சுவைப்போம்

### தொகுத்துத் தருவது

அ. லவ்சாயினி

*மன்னா பத்திரிகைப் பணியகம், வைத்தியசாலை வீதி, மன்னார்*

### கோழி இறைச்சி பிரியாணி

**தேவையான பொருட்கள்**



பிரியாணி அரிசி - 1 கிலோ
கோழி இறைச்சி - 1 கிலோ
தனியாகத் தூள் - 1 மேசைக் கரண்டி
மஞ்சள் தூள் 1 மேசைக் கரண்டி
கசகசா - 1 மேசைக் கரண்டி,
உப்பு - 1 மேசைக் கரண்டி
கட்டி தயிர் - 2 கப்
நெய்- தேவையான அளவு
வெங்காயம் - 1, பூண்டு - 1
இஞ்சித் துண்டு - ஓரளவானது ஒன்று
இலவங்கம் - 6, ஏலக்காய் 4
மஞ்சள் துண்டு - 1 , பால் 2 தேக்கரண்டி
முந்திரி பருப்பு - 50 கிராம்



**செய்முறை**

அரிசியைச் சுத்தமாக கழுவி ஈரத்துடன் 15 நிமிடம் வைத்திருக்க வேண்டும். கோழி இறைச்சியை நீங்கள் விரும்பும் அளவில் வெட்டி சுத்தம் செய்துகொள்ள வேண்டும். தனியாகத் தூள், கசகசா, தயிர், உப்பு, இவற்றைக் கோழி இறைச்சித் துண்டுகளுடன் சேர்த்து நன்றாகப் பிரட்டிக் கிளறி வைத்துக்கொள்ள வேண்டும்.

வெங்காயம், பூண்டு, இஞ்சி இவை சிறிது சிறிதாக நருக்கப்பட்டு இரு சம பகுதி வெங்காயம், பூண்டு, இஞ்சி, ஏலக்காய், இலவங்கம் சேர்த்த பொன்னிறமாக வறுத்துக் கொள்ள வேண்டும். இவற்றுடன் தயிர் கலந்த கோழி இறைச்சியைக் கொட்டி வேக வைக்கவும். இந்த நேரத்தில் பாலில் மஞ்சள் துண்டைப் போட்டு ஊற வைக்க வேண்டும். வேறொரு பாத்திரத்தை அடுப்பில் வைத்து 2 மேசைக் கரண்டி நெய் ஊற்றி மற்றொரு பகுதியான வெங்காயம், பூண்டு, இஞ்சி, ஆகியவற்றை பொன்னிறமாக வறுத்துக்கொண்டு அரிசியை சேர்த்து வேக வைக்க வேண்டும்.

தண்ணீர் அனைத்தும் ஆவியாக அரிசி மிதமாக வெந்து இருக்க வேண்டும். திராட்சை முந்திரி பருப்பை நெய்யில் வறுத்து வெந்த கோழியையும் சேர்த்து அரிசியில் கொட்டி நன்றாக கிளறிவிட வேண்டும். இறுதியாக பாத்திரத்தை மூடி அடுப்பில் 5 நிமிடம் வைத்திருக்க வேண்டும். இதுவே சிக்கண் பிரியாணி! சாப்பிட மிகவும் சுவையாக இருக்கும்.

# மருத்துவப் பொழிவு

## சிக்குன்குன்யா நோய்க்கு சித்த ஆயுர்வேத சிகிச்சை

**வைத்தியர் எஸ். லோகநாதன்** B.S.M.S, R.A.M.P சித்தவைத்திய நிபுணர், மன்னார்

சிக்குன் குன்யா! தாய்லாந்து பாஷையில் இதன் அர்த்தம் முன்னோக்கி மடிதலாகும். இது ஒரு வைரஸ் காய்ச்சலாகும். இந்த வைரஸிற்கு அல்பா வைரஸ் என்று பெயர். இவ்வைரஸ் றொகா வைறிடி குடும்பத்தைச் சேர்ந்தது. அல்பா வைரஸ் தொற்றிய ஈடிஸ் இஜிப்டி என்ற பெண் நுளம்பினால் இந்த சிக்குன் குன்யா என்ற நோய் பரப்பபடுகின்றது. இந்த நோயில் ஏற்படும் காய்ச்சலானது சில நாட்கள் தொடக்கம் ஒன்று, இரண்டு வாரங்கள் வரை நீடிக்கும். சிலருக்கு உடல் அசதியும் களைப்பும், படபடப்பும் காணப்படும். மூட்டுக்களில் வலியானது மிகவும் அதிகமாகவும், வீக்கத்துடனும் காணப்படும். இவ்வேதனையானது சில வாரங்கள் தொடக்கம் பல மாதங்கள் நீடிக்கலாம். குழந்தைகளுக்கும், வயதானவர்களுக்கும், நாட்பட்டதும் கடுமையான நோயினால் பீடிக்கப்பட்டவர்களுக்கும் இந்நோயின் தாக்கம் கடுமையாக இருக்கும்.

### இந்நோயின் குணங்குறிகள்

1. அதிதீவிர காய்ச்சல் - குளிர் நடுக்கத்துடன் காய்ச்சல்
2. தலைவலி 3. உடல் அசதி, சோர்வு
4. குமட்டல், வாந்தி
5. தசைகளிலும் மூட்டுகளிலும் வீக்கத்துடன் வேதனை
6. தோலில் தடிப்புகளோ சிறு பருக்களோ ஏற்படும்

### குமட்டல், வாந்தி

1. எலுமிச்சம்பழ ஊறுகாய் சாப்பிட்டாலோ, ஊறுகாயைப் பானமாக் கரைத்துக் குடித்தாலோ சிறிது நேரத்தில் வாந்தி நிற்கும்.
2. ஏலம் 2 கிராம், சீரகம் 4 கிராம் இரண்டையும் சேர்த்து 200 மி. லீ நீர்விட்டு கொதிக்க வைத்து 50- மி. லீ. ஆக வற்றவைத்து வடிகட்டி தினசரி மூன்று வேளை உணவிற்கு முன் 30 மி. லீ வீதம் குடிக்கக் கொடுக்கவும். வாந்தி நிற்கும், சமிபாட்டைத் தூண்டிவிடும்.

### தசை, மூட்டுக்களில் வலி

1. புளியை உப்புக் கலந்து நீரில் ஊற வைத்து நன்கு பிசைந்து வடிகட்டி அடுப்பில் ஏற்றி குழம்புப் பதம் வரும்வரை காய்ச்சி சிறு சூட்டுடன் தசை வலி, மூட்டு வலி உள்ள இடத்தில் பூச வலி நிற்கும்.
2. கரிய பவளத்தை வெந்நீரில் கரைத்து கொதிக்க வைத்து குழம்புப் பதம் வரும்வரை காய்ச்சி பின் அடுப்பிலிருந்து இறக்கி சுத்தமான வெள்ளைத்துணியில் தடவி மெல்லிய சூட்டில் வேதனை வீக்கம் உள்ள இடத்தில் பற்றிடவும்.

### தோலில் ஏற்படும் தடிப்புக்களுக்கும் சிறு பருக்களுக்கும்

1. கடலை மாவு, பாசிப் பயறு மாவு, சந்தனப்பவுடர் இவற்றை கலந்து அதிலிருந்து 3 மேசைக்கரண்டி அளவு எடுத்து ஒரு பாத்திரத்தில் இட்டு நீரில் கரைத்து கூழாக்கி உடம்பு முழுவதும் தேய்த்துக் குளிக்க தோல் தடிப்பு, சிறு பருக்கள் மறையும்.
2. வெண்காரத்தைப் பொடி செய்து தேங்காய் எண்ணெயில் கலந்து மேற்பூச்சாகப் பூசவும்.
3. ஊசித்தகரை இலைகளை அல்லது வேர்களை எலுமிச்சம் பழச்சாறு விட்டு மெழுகுபோல் அரைத்து தோல் தடித்த இடங்களிலும் பருக்களிலும் பூசவும்.

இந்நோயினால் உயிருக்கு ஆபத்து இல்லை எனினும் இதற்கு இன்னும் சரியான மருந்துகள் கண்டுபிடிக்கப்படவில்லை. குருதிச் சுற்றோட்டத் தொகுதியில் பாதிப்பை ஏற்படுத்தினாலும், ஒழுங்கான மருத்துவ சிகிச்சை மேற்கொள்ளாவிடினும் ஓய்வு எடுக்காவிடினும் இந்நோய் மீண்டும் மீண்டும் ஏற்பட வாய்ப்புண்டு

### சித்த ஆயுர்வேத மருத்துவம்

அரசாங்க இலவச மாவட்ட ஆயுர்வேத வைத்தியசாலைகளிலோ, அரசாங்க இலவச மத்திய ஆயுர்வேத மருந்தகங்களிலோ, அரசாங்க இலவச ஆயுர்வேத மருத்துவமனைகளிலோ, ஆயுர்வேத மருந்துகள் விற்பனை செய்யும் நிலையங்களிலோ - சித்த ஆயுர்வேத மருந்துகள் கிடைக்கின்றன. இத்தனைக்கொண்டு மேற்கூறிய இந்நோயின் குணங்குறிகளுக்கு ஏற்ப சிகிச்சையை அளிக்க முடியும்.

### திடீரென ஏற்படும் காய்ச்சலிற்கு

1. பிரம்மானந்த பைரவம் மாத்திரை காலை - 02 மதியம் 02 இரவு 02 உணவிற்குப் பின் சுக்குக் கசாயத்தில் விழுங்கவும்.
2. நிலவேம்புக்குடிநீர் 30 மி. லீ. தினசரி மூன்று வேளை உணவுக்கு முன் குடிக்கவும்.
3. இரச செந்தூரம் 50-100 மி. கி. மூன்று வேளை உணவிற்குப் பின் தேனில் குழைத்துச் சாப்பிடவும்.

### தலைவலிக்கு

1. நீர்க்கோவை மாத்திரை. இதில் இரண்டு மாத்திரை எடுத்து இடித்துப் பொடி பண்ணி தாய்ப்பால் அல்லது கொதிநீர் அல்லது எலுமிச்சம் பழச்சாறு சிறிதளவு விட்டுப் பசையாக்கி நெற்றிக்கு மேலும் மூக்கின் மேலும் பூசவும்.
2. சந்திரகலாலேபம் - சிறிதளவு எடுத்து நெற்றியின் மேலும் மூக்கின் மேலும் பூசவும்.

### உடல் அசதி, சோர்வுக்கு

1. அமுக்கிராச் சூரணம் அல்லது பஞ்ச தீபாக்கினிச் சூரணம் 500 மி. கி. மூன்று வேளை உணவிற்குப்பின் தேனில் குழைத்துச் சாப்பிடவும்.
2. அஸ்வகெந்தி லேகியம் அல்லது பஞ்சதீபாக்கினி லேகியம் 5 கி. இரண்டு வேளை உணவிற்குப்பின் சாப்பிடவும். பால் குடிக்கவும்.

### குமட்டல் அல்லது வாந்திக்கு

1. பாவன கடுக்காய் மூன்று வேளை உணவிற்குமுன் சாப்பிடவும்.
2. ஜாதி ஜம்பிரக்குழம்பு சிறிதளவு எடுத்து நாக்கில் தடவவும்.
3. கேசரி லேகியம் 5 கிராம் இரண்டு வேளை உணவிற்குப் பின் சாப்பிடவும்.
4. மயிலிறகாதிச் சூரணம் 500 மி. கி. மூன்று வேளை உணவிற்குப் பின் தேனில் குழைத்துச் சாப்பிடவும்.

(தொடர்ச்சி அடுத்த இதழில்)

## பிழை திருத்தம்

கடந்த மே மாத மன்னா பத்திரிகையின் 17ம் பக்கத்தில் பிரசுரிக்கப்பட்ட மருத்துவப் பொழிவுப் பகுதியில் "***சித்த மருத்துவ ரீதியில் குழந்தையின் நலமும், அன்னையின் கடமையும்***" என்ற தலைப்பிலான கட்டுரையின் 5ம் பந்தியின் 7ம் வரியில் "ஒன்று தொடக்கம் இரண்டு மாதங்கள்" என்பதை "ஒன்று தொடக்கம் ஆறு மாதங்கள்" என்றும் 8ம் வரியில் "இரண்டு மாதத்திலிருந்து ஒரு வயது வரை" என்பதை "ஏழு மாதத்திலிருந்து ஒரு வயது வரை" என்றும் திருத்தி வாசிக்கும்படி தயவுடன் கேட்டுக்கொள்கின்றேன். தவறுக்கு மன்னிப்புக் கோருகின்றேன். - *கட்டுரையாளர்*

# இயேசுவின் பார்வையில் மறைபரப்புப் பணி

14ம் பக்கத்தொடர்ச்சி......

திருத்தூதர்கள்தாம் அறுவடையின் வேலையாள்கள். அவர்களின் பணி இறுதிக்கால மற்றும் உலகளாவிய பணி. எல்லா இனத்தாரையும் இறுதித்தீர்ப்புக்குக் கூட்டிச்சேர்க்கும் பணி அவர்களுடையது. அவர்களுடைய கலிலேயப் பணியின் குறுகிய எல்லை தற்காலிகமானதே. அடிப்படையில் திருத்தூதர்பணி என்பது உலகைப்போல் விரிவானது. இயேசு பிற இனத்தாருக்கெனவே திருத்தூதர்பணியை ஏற்படுத்தினார். இக்கருத்து இயேசுவின் விண்ணேற்றத்திற்குப் பிறகு திருத்தூதர்கள் நடந்துகொண்ட விதத்தை விளக்குகின்றது. பிற இனத்தாருக்கான மறைபரப்புப் பணி குறித்து அவர்களுக்குள் கருத்து வேற்றுமை இருந்தது. ஆனால் பிற இனத்தாரிடையே மறைபரப்புதல் வேண்டும் என்பதில் அவர்களிடையே மாற்றுக்கருத்து இருக்கவில்லை. தங்களை ஆண்டவர் திருத்தூதர்பணிக்குத் தேர்ந்துக்கொண்டபோது எல்லா மக்களையும் இறுதிநாளில் இஸ்ராயேலுடன் கூட்டிச்சேர்க்கும் நோக்கமே அவரிடம் இருந்தது என உணர்ந்திருந்தனர். பிலிப்பு சமாரியாவில் போதித்தது (திப 8:4-8), கொர்னேலியுவுக்குத் திருமுழுக்கு அளிப்பதற்கு முன்பே (திப 10) அந்தியோக்கியாவில் திருச்சபை நிறுவப்பட்டது (திப 11:19-20) ஆகியவை இதனை உறுதிப்படுத்துகின்றன.

எருசலேம் திருச்சங்கத்திலும் (திப 15) விருத்தசேதனம் முதலியன வேண்டுமா வேண்டாமா என்பது குறித்தே விவாதம் இருந்தது. பிற இனத்தாரிடையே நற்செய்தி பரப்புதல் குறித்த கொள்கையை யாரும் எதிர்க்கவில்லை. நாடுகளுக்கிடையே நற்செய்தியை அறிவித்தபோது தங்களுக்கு ஆண்டவர் கொடுத்த கடமையை நிறைவேற்றுவதாகவே திருத்தூதர்கள் உணர்ந்திருந்தனர். தேவையான வேலையாள்களைத் தமது அறுவடைக்கு அனுப்பும்படி இயேசு தந்தையிடம் மன்றாடியதற்குத் தரப்பட்ட தெய்வீகப் பதிலாக அவர்களின் பதில் இருந்தது. மத். 9:37-38இல் வரும் அறுவடை பற்றிய உவமையுடன் மத். 13:24-30இல் வரும் களைகள் பற்றிய உவமையையும் அதன் விளக்கமாக வரும் 13:36-43 பகுதியையும் இணைத்துப் புதியதொரு கருத்தைத் தருகிறார் லூசியன் லெக்ராண்ட் (Lucien Legrand). களைகள் உவமையில் “அறுவடை செய்வோர் வானதூதர்” எனச் சொல்லப்பட்டுள்ளது. தொடக்கத்திருச்சபையின் வெளிப்பாட்டு இலக்கியத்தில் அறுவடை செய்யும் வானதூதர் பற்றிய கருத்து பரவிக் கிடக்கிறது. அவர்கள் தீர்ப்புக்காக நாடுகளைக் கூட்டிச் சேர்ப்பவர்கள் (திவே 14:5-16 = மத் 24:14: மத் 25:32, மாற் 13:27). இயேசு திருத்தூதர்களை நாடுகளை அறுவடை செய்வோராக நியமித்ததில் அவர்களின் வானதூதருக்குரிய பணி பொதிந்துள்ளது. நற்செய்தி அறிவிக்கும் திருத்தூதர்கள் புதிய உடன்படிக்கையின் வானதூதர்கள். ஆயினும் அவர்கள் இறுதிக்கால அழிவை அறிவிக்கும் வானதூதர்களல்லர். மாறாக அவர்கள் நாடுகளுக்கு நற்செய்தியை அறிவித்து அவர்கள் மனந்திரும்ப அழைப்பு விடுக்கும் அமைதியின் வானதூதர்கள். திருமுழுக்கு யோவானைப்போல திருத்தூதர்கள் இறையாட்சியின் வருகை குறித்து அறிவிக்கும் வானதூதர்கள். இயேசுவில் தொடங்கிய இறுதிக்காலம் திருத்தூதர்கள் எனும் இவ்வானதூதர்களால் இயேசுவின் இரண்டாம் வருகையில் நிறைவேற்றம் அடையும். தொடக்கத் திருச்சபையும் வானதூதரின் நற்செய்தி அறிவிப்பையும் திருத்தூதர்களின் பணியையும் இணைத்தே பார்த்துள்ளது (காண். 1 பேதுரு 1:12, கலா. 1:8, எபி. 3:1).

## மறைபரப்புக்கான கட்டளை

மேற்கண்ட கருத்துக்களை உள்வாங்கி மறைபரப்புக்கான இயேசுவின் கட்டளைகளைப் புரிந்துகொள்ள வேண்டும்.

(1) தற்காலிகக் கட்டளை

இயேசு பன்னிருவரை அனுப்பிய நிகழ்வில் (மத்.10:5-15; மாற். 6:7-13; லூக். 9:1-6) பிற இனத்தாரிடமும் சமாரியரிடமும் செல்ல வேண்டாம் எனக்கட்டளையிடுகின்றார். (மத் 10: 5-6) இது இஸ்ராயேலின் சலுகைகளை முன்னிட்டுத் தரப்பட்ட தற்காலிகக் கட்டளையே. இயேசுவின் பணி வாழ்வில் காணப்பட்ட குறுகிய எல்லைகளே இங்கும் வெளிப்படுத்தப்படுகின்றன. ஆயினும் பன்னிருவரின் இப்பணி பரவலான ஒரு பணியைத் திறந்து வைக்கிறது. தீய ஆவிகள் மற்றும் நோய்கள்மேல் இயேசுவுக்கு இருந்த அதே வல்லமை திருத்தூதர்களுக்கும் இருக்கின்றது. (மத். 10:1) “விண்ணரசு நெருங்கி வந்துவிட்டது” என அவர்களும் பறைசாற்ற வேண்டும் (மத்10:7, லூக்கா 10:9; காண் மத் 4:17). இயேசுவின் பணிபோல இப்பணியும் கலிலேயாவைத் தாண்டிச் செல்லும்; ஆயினும் தொடக்கத்தில் இப்பணி வரையறைக்குள் அடங்கியுள்ளது. மத் 10:17லிருந்து இப்பணியின் எல்லைகள் விரிவடைவதைக் காண்கின்றோம்.

(2) நிரந்தரக் கட்டளை

இக்கட்டளை மத். 28:18-20; மாற். 16: 15-20; லூக். 24:46-49; யோவா. 20:21-23 ஆகிய பகுதிகளில் தரப்பட்டுள்ளது. இவற்றுள் ஒத்தமை நற்செய்தி நூல்கள் ஒரே பாணியைக் கொண்டுள்ளன. மொத்தத்தில் ஒரு கட்டளை, நற்செய்தி முழக்கமிடுதல் (மத்தேயுவில் கற்பித்தல்), சீடராக்குதல், எல்லா மக்களினத்தாருக்கும் நற்செய்தி அறிவித்தல் (மாற்கில் படைப்பிற்கெல்லாம்) பாவமன்னிப்பு, திருமுழுக்கு, நான் உங்களோடிருக்கிறேன் எனும் உறுதிப்பாடு ஆகியன உள்ளன. ஒவ்வொரு நற்செய்தியாளரும் தன் நூலில் எழுதிய கருத்துக்களின் கொடுமுடியாகத் தனித்தன்மையுடன் இப்பகுதியை எழுதியுள்ளனர். ஆயினும் நான்கு நற்செய்தியாளர்களுமே இயேசுவின் உயிர்ப்பின் ஒளியில் இம்மறைபரப்புக்கான கட்டளையை விவரித்துள்ளனர். அவ்வகையில் மறைபரப்புப்பணி என்பது இயேசுவின் உயிர்ப்பின் பயன்பாடு. அது உயிர்த்த கிறிஸ்துவுக்குக் கொடுக்கப்பட்ட வல்லமையைச் செயல்படுத்தல். அது உயிர்ப்பில் அருளப்பட்ட தூய ஆவியாரின் செயலூக்கம். திருத்தூதர்களின் மறைபரப்புப்பணி இயேசுவின் மறைபரப்புப்பணியே. அந்தப்பணி இயேசுவின் உயிர்ப்பினால் அதிகாரபூர்வமானதாகவும், உலகளாவியதாகவும், நிரந்தரமானதாகவும் தூய ஆவியைப்பெற்று வல்லமை கொண்டதாகவும் மாற்றம் பெற்றது. இவ்வாறு அது தன் இறுதிக்கால இயல் நோக்கத்தை நிறைவேற்றும். எனவே நான்கு நற்செய்தியாளர்களும் இயேசுவின் உயிர்ப்பை மறைபரப்புப் பணியாகவே பார்க்கின்றனர்.

மத்தேயு நற்செய்தியில் தரப்படும் கட்டளை (மத் 28-18-20) திருவழிபாட்டில் அதிகம் பயன்படுத்தப்படுவது. மறைபரப்பாளர் ‘போய்’ (மாற்கில் ‘சென்று’) ‘கற்பித்து’ ‘திருமுழுக்கு அளித்து’ ‘சீடர்களை’ உருவாக்க வேண்டும். யூத ஞானிகள் சீடர்களை உருவாக்கும்போது வழக்கமான அறிவுரை கொடுப்பதை இப்பகுதி நினைவூட்டுகின்றது. மத்தேயு நற்செய்தியின் நூலின் தொடர் கருத்து அடிப்படையில் இது இயேசு உருவாக்கியதுபோல் சீடர்களை உருவாக்குவதாகும். அதன் மூலம் இயேசுவின் இறையாட்சியை முழக்கமிடுதல் அதனை வெளிப்படுத்தல் ஆகிய பணியைச் செய்தல் ஆகும். ‘போய்’ என்பதில் யூத எல்லைகளைக் கடந்து செல்லல் பொருளாகிறது. ‘மக்களினத்தார்’ என்பது பிற இனத்தாரை மட்டும் குறிப்பதன்று, யூதர் உட்பட எல்லா இன மக்களையும் குறிப்பது. அந்த வகையில் இது யூத மறைபரப்புதலின் தொடர்ச்சியாகும். இது யூத மறைபரப்புதலுக்கு மாற்றானதன்று. மத்தேயு நற்செய்தியில் வரும் மறைபரப்புப் பணி பற்றிய கட்டளை திருச்சபையியல் தன்மையைக் கொண்டுள்ளது (Ecclesiological Perspectives).

மறைபரப்புப் பணியிலிருந்து திருச்சபையைப் பிரித்துப் பார்க்க இயலாது. மறைபரப்பின் நோக்கம் சீடர் சமூகத்தை உருவாக்குதல் ஆகும். இது கிறிஸ்தியல் தன்மை (Christololgical dimension) கொண்டது. உயிர்த்த கிறிஸ்துவின் தொடர் இருப்பைச் சுட்டுவது. மறைபரப்புப்பணி ஒழுக்கம் சார்ந்த குணங்களையும் (Ethical dimensions) கொண்டுள்ளது. அதாவது அது மலைப்பொழிவின் விழுமியங்களைக் கொண்டுள்ளது. இறுதியாக அது தூய திருத்துவ தன்மையையும் (Trinitarian dimensions) கொண்டுள்ளது. (“தந்தை, மகன், தூய ஆவியார் பெயரால் திருமுழுக்குக் கொடுங்கள்” – மத் 28:19).

## முடிவுரை

இயேசுவின் பார்வையில் மறைபரப்புப்பணி மேற்கண்ட தன்மையில் உள்ளது. இங்கு அதன் தளங்களை அலசியுள்ளோம். மறைபரப்புப்பணி முதலில் யூதருக்கும் பின்னர் எல்லாருக்குமானது. அது இறுதிக்கால இயலுடன் இயைந்தது. அது உயிர்ப்பின் ஒளியில் பொருள் பெறுகின்றது. அது இறையாட்சியைப் போதிப்பது மற்றும் இறையாட்சிக்கான சீடர் சமூகத்தை உருவாக்குவது. அதன் தூதுவர்கள் வானதூதர்கள் போன்றோர்.

தனிமனித, சமுதாய, முழு விடுதலையை உள்ளடக்கியதே இயேசு கொண்டுவந்த நற்செய்தி. இந்த நற்செய்தியை அறிவிப்பவர்கள் அனைத்தையும் விட்டு விட்டு இயேசுவைப் பின்பற்றுபவர்கள் (லூக் 5:11). தம்மோடு இருக்கவும் நற்செய்தியைப் பறைசாற்ற அனுப்பப்படவும் திருத்தூதர் என்று பெயரிட்டு அழைக்கப்பட்டவர்கள் அவர்கள் (மாற் 3:14-15). திருமுழுக்குப் பெற்ற யாவருமே நற்செய்தி அறிவிக்கும் திருத்தூதர்கள்தான். அவர்கள் ஆற்றும் நற்செய்திப்பணி இயேசுவின் பார்வையில் அமைந்த முழு விடுதலைக்கான பணியாக, சாதி, மொழி, நாடு, இனம் என்னும் எல்லைகளைக் கடந்த உண்மையான மறைபரப்புப்பணியாக அமைய வேண்டும்.

## நீங்காத நினைவுகள்

### 31ம் நாள் நினைவஞ்சலி

மலர்வு 25 09 1958



உதிர்வு 02 05 2009

### பொ. அலோசியஸ் எட்வட் குரூஸ்

(சிலுவைநகர், தலைமன்னார்கிராமம்)

“உயிர்ப்பும் உயிரும் நானே. என்னில் விசுவாசம் கொள்பவன் இறப்பினும் வாழ்வான்”

ஆறாத் துயரில் எம்மை ஆழ்த்திவிட்டுப்போன
என் அன்புக் கணவரே, எங்கள் அன்புத் தந்தையே,
தாங்கமுடியவில்லை உம் பிரிவுத் துயரினை!
கண் இமைக்கும் நொடிப்பொழுதில் எல்லாம் நிகழ்ந்துவிட்டன.
ஈரேழு ஜென்மங்கள் சென்றாலும் உம்மை நாங்கள் மறவோம்.
என்றும் உங்களுடைய ஆன்மா இறைவனில் சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

*இவரின் பிரிவால் துயருறும்,*
*அன்பு மனைவி, பிள்ளைகள், அம்மா, சகோதரர்கள், பேரப்பிள்ளைகள் உற்றார், உறவினர்கள்*

## நீங்காத நினைவுகள்

### 31ம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

மலர்வு 21 03 1923



உதிர்வு 22 04 2009

### ஓய்வுபெற்ற அதிபர் X. F. பங்கிராஸ் பெர்னான்டஸ்

BA (Lond), B.Sc (Lond)L.L.B)

எமது தந்தை இறைபதம் அடைந்தபோது எமது துயரத்தில் பங்குகொண்டவர்கள், அன்னாரின் இறுதிக்கிரிகை நிகழ்வில் கலந்துகொண்டவர்கள், 27.04.2009ல் அன்னாரின் ஆன்ம சாந்திக்கான அன்னதான நிகழ்வில் கலந்துகொண்டவர்கள், உள்நாட்டிலும், வெளிநாட்டிலும் இருந்து அனுதாபச் செய்திகளைப் பகிர்ந்துகொண்டவர்கள், மேற்படி சகல நிகழ்விலும் எம்மோடிருந்து பல வகையிலும் உதவிய அனைத்து நல் உள்ளங்களுக்கும் எமது குடும்பத்தினரின் மனமார்ந்த நன்றிகள்.

மேலும் இவரை அறிந்தவர்களும், கல்வி கற்ற மாணவர்களும் இவர் பற்றிய ஆக்கங்களை http://www.ilasting.com/pancras.php என்ற இணைய தளத்திற்கு அனுப்பிவைக்கலாம்.

இவரின் ஆன்ம சாந்திக்காக பேசாலை புனித வெற்றிநாயகி ஆலயத்தில் வைகாசி 5ம் 13ம் 21ம் திகதிகளில் காலை 6.00 மணிக்கு இரங்கல் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்படும்.

*தகவல் - குடும்பத்தினர் “ரெஜினா பவன்”, பேசாலை*

### 1ம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு 18 06 1970



உதிர்வு 06 05 2008

இறை பாதமடைந்த

### அமரர் திரு. பாலசிங்கம் ரகுபாலன்

என்றென்றும் எம் தங்கையின் வாழ்க்கைத் துணையாய் இருப்பேனென்று கரம் பிடித்த நாயகனே! பாதி வழியில் எமது தங்கையைப் பிரிந்து செல்ல உமதுள்ளம் இசைந்ததுவோ? இந்தச் சின்ன வயதினிலே உம்மைக் காலன் அழைத்தனனோ?

பாசத்தின் உறைவிடமாய் மிளிர்ந்தவரே, எம்மை எல்லாம் விட்டகன்று செல்வதற்கு எப்படித்தான் இசைந்தீரோ? துயர் தாங்க முடியாமல் அழுகின்றோம். உம் பசுமையான நினைவுகள் பல ஆண்டு சென்றாலும் நிலைத்து நிற்கும் எமது உள்ளங்களில்!!! உமக்காக இறைவனை வேண்டி,

*உமது பிரிவால் துயருறும்*
*தாய், மனைவி, சகோதரர்கள் மருமகள்மார், மாமா, மாமி, மைத்துனர் குடும்பம், மைத்துனி குடும்பம்.*

### 2ம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு 25 03 1983



உதிர்வு 17 06 2007

### அ. நேசராஜா பெரேரா

(வசந்தன்) நொச்சிக்குளம்

அன்பின் மகனே, சகோதரனே எம்மைப் பிரிந்து ஈர் ஆண்டுகள் சென்றாலும் எம் மனதில் உன் நினைவு நீங்காதப்பா! பெயரைப் போன்றே நேசத்தின் இருப்பிடமாய் மகிழ்வோடு மானிடனாய் நின்றாய். எம் நடுவில் கடவுள் இட்ட கட்டளையோ காலன் செய்த நிந்தனையோ எமக்கெல்லாம் விடை தந்து இறைவனிடம் சென்றாயோ? ஆயனைப் பிரிந்த மந்தைபோல அண்ணன் தம்பியினை விட்டுச் சென்றதேனோ? வையம் தனைவிட்டு வான் வீட்டில் இறைவனிடம் மையம் கொள்ளச் சென்றாயோ? இன்பமுடன் உன் ஆத்மா சாந்திபெற இறைவனிடம் வேண்டுகின்றோம்.

*என்றும் உன் நினைவுடன்,*
*பெற்றோர், சகோதரர்கள், உறவினர்கள், நண்பர்கள்*

# விவிலியக் குறுக்கெழுத்துப்போட்டி இல.86 எரேமியா1-7

உங்கள் விடைகளை 15.07.2009க்கு முன் எமக்குக் கிடைக்கக்கூடியவாறு அனுப்பிவைக்கவும். சரியான விடைகளை எழுதிய மூன்று அதிஸ்ரசாலிகளுக்கு பரிசுத்தொகைகள் அனுப்பிவைக்கப்படும். பாராட்டுப்பெறும் 50 பேருடைய பெயர் விபரங்கள் மன்னாவில் பிரசுரிக்கப்படும். **(பதிப்பாசிரியர்)**

| | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | 01 | | | | | | 02 |
| 03 | | | | 04 | | | | | ✶ | |
| | 05 | | | | 06 | | | | | |
| | | 07 | | | | | | 08 | | |
| | | | ✶ | 09 | | | | | | |
| | | | | | | 10 | ✶ | | 11 | |
| | 12 | | | | | | | 13 | | |
| | | | 14 | | ✶ | | | | | 15 |
| | | | | | 16 | | | 17 | | |
| | | 18 | | | | 19 | | | | |
| 20 | | | | 21 | ✶ | | | | 22 | 23 |

### இடமிருந்து வலம்

1. ஏனெனில் உன்னை விடுவிக்க நான் .................. இருக்கின்றேன்.
4. ஆ! என் தலைவராகிய ஆண்டவரே நீர் இம்மக்களையும் எருசலேமையும் முற்றிலும் ............................ விட்டீர்.
5. உங்கள் ..................... கள் எனக்கு ஏற்புடையவை அல்ல.
6. கணவனும் மனைவியும் ....................... வயது நிறைந்தோரும் பிடிபடுவர்.
7. இம்மக்களின் சடலங்கள் ......................... பறவைகளுக்கும் நிலத்து விலங்குகளுக்கும் இரையாகும் (2ம் எழுத்து 1ம் எழுத்துக்கு முன் உள்ளது).
9. நான் கட்டளையிட்ட .............. அனைத்தையும் கடைப்பிடியுங்கள்.
13. எனினும் உன்மேல் ......................... கொள்ள அவர்களால் இயலாது (2ம் 3ம் எழுத்துக்கள் மாறியுள்ளன).
19. ஒன்றுகூடுங்கள் ............................... சூழ் நகர்களுக்குச் சென்றிடுவோம்.
20. மாசற்ற வறியவரின் இரத்தக்கறை உன் மேலாடை ........................... களில் காணப்படுகின்றது.

### மேலிருந்து கீழ்

2. சீயோனுக்கு நேராகக் ..................... உயர்த்திப் பிடியுங்கள்.
3. என் இதயத்திற்கேற்ற ............. களை உங்களுக்குக் கொடுப்பேன்.
5. உங்களின் மற்றைய பலிகளும் ................ உவகை தருவதில்லை.
7. இதோ பார் என் சொற்களை உன் ................. வைத்துள்ளேன்.
8. அவர்கள் அனைவரும் ....................... வாய்ந்தவர்கள்.
12. உங்கள் .....................யும் செயல்களையும் சீர்ப்படுத்துங்கள்.
14. எருசலேமுக்கு எதிராக முற்றுகைத்தளம்......................... ங்கள்.
15. முன்னோக்கிச் செல்வதற்குப் .................... பின்னோக்கிச் சென்றார்கள்
16. பாலைநிலத்தின் மொட்டை .................... களிலிருந்து அனல் காற்று என் மக்களாகிய மக்கள்மீது வீசும்.

### வலமிருந்து இடம்

1. தாய் வயிற்றில் உன்னை நான் ............................. முன்பே அறிந்திருந்தேன்.
2. நான் அவர்கள் மூதாதையருக்கு உரிமைச் சொத்தாகக் .................................நாட்டுக்கு வட நாட்டிலிருந்து ஒன்றாக வந்து சேர்வர் (2வது எழுத்து இறுதியாக உள்ளது).
4. குன்றுகளிலிருந்தும் மலைகளில் செய்யப்படும் அமளிகளி லிருந்தும் கிடைப்பது.................................
8. இது என்றென்றும் உள்ள ஒரு ...........................................
10. செழிப்பான நாட்டுக்கு அதன் .........................................யும் நலன்களையும் நுகருமாறு நான் உங்களை அழைத்து வந்தேன்.
13. உங்கள் தீச்செயல்களை முன்னிட்டு என் சீற்றம் நெருப்பென .............................ப் பற்றியெரியும்.
15. வாளையும் ...................... யும் நாம் காணப்போவதில்லை.
17. என் வாக்கைச் செயலாக்க ......................... விழிப்பாயிருப்பேன். (3வது எழுத்து 1வது எழுத்துக்கு முன் உள்ளது)
23. உங்கள் ............ உங்களுக்கு நன்மை வராமலிருக்கச் செய்தன.

### கீழிருந்து மேல்

8. நான் சொல்லிவிட்டேன் இதுபற்றி ...................... மாட்டேன்.
11. சேபா நாட்டுத் ..................... தூரத்து நாட்டு நறுமண நாணலும் எனக்கு எதற்கு?
15. ஆண்டவரே உம் கண்கள் ............... அன்றோ நோக்குகின்றன.
18. மகள் சீயோனை வளமான .................தரைக்கு ஒப்பிடுவேன்.
19 ..................... கள் வளம்பெறும் வகையில் அவர்கள் வழக்கை விசாரிப்பதில்லை.
20. ஏனெனில் உன்னை...................... நான் உன்னோடு இருக்கிறேன்.
21. இஸ்ராயேல் வீட்டாரும் யூதா........... எனக்கு எதிராக நம்பிக்கைத் துரோகம் செய்துவிட்டனர். (2வது எழுத்து இறுதியாக உள்ளது).
22. நைல்நதி நீரைக்குடிக்க எகிப்துக்குச் செல்வதால் உனக்கு ......................... பயன் என்ன?

## இறைவாக்கைப்...... 15ம் பக்கத் தொடர்

### 6. முடிவு எடுத்தல் (Deliberatio)

ஆழ்நிலைத் தியானத்தைத் தொடர்ந்து உள்ளார்ந்த நிலையில் அனுபவமும் கடவுளுக்காக முடிவெடுத்தலுமான படிநிலை தொடங்கிவிடுகிறது. இங்கே நாம் கடவுளுக்கு உகந்தவற்றைத் தேர்ந்து, தெளிந்து அதன்படி வாழச் செய்ய முடிவுகளை எடுக்கிறோம். புனித பவுல் செசாரியா நகரில் பிலிப்பின் இல்லத்தில் தங்கியிருந்தபோது இப்படி ஒரு தெளிவான முடிவு எடுப்பதை திருத்தூதர் பணிகள் நூலில் படிக்கின்றோம் (காண்க. 21:8-14). இங்கே பிலிப்பு, இறைவாக்கு உரைக்கும் அவரது நான்கு பெண் மக்கள், இறைவாக்கினர் அகபு மற்றும் பவுலோடு இணைந்து உள்ள பணியாளர்கள் ஆகியோர் பவுல் எருசலேமுக்குச் சென்றால் துன்பப்படப்போவதாக காட்சி கண்டு இறைவாக்கு உரைக்கிறார்கள். தூய ஆவியார்தாமே அந்த இறைவாக்கை முன்வைக்கிறார். இதைக்கேட்ட அனைவரும் அழுது கெஞ்சியும் பவுலை எருசலேமுக்குப் போகவேண்டாம் என்று கேட்டுக்கொள்கிறார்கள். ஆனால் பவுல் அவர்களின் விருப்பத்திற்கு மாறாக நடக்கிறார். இங்கே இப்பணியாளர்கள் கண்டுபிடித்த இறைவாக்கு சரியானது. ஆனால் அவர்கள் எடுத்த முடிவு தவறானது என்று பவுல் சுட்டிக்காட்டுகிறார். நமது நன்மைக்காக அல்ல, கடவுளின் திருவுளத்தின்படி முடிவு எடுக்கப்படல் வேண்டும் என்பதைப் பவுல் நிரூபிக்கின்றார்.

### 8. செயல்படுத்தல் (Actio)

செயல்படுத்தல் என்பது அருள்வாக்கு வாசிப்புப் பயணத்தின் கனிதரும் கடைசிப் படிநிலையாகும். வாசிப்பு என்னும் முதல் படிநிலையும் செயல்படுத்தல் என்னும் கடைசிப் படிநிலையும் இரண்டு இணைக்கோடுகள் அல்ல. நாம் விவிலியத்தை வாசிப்பது நாம் ஏற்கனவே செய்துகொண்ட தீர்மானத்தை உறுதிப்படுத்தி முன்னெடுத்துச் செல்லுவதற்காக அல்ல. மாறாக வாசிப்பதும் சிந்திப்பதும் சரியான முடிவுகளைக் கண்டுபிடிப்பதற்காகவும் ஆவியாரின் துணையால் ஆறுதல் பெற்று அவற்றிற்கு செயல் வடிவம் வழங்குவதற்கும் ஆகும்.

இந்த எட்டுப் படிநிலைகளிலும் பயணம் செய்து இறை வார்த்தையில் இன்றைய வாழ்வுக்கான இறைவனின் செய்தியைக் கண்டுபிடித்து வளம் பெறுவோமாக. இறைவாக்கைப் படிப்போம் நிறைவாழ்வைப் பகிர்வோம். •


## மன்னா சந்தா விபரம்

**உள்நாடு : ரூபா 700.00** (இலங்கை ரூபா)
**வெளிநாடு : ரூபா 3000.00** (இலங்கை ரூபா)
சந்தாப்பணத்தை மன்னா பணியகத்தில் நேரடியாகவோ அல்லது காசுக்கட்டளை மூலமாகவோ அல்லது காசோலை மூலமாகவோ செலுத்தலாம்.
**காசோலை மூலம் செலுத்துவதாயின்;**
**வங்கியின் பெயர் :**
Hatton National Bank Ltd. (Mannar Branch)
**பணம் பெறுபவரின் பெயர்:**The Editor - 'MANNA'
**வங்கிக் கணக்கு இலக்கம்:** S/A No. 02 -1678001-5


## திருத்தூதர் பவுலின் ..... 16ம் பக்கத் தொடர்

*இ. சமத்துவ சமுதாயம்:* ஆணுக்கு ஒரு நீதி பெண்ணுக்கு ஒரு நீதி என்ற பாகுபாட்டை அழிக்கும்போதே மொழிவாரியாக, கிரேக்கர் - யூதர் என்றும், உரிமை வாரியாக அடிமை – குடிமகன் என்றும் பாகுபாடு கிறிஸ்தவத்தில் இல்லை எனச் சாட்சியம் பகர்கின்றார்.

*ஈ. சமநிலை (பொருளாதாரம்) உருவாக்கம்:*
2 கொரி 9-10இல் கூறப்படும் நன்கொடை திரட்டும் திட்டம் செல்வர் - ஏழை என்று இல்லாமல் "சமநிலை" உருவாக்கத்திற்கு வித்திடுகிறது. கட்டாயப்படுத்தப்படாமல் முகமலர்ச்சியோடு கொடுத்து வள்ளன்மையோடு வழங்கி திருத்தொண்டு செய்தது சமூக சமநிலையை உருவாக்குவதாகும். விடுதலைப் பயணத்தின் போது நிகழ்ந்த சமநிலை வாழ்வையும், சம சத்துணவையும் நினைவூட்டிச் செயல்படுத்துவதாகும் (2 கொரி 8-15).

### 10. கூடாரம் செய்யும் தொழில்

பிறர் கையைப் பார்த்து வாழாமல் தாமே உழைத்து ஊதியம் தேடி நற்செய்திப் பணி ஆற்ற முடியும் என்று பவுல் அடியார் உலகுக்கு உணர்த்த விரும்பினார். நற்செய்தி வழியாய் ஊதியம் பெற உரிமை உண்டு என்றாலும் அவரே கூடாரத்தொழில் செய்து வாழ்வு நடத்தும் சுமையையும் ஒரு சுகம் எனத் தாங்கிக்கொண்டார். (2 தெச 3:8, 1கொரி 9:23, 2 கொரி 12:14 திப 20:34). "உழைக்கும் குருக்கள்" என்ற இயக்கம் இந்தச் சிந்தனையில் இருந்து உருவாகியது என்பது நாம் அறிந்ததே.

இவ்வாறாகத் தூய பவுலடியாரின் சான்று வாழ்வு இன்றைய 21ஆம் நூற்றாண்டு நற்செய்தியாளருக்கும் சிறந்த எடுத்துக்காட்டாக அமைகிறது என்பதில் எள்ளளவும் ஐயமில்லை (வாசிக்கவும் 2 கொரி 6: 4-10).

## ஆபிரிக்கப் பயணம் ..... 7ம் பக்கத் தொடர்

"ஒப்புரவு, நீதி மற்றும் அமைதிக்கான பணியில் ஆபிரிக்காவில் திருச்சபை" என்ற தலைப்பில் இந்த முக்கியமான கூட்டத்தை நடத்துவதற்குத் திருச்சபை தயாரித்து வரும் இவ்வேளையில், இக்கூட்டம், இந்தப் பெரிய கண்டத்தின் அன்பு மக்கள் மத்தியில் அபரிமிதமான பலன்களைக் கொண்டுவருமாறு என்னோடு சேர்ந்து நீங்கள் அனைவரும் செபிக்குமாறு கேட்கிறேன்.

மேலும் ஆபிரிக்க மக்களின் மகிழ்ச்சியான தோற்றமும் புனிதத்துவம் பற்றிய உணர்வும் தன்னை மிகவும் கவர்ந்ததாகவும் திருத்தந்தை கூறினார்.

முதலில், ஆபிரிக்க மக்களின் முகங்களில் காணப்பட்ட இறைக்குடும்பத்தின் அங்கம் என்ற மகிழ்வான உணர்வு தன்னை மிகவும் கவர்ந்ததாகக்கூறிய அவர், நமது பெருமளவான சகோதர சகோதரிகளுடன் விசுவாசம் நிறைந்த கொண்டாட்டங்களைப் பகிர்ந்துகொள்ளும் வாய்ப்புக் கிடைத்ததற்காக இறைவனுக்கு நன்றி கூறுவதாகவும் தெரிவித்தார். அடுத்து, திருவழிபாட்டு நிகழ்வுகளில் காணப்பட்ட புனிதம் பற்றிய உணர்வு தன்னை மிகவும் கவர்ந்ததாகக் கூறிய திருத்தந்தை, ஆபிரிக்க மக்களுக்கேயுரிய இப்பண்பு தனது இந்தப் பயணத்தின் ஒவ்வொரு நிகழ்விலும் நிறைந்திருந்ததாகவும் தெரிவித்தார். இந்தத் திருப்பயணம், ஆபிரிக்கத் திருச்சபையின் உண்மை நிலையைப் புரிந்துகொள்ள உதவியதாகவும் அவர் கூறினார்.

## விவிலியக்குறுக்கெழுத்துப் போட்டி இல. 84ல்

**சரியான விடைகளை அனுப்பியவர்களில் பரிசு பெறும் மூன்று அதிஸ்ரசாலிகள்:**

முதலாம் பரிசு:
**தி. ஸ்ரீபன்**
சாளம்பன், நானாட்டான்

இரண்டாம் பரிசு: ***ச. ஜெயந்தி மாலா***
கல்நாட்டி,
முருங்கன்.

மூன்றாம் பரிசு: ***செ. மேரியஸ் அனுசியா***
வஞ்சியன்குளம்
வங்காலை

விடைகளை எழுதி அனுப்பியவர்கள் 149 பேர்.
சரியான விடைகளை எழுதியோர் 146 பேர்.

## விவிலியக் குறுக்கெழுத்துப்போட்டி இல.84ல் சரியான விடைகளை அனுப்பியவர்களில் பாராட்டுப் பெறும் 50 அதிஸ்ரசாலிகள்

1. பீ. கஸ்தூரி, இல. 123 2/11 புதுசெட்டித்தெரு, கொழும்பு 13.
2. யூ. றொ. டிலிஷா, தரம் 2 மன்/ சாந்திபுரம் அ.த.க. பா. மன்னார்.
3. செ. றொபின்சன், மலுவராயர் கட்டையடம்பன், மடுவீதி.
4. றெ. மேரி யோசவின், கங்காணிதீவு, நானாட்டான்.
5. யேசுதாசன் தனுசியா, 23/112E குட்செற்றோட், தோணிக்கல், வவு.
6. பூபதி தாமோதரம்பிள்ளை, தபால்கந்தோர்வீதி, மன்னார்.
7. இ. சுதர்சினி (றஜினி), போயிட்டி, இளவாலை, யாழ்ப்பாணம்.
8. ம. கிறிஸ்ரினா சுதர்சினி, தி. கு. க. மடம் நானாட்டான்.
9. G. செபாணி, குழந்தையேசு புரம், மன்னார்.
10. C. T. நொறிஸ் யதுர்ஷன், பெற்றா, மன்னார்.
11. அருள்நேசன் றோசறி, தி. கு. க. மடம், நானாட்டான்.
12. எஸ். திவாரக்கா குலாஸ், 8ம் வட்டாரம், பேசாலை.
13. அ. பற்றிசியா, தரம் 12 கலை தி. கு. க. மடம் நானாட்டான்.
14. C. T. றித்திகன் வாழ்க்கைப்பெற்றான்கண்டல், அளவக்கை.
15. அகுஸ்தீன் இசைக்கியேல், யோசவ்வாஸ் நகர், தோட்டவெளி.
16. அ. ஜொறோமி தி. கு. க. மடம், நானாட்டான்.
17. இ. யேசுராஜ் (றதன்), போயிட்டி, இளவாலை, யாழ்ப்பாணம்.
18. A. யூட்றொட்றிக்கோ, இல.84, 50 வீ. திட்டம் சாந்திபுரம், மன்னார்.
19. கேதீஸ்வரன் டிலைக்சனா, தி. கு. க. மடம், நானாட்டான்.
20. D. பிரசல்லா, கார்மேல் மடம், புனித பீற்றர் இல்லம், பூண்டுலோயா.
21. சுரேந்திரன் தமிழினி, தி. கு. க. மடம், நானாட்டான்.
22. K. அமுதா, இல.120 செபஸ்ரியார் வீதி, பெற்றா, மன்னார்.
23. க. கலைவாணி, தி. கு. க. மடம், நானாட்டான்.
24. S. நித்தியா, கொன்னையன் குடியிருப்பு, தாராபுரம், மன்னார்
25. வேதநாயகம் ஜெஸ்மி யூலியற், தரம் 11, தி.கு.க. மடம், நானாட்டான்.
26. பி. அனோசன், வேளாங்கன்னி கோவில் பின்வீதி, நளவன்வாடி.
27. வி. ஆன் கிறிசோலினி, தி. கு. க. மடம், நானாட்டான்.
28. S. நிஷாந்தினி கூஞ்ஞ, 8ம் வட்டாரம், பேசாலை.
29. செபமாலை ஜெயநாயகி லெம்பேட் , தி. கு. க. மடம், நானாட்டான்.
30 அ. க. கீர்த்திக்கா, 41/1, புனித மரியாள் வீதி, திருகோணமலை
31. சகாயநாதன் பிறேமினி, தி. கு. க. மடம், நானாட்டான்.
32. A. யசோ, கொன்னையன் குடியிருப்பு, தாராபுரம், மன்னார்
33. றெ. அன்ரனிற்றா, தி. கு. க. மடம், நானாட்டான்.
34. கமலா கிறிஸ்தோப்பர், மடுமாதா வீதி, சின்னக்கடை, மன்னார்.
35. செ. மேரியஸ் அலன்ரீனா, வஞ்சியன் குளம், வங்காலை.
36. M. சுசீலா, முருங்கன் பிட்டி, முருங்கன்.
37. ச. பிரியங்கா, தி. கு. க. மடம், நானாட்டான்.
38. ப. ஒலின்ரா, திருக்குடும்பகன்னியர் மடம், நானாட்டான்.
39. திருமதி. இன்பராஜ் நளாயினி, வங்காலை 2.
40. குணசேகர றெபேக்காள், தரம் 11 தி. கு. க. மடம், நானாட்டான்.
41. A. ஜீவன், கல்வியற்கல்லூரி, பூந்தோட்டம், வவுனியா.
42. திருமதி. M. M. ஜோண்சன் பசில். 41/2, கோவில்வீதி, யாழ்ப்பாணம்.
43. பர்ணாந்து நிசாந்தினி, தரம் 8 தி. கு. க. மடம், நானாட்டான்.
44. றொ. டயானா கூஞ்ஞ, தரம் 8, J.R.S. வீட்டுத்திட்டம், தலைமன்னார்.
45. யோ.ஆன்பெனிற்றா, சென். யோசவ் லேன், சில்லாலை பண்டத்தரிப்பு.
46. சிந்தாத்துரை டிவ்போண் செறின், தி. கு. க. மடம், நானாட்டான்.
47. ஞா. சுபாஜினி, தி. கு. க. மடம், நானாட்டான்.
48. செ. டென்சியா, 8ம் வட்டாரம், பேசாலை.
49. சிறகுடைந்த இளஞ்சிட்டு, தோட்டவெளி, மன்னார்.
50. ச. ஆன் லக்ஷி, தி. கு. க. மடம், நானாட்டான்.

## விவிலியக் குறுக்கெழுத்துப்போட்டி 84 இற்கான சரியான விடைகள்

| | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| கு[1] | ர | லெ | மு | ப் | பி | ழி | லை | த | டு | வீ[2] |
| ன் | தி[3] | ற | னு | ம்[3] | ✵ | மொ | து | வு | பி[4] | ரி |
| று | ரு | ம் | கு | வா | உ[5] | று | த் | கை[6] | யை | த் |
| க | மு | ரே | தோ | த் | ன | ம[7] | றை | வா | க | து |
| ளை | ன் | வே | ய் | சே[8] | ✵ | றை | ம[9] | தி | ப் | பு[10] |
| ✵ | ன் | வ | ய | டி | கொ[11] | பொ | ✵ | த் | ஆ[12] | மு |
| ன | னி | ளை | க | ண் | க[13] | ரு | ணை | டு | று | தி |
| கா | றோ | நி[14] | றை | லா | ற் | ள் | து | ப | த | கி |
| க் | ற் | ற | பி[16] | தி | பா | இ[17] | த் | ளி | ல் | ங் |
| ணி | க[18] | ட | க் | க | றை | ட | எ[19] | கு | ✵ | ழ |
| ப[20] | ரி | ந் | து | ப[21] | ✵ | ம | கு | ங் | ழ | வ[22] |

விவிலியக் குறுக்கெழுத்துப்போட்டி இல.85ற்கான முடிவுகளை 2009ம் ஆண்டு ஜூலை மாத மன்னாவில் எதிர்பாருங்கள்.

# மன்னா

கத்தோலிக்க பத்திரிகைப் பணியும் நற்செய்திப்பணியே

## உங்கள் பங்கில் மன்னா பத்திரிகை விற்பனையை அதிகரியுங்கள்

அன்பான பங்குத்தந்தையரே, அருட்சகோதரிகளே, மேய்ப்புப்பணிச் சபை அங்கத்தினர்களே, பொதுநிலை பணியாளர்களே!

உங்கள் பங்கில் மன்னா பத்திரிகையின் விற்பனையை அதிகரிக்க முயற்சி எடுக்கும்படி மிகவும் அன்போடு கேட்டுக்கொள்கின்றோம்.

அன்பியப் பணியாளர்களே, உங்கள் அன்பியத்தில் மன்னா பத்திரிகை எடுக்காத குடும்பங்களை இனங்கண்டு அவர்களை சந்தித்து ஊக்கப்படுத்துங்கள். - பதிப்பாசிரியர்

## கற்கிடந்தகுளம் பங்கில் சற்பிரசாத வாசாப்பு நூல் வெளியீடு

கற்கிடந்த குளம் புனித சூசையப்பர் ஆலய மேய்ப்புப் பணிச்சபையினால் திரு. ச. யேசுதாசன் அவர்களின் முயற்சியில் கற்கிடந்தகுளம் பங்குத்தந்தை அருட்பணி. ச. மரியதாசன் அவர்களின் வழிகாட்டலில் ‘சற்பிரசாத வாசாப்பு - ஒரு வரலாற்றுப் பார்வை’ என்ற நூல் கடந்த மே மாதம் 01ம் திகதி வெளியிடப்பட்டது.

மூன்று இயல்களைக் கொண்ட இந்நூலில், இயல் ஒன்று சற்பிரசாத வாசாப்பு எழுதப்பட்டபோது இருந்த சூழல், அரங்கேற்ற முறைகள், எழுத்தில் இல்லாத நடைமுறைகள் போன்ற விடயங்களை உள்ளடக்கியுள்ளது. இயல் இரண்டு வாசாப்பு ஏட்டுடன் தொடர்புபட்டவர்கள், அரங்கேற்றத்தில் முக்கிய பங்காற்றியவர்கள் போன்றோரின் வாழ்க்கை விபரங்களைக் கொண்டுள்ளது. இயல் மூன்று சற்பிரசாத வாசாப்பு ஏட்டின் உள்ளடக்கத்தை உள்ளவாறே கொண்டுள்ளது.

“பழமைகளைக் களைந்து புதுமைகளை அணிந்துகொள்ளவே அதிகம் பழக்கப்பட்டு வரும் இன்றைய நவீன மனிதன் நாகரீகத்தில் மூழ்கி தனது பாரம்பரியங்களை இழந்து, பண்பாடுகளை மறந்து, வரலாறு அற்று முகவரி இல்லாதவனாக முகாரி பாடும் காலம்வரும் போது இந்தக் கிராமத்தவர்கள் மோகன ராகம் பாட இந்த முயற்சி சுருதியாய் அமையும் என்பது என் நம்பிக்கை” என இந்நூலாக்க முயற்சியில் ஈடுபட்டுழைத்த திரு. யேசுதாசன் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.




## மன்னா சந்தா விபரம்

உள்நாடு : ரூபா 700.00 (இலங்கை ரூபா)
வெளிநாடு : ரூபா 3000.00 (இலங்கை ரூபா)

சந்தாப்பணத்தை மன்னா பணியகத்தில் நேரடியாகவோ அல்லது காசுக்கட்டளை மூலமாகவோ அல்லது காசோலை மூலமாகவோ செலுத்தலாம்.

காசோலை மூலம் செலுத்துவதாயின்;
வங்கியின் பெயர் :

**Hatton National Bank Ltd.**
**(Mannar Branch)**

பணம் பெறுபவரின் பெயர்:The Editor - ‘MANNA’
வங்கிக் கணக்கு இலக்கம்:S/A No.02 -1678001-5

நீத்தார் நினைவு, பிறந்த நாள், திருமண யூபிலி போன்றவற்றைப் பிரசுரிப்பதற்கான

## கட்டண விபரம்

கறுப்பு, வெள்ளை நிறத்தில் - ரூபா 4000.00
பல நிறத்தில்: - ரூபா 7500.00

முக்கிய குறிப்பு:
உங்கள் விடயங்கள் எந்த மாதத்தில் பிரசுரிக்கப்படவேண்டும் என விரும்புகிறீர்களோ அந்த மாதத்திற்கு முதல் மாதம் 15ம் திகதிக்கு முன்னர் எமக்கு கிடைக்கக்கூடியதாக விடயங்களை அனுப்ப வேண்டும்.
- பதிப்பாசிரியர்

## நீங்காத நினைவுகள்

### 1ம் ஆண்டு நினைவு

மலர்வு: 04 - 12 - 1943
உதிர்வு: 27 - 05 - 2008



**அமரர் திரு. ஆரோக்கியம் அமலதாசன் கூஞ்சு**
8ம் வட்டாரம், பேசாலை

“நீதிமான்கள் உரிய காலத்திற்கு முன் இறந்தாலும் இளைப்பாற்றியடைவார்கள்” [சா.ஞா. 4:7]

உங்களுடைய ஆன்ம இளைப்பாற்றிற்காக இறைவனை என்றும் வேண்டுகின்றோம்.

இவரின் பிரிவால் துயருறும்:
பிள்ளைகள், உற்றார், உறவினர், நண்பர்கள்.

## நீங்காத நினைவுகள்

### 1ம் ஆண்டு நினைவு

மலர்வு: 17 - 07 - 1927
உதிர்வு: 12 - 06 - 2008



**அமரர் டெனிஸ் அந்தோனிப்பிள்ளை**
முருங்கன் பிட்டி, முருங்கன்.

“தூங்குகிறவனே விழித்தெழு இறந்தவனே உயிர்பெற்றெழு கிறிஸ்து உன்மீது ஒளிர்ந்தெழுவார்” [எபே5:14]

எம்மையெல்லாம் பாசமாய்
வளர்த்தெடுத்த பாச தீபங்களே!
ஐயா, அம்மா! உங்களுக்காக
இன்றும் கண்ணீர் வடிக்கின்றோம்.
இவ்வேளையில் இறந்துபோன மற்றும்
இரு சகோதரர்களையும் நினைக்கின்றோம்.

இவர்களுக்காக கனடா, பிரான்ஸ், கல்முனை, மட்டக்களப்பு, கொழும்பு ஆகிய இடங்களில் உள்ள ஆலயங்களில் இரங்கல் திருப்பலி ஒப்புக்கொடுக்கப் படும். முக்கியமாக முருங்கன் கிறிஸ்து அரசர் ஆலயத்தில் 12-06-2009 அன்று காலை 6.00 மணிக்கு இரங்கல் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்படும் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

ஆண்டவரது வாயில் இதுவே,
இதுவழியாய் நீதிமான்களே நுழைவர். (தி.பா118:20)

இவரின் பிரிவால் துயருறும்: பிள்ளைகள்

### 60ம் நாள் நினைவு

மலர்வு: 28 - 02 - 1945
உதிர்வு: 26 - 04 - 2009



**வர்ணகுலசிங்கம் ஆரோக்கியம் ஜேம்ஸ் (J. P)**
(11ம் கட்டை விவசாய அமைப்புத் தலைவர், உயிர்த்தராசன் குளம், முருங்கன்)

“உயிர்ப்பும் உயிரும் நானே என்னில் விசுவாசம் கொள்பவன் இறப்பிலும் வாழ்வான்”

உயிர்த்தராசன் குளத்தில் உயர்குடியில் பிறந்து
உவப்பான பல சமூகத் தொண்டுகள் செய்துவாழ
நலமான நல்வாழ்வை இறைவன் கொடுத்தார்.
கொடிய நோய்வடிவில் காலன் உங்களைக்
கவர்ந்து செல்ல முனைந்தானோ!
படுக்கையில் பலநாள் முடங்காது
எம்முடன் பேசிக்கொண்டு விடைபெற்றீரே!
எம் உறவுகளின் உற்சவங்களில் நீங்களோர் விருட்சம்
மக்களின் ஒன்றுகூடலில் நீங்களோர் நிறைகுடம்
இனி யார் இவ்விடத்தை ஈடுசெய்வார் என
ஏங்கி நிற்கின்றோம் தந்தையே!
உங்கள் ஆன்மா அமைதியில் இளைப்பாற
அனுதினமும் வேண்டுகின்றோம்.

*பிரிவால் துயருறும்: மனைவி, மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், உற்றார் உறவினர்கள்.*

### 1ம் ஆண்டு நினைவு

மலர்வு: 07 - 09 - 1953
உதிர்வு: 22 - 05 - 2008



**ஜோசப் போல் ஜூலியன்**
(Assistant Director of Fisheries and Aquatic Resources, Mannar)
(J. P. Whole Island)

“உயிர்ப்பும் உயிரும் நானே என்னில் விசுவாசம் கொள்பவன் இறப்பிலும் வாழ்வான்”

அப்பா...! ஒரு வார்த்தைகூட சொல்லவில்லை
எம்மைவிட்டுச் சென்றுவிட்டீர்கள்!
ஆண்டு ஒன்றும் உருண்டோடி விட்டது...
ஆனாலும் அப்பா... எம் கண்கள்
கண்ணீர் முத்துக்களுடன்...!
உங்கள் நினைவுகளைச் சுமக்கும்
எங்கள் கருகிய மனங்கள்...
ஏங்கிக் கிடக்கின்றன... அப்பா
உங்கள் வருகைக்காக!

*இவரின் பிரிவால் துயருறும்: பாசமிகு மனைவி, பாசமிகு பிள்ளைகள், சகோதரர்கள், உற்றார் , உறவினர்கள்.*

தகவல்: பி. ஜூலியன் ராஜ்குமார் (மகன்)
T. P. No. 0716118829/ 0779792992

இப்பத்திரிகை மன்னாரில் உள்ள மன்னா அலுவலகத்தில் வடிவமைக்கப்பட்டு, கொழும்பு 14, பிறின்ஸ் ஒப் வேல்ஸ் அவனியூ, 784ஷி1 இலக்கத்திலுள்ள கிறேஸ் என்ரபிறைசஸ் அச்சகத்தில் அச்சிடப்பட்டு பதிப்பாசிரியரால் வெளியிடப்பட்டது